விலை ரூபா 25.00

மோகனுக்கு கொலை மிரட்டல்

பக்கம் 8

புற்றுநோய் முற்றியது

பக்கம் 09

வெற்றிகரமாக பொருத்திச் சாதனை

பக்கம் 17

பிரேசில் அதிர்ச்சித் தோல்வி

பக்கம் 23

www.onlineuthayan.com

பக்கங்கள் : 34

# உதயன்

சுடர் 27
கதிர் 193

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 24 புதன்கிழமை (06/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## எரிபொருள் விலை குறைப்புக் குறித்து ஆராயப்படும்

கொழும்பு, ஜூன் 6

உலக சந்தையில் எரிபொருள் விலை தொடர்ந்து குறையுமானால், இலங்கையிலும் எரிபொருள் விலை குறித்து 04↘

# மஹிந்தவை எதிர்த்து பொன்சேகா ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு

## தனக்கு எதிரான உரிமை மீறல்கள் குறித்து முறையிட அதிரடி நடவடிக்கை



கொழும்பு, ஜூன் 6

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் விடுதலையாகியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இலங்கையில் தனக்கு ஏற்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றார் என நம்பகமாக அறிய முடிகின்றது.

இதற்கான ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகளில் பொன்சேகா ஈடுபட்டுள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் எதுவித காரணங்களுமின்றித் தம்மைக் கைது செய்தமை, எந்தவிதமான அடிப்படைக் குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படாமை என்பவற்றை நோக்கும்போது தமது கைது 04↘

## தமிழருக்கு உரிமைகளை வழங்குவதே ஒரே தீர்வு

### அடித்துக் கூறுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 6

தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு ஒருபோதும் தீர்வாகாது. இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின், தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளை அரசு அவர்களுக்கு வழங்கவேண்டும். அத்துடன், நாட்டில் ஜனநாயகத்தையும் அரசு நிலைநாட்டவேண்டும் என ஜே.வி.பி. தெரிவித்தது.

தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைத்திட்டம் ஒன்றை நாம் தயாரித்து வருகின்றோம். அதுவே இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் எமது நிலைப்பாடாகும். இதைத் தவிர்த்து அரசினால் அமைக்கப்படும் தெரிவுக்குழுவில் நாம் ஒருபோதும் பங்கேற்கமாட்டோம். அது காலத்தை வீணடிக்கும் செயல் என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். 04↘

## சனல் - 4 ஊடகவியலாளரை திருப்பியனுப்பியது இலங்கை



கொழும்பு, ஜூன் 6

பிரிட்டனைத் தளமாகக் கொண்ட சனல் - 4 தொலைக்காட்சி சேவையின் ஆசிரியரும் தொகுப்பாளருமான சிராணி சபாரட்ணம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையை வந்தடைந்தபோது, அவர் இலங்கை சட்ட அமுலாக்க அதிகாரிகளினால் விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு மீண்டும் பிரிட்டனுக்கு நாடு கடத்தப்பட்டதாகத் 04↘

## பிரிட்டன் பயண நேரத்தை இறுதியில் மாற்றிய மஹிந்த

லண்டன், ஜூன் 6

லண்டன், ஹீத்ரோ விமான நிலையத்தில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க புலம்பெயர் தமிழர்கள் ஒன்று கூடுவதை அறிந்து, அவரது பயணம் இறுதி நேரத்தில் மாற்றியமைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக மகிந்த ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.05 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வழக்கமாகப் புறப்படும் யுஎல்-503 விமானம் மூலம் லண்டனுக்குப் பயணிக்கவிருந்தார். இந்த விமானம் நேற்று ஞாயிறு இரவு லண்டனை வந்தடையலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதால், அவருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக தமிழர்கள் ஹீத்ரோ விமான நிலையத்தில் ஒன்று கூடியிருந்தனர்.

ஹீத்ரோ விமான நிலையத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கத் தமிழர்கள் தயாராவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அந்தப் பயணத்திட்டம் 04↘

## செயற்றிட்டங்கள் எதையுமே நாம் அமெரிக்காவிடம் வழங்கவில்லை

### அடித்துக் கூறுகிறார் அமைச்சர் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஜூன் 6

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசின் செயற்றிட்டம் எதுவும் அண்மையில் வொஷிங்டனுக்கு பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸால் அமெரிக்க அரசிடம் கையளிக்கப்படவில்லை என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்காவினால் நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையில் நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து ஆணைக்குழுவின் சில சிபாரிசுகளை நடை



முறைப்படுத்தும் அணுகுமுறை குறித்து மட்டுமே அமெரிக்க 04↘

## பிள்ளையாரை அகற்றி புத்தரை அமர்த்துவதா?

### கோத்தபாயவுக்கு இந்துமா மன்றம் கடிதம்

கொழும்பு, ஜூன் 6

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் 20 ஏக்கர் காணியை ஆக்கிரமித்து அங்கு இருந்த பிள்ளையார் கோயிலை அகற்றி புத்தர் பெருமானின் சிலையை அரச படைகள் நிறுவி வருகின்றன என தமிழ் நாளேடு ஒன்றில் பிரசுரமாயிருக்கும் செய்தியைக் கண்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும் அடைந்தோம். எனவே, இதைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது இந்து மாமன்றம்.

மாமன்றத்தின் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நாளேட்டுச் செய்தியின்படி 15 04↘

## அதிகாரிகள் பாராமுகம் கவலையில் கைதிகள்

### தொடர்கிறது உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூன் 6

மகஸின் சிறையில் நேற்று முதல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள 53 தமிழ் அரசியல் கைதிகளைப் பார்ப்பதற்கு, அதிகாரம் மிக்க எந்த சிறைச்சாலை அதிகாரியும் இதுவரையில் முன்வராததையிட்டு அவர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

விடுதலை செய்யப்படும் வரையில் தமது பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் மன்றாடி நிற்கின்றனர் என சிறைச்சாலை வட்டாரங்களிலிருந்து வெளியாகியுள்ள தகவல்களின் மூலம் அறியமுடிகின்றது.

★ மகஸின் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதி [illegible] கையை நிறுத்த 04↘

## நரக வேதனையில் இருந்து விடுபடவே ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்தோம்

### கேரளாவில் சிக்கிய ஈழத்தமிழர்களின் கண்ணீர்க் கதை



கொழும்பு, ஜூன் 6

''நரக வாழ்விலிருந்து விடுபட்டு, சுதந்திரமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் வாழ வேண்டுமென்பதே எமது நோக்கம். அதற்காகவே எங்கள் உடைமைகள் எல்லாவற்றையும் விற்றுத் தீர்த்த பணத்தைக் கொண்டு ஆஸி. செல்ல முற்பட்டோம்.''

- இவ்வாறு கேரளாவில் கைதான வவுனியாவைச் சேர்ந்த 04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குவைத்துக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் குவைத்திலுள்ள அரசியல் மற்றும் தொண்டர் நிறுவன பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.
குவைத் நிதியப் பணிப்பாளர், குவைத் முதலீட்டு சபைத் தலைவர், குவைத் வீடமைப்பு நிதிய பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட பலரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.(த)

# உள்ளக நீதி விசாரணைகள் இலங்கையில் செயலிழப்பு

### சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

லண்டன், ஜூன் 6
இலங்கையில் உள்ளக நீதி விசாரணைகள் செயலிழந்துள்ளதாலேயே, சர்வதேச விசாரணைகள் தொடர்பில் கோரிக்கை விடுக்கப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விவகாரங்களில் இலங்கை அரசு எந்த வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாத நிலையிலேயே, அந்த நாட்டின் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணையை கோருவதற்கான முக்கிய காரணியாக இருக்கிறது என சர்வதேச மன்னிப்பு சபையின் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆய்வாளர் யூலண்டா பொஸ்டர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விசாரணை தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் கோரிக்கை விடுவதற்கு இதுவே காரணம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை. குற்றங்கள் தொடர்பான நீதி முறையும் சீரற்றுள்ளது. போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அது நடைபெறவில்லை.

போரின் போது என்ன நடந்தது என்பதை அறிய வேண்டியதே முக்கியமானது. இலங்கையில் நீதியை நிலைநாட்டுவதை விட்டுவிட்டு இலங்கை அரசு குறுக்கு வழிகளில் செயற்படுகிறது. (த)

# கைதிகள் பரிமாற்றம் குறித்து 4 நாடுகளுடன் உடன்படிக்கை

கொழும்பு,ஜூன் 6
கைதிகள் பரிமாற்றம் குறித்து இலங்கை நான்கு நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

உடன்படிக்கையை செயற்படுத்தும் வகையில் 22 கைதிகள் அவர்களது சொந்த நாடான பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், இந்தியா, மாலைதீவு மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் கைதிகள் பரிமாற்றம் குறித்து இலங்கை புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

''இதன் முதல் ஆரம்பமாக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 22 கைதிகள் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். அவர்கள் படிப்படியாக அனுப்பி வைக்கப்படுவர். அதற்கான ஆவணங்கள் தயாராகின்றன''. என அமைச்சர் தெரிவித்துள்ளார். (த)

# பரிந்துரைகளை செயற்படுத்துங்கள்

### திஸ்ஸ விதாரணவும் கோருகிறார்

கொழும்பு,ஜூன் 6
சர்வதேச சமூகத்தை திருப்திபடுத்துவதற்காகவன்றி மக்களின் நலன்களைக் கருதி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சி தெரிவித்துள்ளது. அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் நடைமுறைப்படுத்தக் கூடியவற்றை விரைவாக நடைமுறைப்படுத்துமாறும் அரசுக்கு இந்தக் கட்சி ஆலோசனை வழங்கியுள்ளது.

> இலங்கையில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாகவும், தமது அனைத்து விதமான உரிமைகளையும் பெறும் வகையில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான ஆலோசனைகளை வழங்குமாறு தனது பங்காளிக் கட்சிகளிடம் இலங்கை அரசு கேட்டிருந்தது. இதற்கமைய லங்கா சமசமாஜ கட்சியின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவரும், அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் நடைமுறைப்படுத்தக் கூடியவற்றை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

நல்லிணக்க ஆணைக்குழு பல்வேறு விதமான யோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளது.

இலங்கையில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகவும், தமது அனைத்து விதமான உரிமைகளையும் பெறும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது எமது கடமை யாகும். அதனாலேயே நல் லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக

நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்- என்றார். (த)

### தெரிவுக்குழு விவகாரம் தொடர்பான

# ஐ.தே.க. - கூட்டமைப்பு முக்கிய பேச்சு விரைவில்

நாடாளுமன்றத் தெரிவுக் குழு விவகாரம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் முக்கியமான - தீர்க்கமான பேச்சொன்று விரைவில் நடைபெறவுள்ளது என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

நியூஸிலாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியவுடன் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்றும் அறியமுடிகின்றது.

கட்சித் தலைவர் இன்று நாடு திரும்புவதால், நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் இந்த வாரத்துக்குள் கூட்டமைப்புடன் அவர் பேச்சு நடத்துவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகளவு உள்ளன என ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, இன்று நாடு திரும்பிய கையோடு தனது கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களைச் சந்தித்து முக்கிய கலந்துரையாடலொன்றிலும் ரணில் ஈடுபடுவார் எனத் தெரியவருகின்றது.

கூட்டமைப்புக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் நடைபெறும் இருதரப்புப் பேச்சுகளையடுத்து, இரு தரப்புகளும் இணைந்து அரசுக்கு முக்கிய அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை இடம்பெற வைப்பதற்கு ரணில் வகித்துவரும் மத்தியஸ்த நடவடிக்கையின் ஒரு பாகமே இந்தச் சந்திப்பு எனக் கூறப்பட்டாலும், வழமைக்கு மாறாக இந்தச் சந்திப்பில் முக்கிய பல விடயங்கள் அலசி ஆராயப்படவுள்ளன என்று ஐ.தே.கவின் மற்றுமொரு முக்கிய உறுப்பினர் தெரிவித்தார்.

அத்துடன், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நடவடிக்கைகள் குறித்து புரிந்துணர்வின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் பேச்சுகளை முன்னெடுக்கும் என்றும் அந்த உறுப்பினர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அங்கம் வகிக்குமாறும், இதர கட்சிகளை அழைத்து வருமாறும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இது விடயம் குறித்து ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகைக்கு அழைத்து ஜனாதிபதி நேரடிப் பேச்சில் ஈடுபட்டார். இதில் ஐ.தே.கவின் உயர்மட்ட உறுப்பினர்களும், அரச தரப்பின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போதே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை இயங்க வைப்பதற்கு எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு அவசியம் என ஜனாதிபதி குறிப்பிட்டதுடன், இது விடயத்தில் ரணிலை மத்தியஸ்தம் வகிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

தமது தரப்புக் கோரிக்கைகளை ஏற்று அவற்றை அரசு ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்குமானால் ஐ.தே.க. தெரிவுக்குழுவில் பிரசன்னமாகும் என்றும், எதிர்க்கட்சிகள் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் வகையிலான சூழலை அரசு உருவாக்க வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் கோரிக்கைக்கு பதிலுரைத்தார்.

அதுமட்டுமின்றி, தெரிவுக்குழுவில் கூட்டமைப்பை இடம்பெறவைக்கும் நோக்கில் கூட்டமைப்புடன் அவர் பேச்சுகளை ஆரம்பித்தார்.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பேச்சுகளின் இரண்டாம் பாகமே விரைவில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## வாகன ஏற்றுமதி – இறக்குமதி அம்பாந்தோட்டையில் இன்று

கொழும்பு, ஜூன் 6
அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் வாகன இறக்குமதி- மீள் ஏற்றுமதி- பராமரிப்பு பணிகள் இன்று புதன் கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

ஜப்பான் நாட்டில் இருந்து 15 வாகனங்கள் இத்துறைமுகத்தை நேற்று வந்தடைந்தன. சென்னை துறைமுகத்தில் இருந்து ஒரு கப்பல் இன்று 1000 வாகனங்களுடன் இங்கு வருகிறது. இந்த வாகனங்கள் அல்ஜீரியாவுக்கு மீள் ஏற்றுமதியாகும்.

இத்தகைய கப்பல்துறை சார் நடவடிக்கைகள் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக பலராலும் தெரிவிக்கப்படும் தவறான பிரசாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இருக்கும் என துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது. (த)

## மாநகர சபை ஆணையாளராக பிரணவநாதன் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்6
யாழ்.மாநகர சபை ஆணையாளராக நேற்று செவ்வாய்க்கிழமை முதல் எஸ்.பிரணவநாதன் பதவி ஏற்றுள்ளார்.

யாழ்.மாநகர சபை ஆணையாளராக இருந்த மு.செ.சரவணபவ ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இருந்த எஸ்.பிரணவநாதன் நேற்று முதல் யாழ்.மாநகரசபை ஆணையாளராகப் பதவி ஏற்றுள்ளார். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரா [illegible] மாகாண [illegible] ளராகக் கடமையாற்றி வந்தவர் ஆவார். (ஏ-ரி.13)

## பிரகீத் எக்னெலிகொட எங்கே? கடவுளுக்குத்தான் தெரியும்

### நீதிமன்றில் மொஹான் பீரிஸ்

கொழும்பு, ஜூன் 6
காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட எங்கிருக்கிறார் என தனக்குத் தெரியாது எனவும் அவர் எங்கிருக்கிறார் என்பதை கடவுள் மாத்திரமே அறிவார் எனவும் முன்னாள் சட்டமா அதிபரான மொஹன் பீரிஸ் ஹோகம நீதிவான் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் எக்னெலிகொட வெளிநாட்டில் உயிருடன் உள்ளார் என ஐ.நா. மாநாடொன்றில் உரையாற்றும்போது மொஹான் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து இந்த விடயம் குறித்து வாக்கு மூலம் அளிக்குமாறு







மொஹான் பீரிஸுக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிறுத்தப்பட்ட மிதிவெடி அகற்றும் பணிகள் மீண்டும்

## இடைக்காடு, வளலாய் பகுதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன் 6

*வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட வளலாய், இடைக்காடு கிராம சேவையாளர் பிரிவுகளில் டனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகள் இந்த நிறுவனத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது இந்த நிலையில் இடைநிறுத்தப்பட்ட அந்தப் பணிகள் அடுத்த வாரமளவில் மீண்டும் வேறு நிறுவனத்தின் மூலம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,*

வலி.கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வளலாய், இடைக்காடு கிராம சேவையாளர் பிரிவுகளில் கடந்த வருடம் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது குறித்த பகுதிகளில் மிதிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் வழங்கப்படாதமையால் மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இதன் பின்னர் குறித்த பகுதிகளில் டனிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவு கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டது. டனிஸ் கண்ணி வெடி அகற்றும் நிறுவனம் இந்த மாத ஆரம்பத்தில் தனது பணிகளை யாழ்.மாவட்டத்திலிருந்து இடைநிறுத்திக் கொண்டு வெளியேறியது.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தற்காலிகமாக தடைப்பட்டிருந்தன. இந்த நிலையில் , முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த இராணுவ மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்தவர்கள் உடனடியாக வளலாய் இடைக்காடு பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதே போன்று ஹலோ ட்ரஸ்ட்'' நிறுவனம் இயந்திரங்கள் மூலமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

மக்கள் மீளக்குடியமரவுள்ள முக்கியமான பகுதிகளை இனங்கண்டு அந்தப் பகுதிகளிலேயே முன்னுரிமை அடிப்படையில் கண்ணிவெடி அகற்றப்படும்-என்றார். (த-5)

## காணாமல்போன மாணவன் 15 நாள்களின் பின் வந்தான்

யாழ்ப்பாணம்,ஜூன் 6

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்த மாணவன் 15 நாள்களின் பின்னர் திரும்பியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெருடாவில் இந்து தமிழ் மகாவித்தியாலயத்தில் தரம் -10 இல் கல்வி பயிலும் யோகேஸ்வரக் குருக்கள் செந்தூரன் (வயது-15 ) என்ற மாணவனே தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்வதாக கூறி நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அவர் வீட்டிலிருந்து புறப்பட்ட பின்னர் மீண்டும் திரும்பவில்லை என்று, உறவினர்களால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலும், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையிலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 15 நாள்களின் பின்னர் குறித்த மாணவன் வீட்டுக்கு வந்து சேர்ந்துள்ளதாக பெற்றோர்களால் மனித உரிமை ஆணைக் குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த மாணவன் தானாக வீட்டில் இருந்து சென்றாரா அல்லது யாராவது கடத்தி சென்றார்களா என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (த-5)

## கிராம அலுவலர்களுக்கு உள்ளக இடமாற்றம்

வடமராட்சி, ஜூன் 6

ஐந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 15 கிராம சேவையாளர்களும், மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் 2 கிராமசேவையாளர்களும் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பருத்தித்துறை பிரதேச செயலர்பிரிவில் மொத்தமாகவுள்ள 35 கிராம சேவையாளர் பிரிவில் 12 கிராம சேவையாளர் பதவிகளுக்கும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மொத்தமாகவுள்ள 18 கிராமசேவையாளர் பிரிவுகளில் 10 கிராம சேவையாளர் பதவிகளுக்கும் வெற்றிடங்கள் உண்டு.

இரு பிரிவுகளிலும் வெற்றிடங்களாக் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு, அருகில் உள்ள பிரிவுகளில் பணியாற்றும் கிராம சேவையாளர்கள் பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். (த-8)

மருதங்கேணி மக்களுக்கு

## வாரத்தில் ஒரு நாளாவது ஆயுள்வேத வைத்தியம்

வடமராட்சி, ஜூன் 6

மருதங்கேணிப் பிரதேசத்தில் ஆயுள்வேத வைத்தியசாலையை வாரத்தில் ஒரு நாளாவது இயங்கச் செய்து மீளக் குடியேறிய அந்தப் பிரதேச மக்களுக்கு வைத்திய சேவையை வழங்க பருத்தித்துறைப் பிரதேச சபை முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

> மருதங்கேணிப் பிரதேசம் ஒரு மீள்குடியேற்றப் பிரதேசம் அங்கு போதிய மருத்துவ வசதிகள் இல்லை

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற போது சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மருதங்கேணிப் பிரதேசம் ஒரு மீள்குடியேற்றப் பிரதேசம் அங்கு போதிய மருத்துவ வசதிகள் இல்லை. எனவே அந்த மக்களுக்கு ஆயுள்வேத வைத்திய சேவையை வாரத்தில் ஒரு நாளைக்காவது வழங்க வேண்டும். இது தொடர்பாக ஏற்கனவே பல தடவைகள் இந்தச் சபையில் கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனால் இன்றுவரை ஒவ்வொரு காரணங்கள் சொல்லப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கான ஆயுள்வேத மருந்துகள் பெறுவதற்கான வழிவகைகள் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகையால் இனிமேலும் தாமதிக்காது அந்தப்பிரதேச மக்களுக்கு வாரத்தில் ஒரு நாளைக்காவது ஆயுள்வேதவைத்தியசேவையை ஆரம்பித்து வைத்திய வசதிகளை வழங்க வேண்டும் என தனது கோரிக்கையில் அவர் தெரிவித்தார். (த-8)

## தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு

கொழும்புத்துறை ,ஜூன் 6

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதிப் பகுதியில் 100 மீற்றர் உயரமுள்ள தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரம் அமைக்க எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மக்கள் கையொப்பமிட்ட மகஜர்கள் யாழ். மாநகரசபை,குறிப்பிட்ட தொலைத்தொடர்பு நிறுவனம்,யாழ்.ஆயர் இல்லம் என்பவற்றிற்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

மக்கள் செறிந்து வாழும் பகுதியில் பெரிய தொலைத்தொடர்பு கோபுரம் அமைவதனால் உண்டாகும் கதிரலைகளால் ஏற்படும் பாதகங்களைக் குறிப்பிட்டு விழிப்புணர்வு பிரசுரங்கள் அப்பகுதி பொது அமைப்புக்களால் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் இப்பகுதியில் உள்ள ஆலய வளாகத்தில் கோபுரம் அமையவுள்ளதால் ஆலயத்தின் தனித்துவமும் புனிதத்தன்மையும் கேள்விக்குறியாகி விடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-135)

நிகழ்வுகள்

## இன்று

### தேசிய நாட்டிய நாடக விழா

அரச தேசிய நாட்டிய நாடக விழாவும் ஆற்றுகையாளர் கௌரவிப்பும் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திருமதி கே.பகீரதி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாகீர்த்தி ஹமதி சாந்தினி சிவநேசனும் கௌரவ விருந்தினராக செல்வி அ.கந்தையாவும் கலந்துகொள்வர். (வ)

## யாழ்ப்பாணத்தில் சில்லறை தட்டுப்பாடு

வடமராட்சி, ஜூன் 6

*யாழ்.குடாநாட்டில் பத்து ரூபா தாள் உள்ளிட்ட சில்லறை நாணயங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பத்து ரூபா தாளுடன் சில்லறை நாணயங்களான 10,5,2,1 ரூபா நாணயங்களுக்கும் பற்றாக்குறை இருப்பதால் பொதுமக்களும் வியாபாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.*

*பொருள்களை வாங்கும் நுகர்வோர் மிகுதி நாணயங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இனிப்பு வகைகள், தீப்பெட்டி போன்றவற்றையே நாணயங்களுக்குப் பதிலாக வியாபாரிகளிடமிருந்து பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.*

*இதே போல இ.போ.ச , மினிபஸ்களில் பயணம் செய்வோர் மிகுதிப் பணத்தைப் பெறமுடியாத நிலையில் அவற்றை இழந்தே செல்ல வேண்டியுள்ளது. குடாநாட்டில் பல வங்கிகள் இயங்கி வருகின்ற போதிலும் இந்த சில்லறைத் தட்டுப்பாடு குறித்து பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-8)*

## 'இம்சை அரசன்' போய்விட வந்து குதித்தான் 'சம்பத்'

### அனலைதீவு மக்கள் திணறல்

யாழ்ப்பாணம், ஜூன் 6

அனலைதீவு 3ஆம் வட்டாரப் பகுதியில் கடற்படைப் புலனாய்வாளர் என்று கூறிக் கொண்டு உலவும் சம்பத் என்ற நபரால் அந்தப் பகுதி மக்கள் பெரும் தொல்லைகளுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதமும் இதே போன்று இந்தப் பகுதியில் கடற்படைப் புலனாய்வாளர் என்று கூறித் திரிந்த நபரால் (இம்சை அரசனால்) பொது மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். இது கடற்படை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் வேறிடத்துக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட, கடற்படைப் புலனாய்வாளர் என்று கூறிக் கொள்ளும் சம்பத் என்ற நபரால் பொது மக்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அனலைதீவு 3 ஆம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில், குறித்த கடற்படைப் புலனாய்வாளர் என்று சொல்லும் நபர் அந்தப் பகுதியிலுள்ள வீடொன்றின் கதவைத் தட்டியுள்ளார்.

வீட்டுக்காரர்கள் வீட்டினுள் இருந்தவாறே என்ன விடயம் என்று கேட்க, இந்தப் பாதையால் போக முடியுமா? என்று கேட்டுள்ளார். அத்துடன் வீட்டிலுள்ளவர்களின் விவரங்களையும் கேட்டறிந்து சென்றுள்ளார். குறித்த நபர் அந்தப் பாதையால் வழமையாகச் சென்று வருபவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரவு 11.30 மணியளவில் ஆள்கள் வசிக்கும் வீடொன்றினுள் சென்று அங்கு நீண்ட நேரமாக நின்ற பின்னர் திரும்பிச் சென்றுள்ளார்.

குறித்த நபரின் செயற்பாடுகள் தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் கிராம சேவையாளருக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து இந்த விடயம் ஊர்காவற்றுறை பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (த-5-251)

## தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூவர் கைது

வலி.வடக்கு, ஜூன் 6

கோண்டாவில் பகுதியில் வைத்து ஸ்ரீரெலோ அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் எஸ்.செந்தூரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று பேரைக் கோப்பாய் பொலிஸார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

மரணச் சடங்கு ஒன்றுக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டு இருந்த செந்தூரன் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வரினால் தாக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த நிலையில் சந்தேகத்தின் பேரில் கோப்பாய் பொலிஸார் நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவரையும் கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த இருவரையும் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-86)

## வரலாற்று ஆவணக் காப்பகம் வல்வெட்டித்துறையில் திறப்பு

வடமராட்சி, ஜூன் 6

வல்வெட்டித்துறை வரலாற்று ஆவணக்காப்பகம், ஊரிக்காடு கீதாஞ்சலி இல்லத்தில் பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் செல்வி எஸ்.செல்வசுகுணாவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் ஆன்மிகம், பாரம்பரியம், கலை, பண்பாடு, கப்பல் ஓட்டிய வரலாறு, வல்லை அறிஞர்களின் வரலாறு, வல்வெட்டித்துறை தொடர்பான இலக்கியங்கள், வல்வெட்டித்துறை எழுத்தாளர்களின் நூல்கள், பாரம்பரியமாகப் பயன்படுத்திய பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டதாக இந்த வல்வை ஆவணக் காப்பகம் அமைந்துள்ளது.

> கனடாவில் கடந்த 15 வருடங்களாக நகுலசிகாமணி தம்பதியினரால் சேகரித்து வந்த வல்வையின் வரலாற்றுப் பொக்கிசங்கள்

கனடாவில் கடந்த 15 வருடங்களாக நகுலசிகாமணி தம்பதியினரால் சேகரித்து வந்த வல்வையின் வரலாற்றுப் பொக்கிசங்கள் மக்களின் பாவனைக்காக நிரந்தரமாக கையளிக்கும் நிகழ்வு வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற போதே கலாசார உத்தியோகத்தரால் ஆவணக் காப்பகம் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த மே மாதம் 7 ஆம் [illegible] அமெரிக்கமிசன் பாடசாலையில் சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்ற வரலாற்று ஆவணக் கண்காட்சியில் வைக்கப்பட்ட பொருள்களுக்கு மேலதிகமாக மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் நிரந்தரப் பயன்பாட்டுக்காக இன்று 6 ஆம் திகதி புதன்கிழமை முதல் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இந்த ஆவணக் காப்பகம் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு உரிமைகளை வழங்குவதே ஒரே தீர்வு

01↘ தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்துக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது ஒருபோதும் தீர்வாகாது. மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது. இது சாத்தியமற்ற ஒரு விடயமாகும். அத்துடன், அதிகாரப்பகிர்வு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஆகாது. இது மேலும் சில பிரச்சினைகள் உருவாகுவதற்கே வலுச் சேர்க்கும்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் அரசால் அமைக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு பொய்யானது - காலங்கடத்துவதுமாகும். தெரிவுக்குழு மூலம் அரசு தமது நயவஞ்சகப் போக்கையே கையாளத் துடிக்கின்றது. இதற்கு நாம் ஒருபோதும் இணங்கமாட்டோம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நாம் யோசனைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகின்றோம். அதை இன்னும் சில நாள்களில் நாட்டில் பகிரங்கப்படுத்துவோம். அத்துடன், அரசிடமும் சமர்ப்பிப்போம். அரசு அதை ஏற்கின்றதோ இல்லையோ என்பது குறித்து எமக்குப் பிரச்சினை இல்லை.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரம் குறித்த எமது நிலைப்பாட்டையே இந்த யோசனைத்திட்டத்தின் மூலம் நாம் முன்வைக்கின்றோம். இந்த யோசனைத் திட்டம் மிகவும் சிறந்ததாகும். இதனை அரசு ஏற்காவிடின், இத்திட்டம் குறித்து மக்களைத் தெளிவுபடுத்தி அவர்களின் ஆதரவைப் பெறுவோம். இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நாம் ஏற்கனவே பல அறிக்கைகளை அரசிடம் சமர்ப்பித்திருந்தோம். அரசு அவற்றைக் கருத்திற்கொள்ளவில்லை. இந்த அறிக்கையையும் நாம் அரசிடம் சமர்ப்பிப்போம். அரசு இதை ஏற்பது குறித்து எமக்குக் கவலையில்லை. மக்கள் மத்தியில் எமது அறிக்கைக்கு ஆதரவு கிடைக்கவேண்டும். அதுவே எமக்கு கிடைக்கும் வெற்றி - என்றார்.

# செயற்றிட்டங்கள் எதையுமே நாம் அமெரிக்காவிடம் வழங்கவில்லை

01↘ அரசு குறிப்பிட்டதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமெரிக்க அரசிடம் இரகசிய செயற்றிட்ட அறிக்கை யொன்றை இலங்கை அரசு சமர்ப்பித்துள்ளதாக அனுர குமார குற்றம் சாட்டியி ருந்தார்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனிடம் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சரால் சமர்பித்த செயற்றிட்ட அறிக்கை நாட்டு மக்களுக்கும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என அவர் அரசைக் கோரியிருந்தார்.

அத்தகையதொரு செயற்றிட்டம் எதுவும் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனுடனான சந்திப்பின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது ஹிலாரி கிளின்ரனின் பேச்சாளர் கூட இது குறித்து எதுவும் குறிப்பிட்டிருக்கவில்லை எனவும் அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கடந்த மாதம் இடம்பெற்ற வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் ஹிலாரி கிளின்ரனுக்கும் இடையேயான சந்திப்பின் பின்னர் இடம்பெற்ற கூட்டத்தில் வைத்து அமெரிக்க ராஜாங்கத் திணைகளப் பேச்சாளர் விக்டோறியா நூலண்ட்,

''45 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகக் கடும் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் அதனை மேலும் பிரசித்தப்படுத்தவும் இலங்கையர்களுக்கும் இலங்கைக்கு வெளியே இருப்போருக்கும் பயன்தரக் கூடியதாக ஆக்கவும் அரசு மேலதிக முயற்சிகளை மேற்கொள்ள விருப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.'' எனத் தெரிவித்திருந்தார். (த)

# சனல் - 4 ஊடகவியலாளரை திருப்பியனுப்பியது இலங்கை

01↘ தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் எனக் கூறிய அந்த வட்டாரங்கள், பிரிட்டனிலிருந்து டுபாய் ஊடாகப் பிரிட்டன் கணவருடன் இவர் இலங்கைக்கு வந்ததாகவும் கூறியுள்ளன. இவரின் பெயர் கறுப்புப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த நிலையில் இவர் தடுத்துவைக்கப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

இலங்கையின் வடபகுதிக்கு யுத்த காலத்திலும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் வெவ்வேறு கடவுச்சீட்டுக்களில் இவர்கள் இருவரும் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டதாகப் புலனாய்வாளர்களின் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

அரசைக் கடுமையாக விமர்சிக்கும் மற்றுமொரு ஆவணப் படத்தைத் தயாரிப்பதற்காகவே கணவனும் மனைவியும் இலங்கைக்கு வந்ததாக அதிகாரிகள் நம்புகின்றனர்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் பிறந்த இவர் சனல் - 4 பணிப்பாளர்களில் ஒருவரான ஸ்ருவார்ட் கொஸ்குறோவை திருமணம் செய்துள்ளார். இலங்கைக்கு எதிராகப் புலம்பெயர்ந்தோர் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் இவர் பிரதான பங்கேற்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பில் உள்ள ஆடம்பர ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளதாகக் கூறப்படும் சிராணி சபாரட்ணத்தின் கணவரான ஸ்ருவார்ட் கொஸ்குறோவைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (த)

# எரிபொருள் விலை குறைப்புக் குறித்து ஆராயப்படும்

01↘ கவனத்தில் கொள்ளப்படும் என பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார். உலக சந்தையில் தற்போது எரிபொருள் விலை குறைவாக உள்ளதால் இலங்கையிலும் எரிபொருள் விலை குறைக்கப்படுமா என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

''தொடர்ந்து சில காலத்திற்கு இந்த நிலைமை தொடருமானால் நாம் இது குறித்து கவனத்திற்கொள்வோம்'' என அவர் கூறினார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் பல்வேறு அரச நிறுவனங்கள் செலுத்த வேண்டிய 65 பில்லியன் ரூபாவை கூட்டுத்தாபனத்துக்கு வழங்வது குறித்து திறைசேரி ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (த)

# பிள்ளையாரை அகற்றி புத்தரை அமர்த்துவதா?

01↘ குடும்பங்கள் குறித்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். 1983 இல் அன்றைய அரசின் ஆட்சியில் நடந்த கொடூரமான இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட மலையக மக்களும் இதில் அடங்குவர் என அறிகிறோம்.

எனவே, இதுதொடர்பில் உடன் விசாரணை நடத்தி இந்தத் தவறான, சட்டவிரோதமான நடவடிக்கையை நிறுத்துமாறு தங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஜனாதிபதிக்கோ தங்களுக்கோ தெரியாமல் தவறுதலாக வழிநடத்தப்படும் சில சக்திகள் இந்த சட்டமீறல் நடவடிக்கையைத் தொடங்கியிருக்க வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசின் கொள்கைகளுக்கு ஒவ்வாத செயல் இது என்று சொல்லத் தேவையில்லை. எந்த அரச அலுவலரும் சமய விரோதத்தை ஏற்படுத்தி பௌத்த சமயத்தைப் பரப்புவது அரசின் கடமையென எண்ணவே கூடாது.

பாதுகாப்பு வலயங்களிலும் படைகளின் கட்டுப்பாட்டிலும் இருக்கும் (குறிப்பாக வடக்கு, கிழக்கில்) இந்து ஆலயங்கள் சம்பந்தமான தகவல்களை திரட்டுமாறும் அவற்றை எமக்குத் தருமாறும் வேண்டுகின்றோம்.

இந்த நாட்டு இந்துமத நிறுவனங்களினதும் ஆலய அறங்காவலர்களினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றம் அந்த ஆலயங்கள் ஒவ்வொன்றையும் புனருத்தாரணம் செய்து மீண்டும் ஒழுங்கான பூஜை வழிபாடு நடத்த உதவி செய்யவும் தயாராக இருக்கிறது.

எனவே, இந்த ஆலயங்கள் ஒவ்வொன்றிலும் ஒழுங்கான பூஜைகள் செய்து வழிபடுவது எங்களின் கடமையும் இந்நாட்டின் அரசின் கடமையும் என்பதைக் குறிப்பாகக் கூறிவைக்கவேண்டிய அவசியமில்லை.

தங்களின் விரைவான பதிலையும் நடவடிக்கைகளையும் விரைவாக எதிர்பார்க்கின்றோம்.

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மஹிந்தவை எதிர்த்து பொன்சேகா ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு

01↘ அடிப்படை மனித உரிமை மீறல் என்றும், இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, நீதியை நிலைநாட்டவேண்டுமென்றும் சரத் பொன்சேகா கோர விருப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

''ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விடயங்களை ஆராய்ந்து, நீதியை வழங்கும் என்பது இலங்கைச் சட்டத்துறை வல்லுநர்களின் கருத்தாகும்'' - என்று முன்னாள் தளபதி பொன்சேகாவுக்கு நெருக்கமான அதிகாரி ஒருவர் நேற்றுமாலை தெரிவித்தார்.

## பிரிட்டன் பயண நேரத்தை இறுதியில் மாற்றிய மஹிந்த

01↘ இறுதி நிமிடங்களில் மாற்றியமைக்கப்பட்டது.

இறுதிநேரத்தில் ராஜபக்ஷவின் பயணம் மாற்றியமைக்கப்பட்ட தகவலை ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாரே புலம்பெயர் தமிழருக்குத் தெரியப்படுத்தியதாக கூறப்படுகிறது. அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பயணத்திட்டம் குறித்த தகவல்கள் வெளியே கசிவதைத் தடுக்கும் வகையில் - உள்நாட்டுப் போரின் போது கையாளப்பட்டதைப் போன்று, கொழும்பில் ஒவ்வொரு இரண்டு மணிநேரத்துக்கும் ஒருமுறை கண்காணிப்பு அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் மாற்றியமைக்கப்பட்டன.

இந்தநிலையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானத்தில் கடந்த ஞாயிறு இரவே மிகவும் இரகசியமாக லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ லண்டனில் எங்கு தங்கியுள்ளார் என்ற விபரம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டது.

ஆனாலும் இலங்கை ஜனாதிபதி ஹில்டன் விடுதியில் தங்கியுள்ளார் என்பதையறிந்த புலம்பெயர் தமிழர்கள் ஹில்டன் விடுதிக்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.பாக்லேனில் அமைந்துள்ள அந்த விடுதியின் நுழை வாயில் மற்றும் வெளியேறும் வழிகளில் அதிகளவு பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இலங்கை ஜனாதிபதி தங்கலாம் என்று முன்னர் கருதப்பட்ட டோசெஸ்டர் விடுதிக்கு முன்பாகவும் போராட்டம் நடத்தப்பட்டது. ஆனால் அங்கு அதிகளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதும் இருக்கவில்லை. ஹைட்பார்க் கார்டனில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்துக்கு வெளியே இரண்டு பொலிஸ் கண்காணிப்பு நிலைகள் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே, மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டங்களை ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் ஊக்குவிக்கும் வகையில் செயற்படுவதாக இலங்கை அரசதரப்பு விசனமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (த)

# அதிகாரிகள் பாராமுகம் கவலையில் கைதிகள்

01↘ வேண்டும்.

★ சிறைச்சாலை அதிகாரிகள் தமிழ் அரசியல் கைதிகளிடம் தளர்வுப் போக்கையே கையாள வேண்டும்.

இந்த இரு முக்கிய கோரிக்கைகளை முன் வைத்தே 53 தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுமுதல் மகஸின் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மகஸின் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை பூஸா தடுப்புமுகாமிற்கு மாற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. அத்துடன், இதுவரை காலமும் தனித்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள், ஏனைய குற்றங்கள் புரிந்த கைதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இவர்களை சிங்கள மொழி பேசும் கைதிகளுடன் இணைப்பதால் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதெனவும் தாம் உளவியல் ரீதியான பாதிப்புக்கு உட்படுகின்றனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

''எங்களை இடமாற்றம் செய்ய வேண்டுமெனில் வடக்கு, கிழக்கிலுள்ள சிறைச்சாலைகளுக்கு இடமாற்றுங்கள். பூஸா முகாமிற்கு மாற்றுவதை நிறுத்துங்கள்.

''தமிழ் அரசியல் கைதிகள் பூஸா முகாமிற்கு இடமாற்றப்படுவதால் அவர்களது பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும். நாங்கள் விடுதலை செய்யப்படும் வரையில் எமது பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும்'' எனக் கோரி நிற்கின்றனர் எனவும் அறியமுடிகின்றது.

# நரக வேதனையில் இருந்து விடுபடவே ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்தோம்

01↘ ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

கேரளா கடற்பிராந்தியத்துக்கூடாக ஆஸ்திரேலியாவை நோக்கி சட்ட விரோதமாகப் படகில் புறப்பட்ட 151 இலங்கை அகதிகள் ஞாயிற்றுக்கிழமை கொல்லத்தில் கைதுசெய்யப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் முகவருக்கு இரண்டு இலட்சம் ரூபாவைக் கொடுத்து விட்டே தன் பயணத்தை ஆரம்பித்தார் என துணைப் பொலிஸ் ஆணையாளர் தோம்ஸன் ஜோஸிடம் தெரிவித்துள்ளார்.

''ஜூன் மாதம் 2ஆம் திகதி எனது மனைவியுடனும், மூன்று பிள்ளைகளுடனும் வவுனியாவிலிருந்து புறப்பட்டேன். இதற்கு முன்னர் முகவருக்கு இரண்டு இலட்சம் ரூபா கொடுத்துள்ளேன். எங்கள் உடைமைகளை எல்லாம் விற்றுத் தீர்த்தே இத்தொகையைத் திரட்டியுள்ளேன்'' என்றும் அவர் விசாரணையின்போது துணைப் பொலிஸ் ஆணையாளரிடம் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் விமானம் மூலம் சென்னையை வந்தடைந்தோம். பின்னர் மதுரை செங்கோட்டை மார்க்கமாக கொல்லத்தை நோக்கி வந்தோம் என்றும் துணைப் பொலிஸ் ஆணையாளர் தோம்ஸன் ஜோஸிடம் விவரித்துள்ளார். சென்னை அகதிகள் ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளோம். இந்த அகதிகளை மீள முகாம்களுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் துணை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடடில் பல பகுதிகளிலுள்ள அகதிகள் முகாம்களில் கடுமையான கெடுபிடிகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. வாழ்க்கை சமுகமாக இல்லை. அகதிகள் தப்பியோடுவதற்கு இதுவே காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. கொல்லத்தில் கைதுசெய்யப்பட்ட அகதிகள் நகர பொலிஸ் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள். அதேவேளை, தாங்கள் முன்னர் நரக வேதனைகளை அனுபவித்த முகாம்களுக்கு மீளத் தங்களை அனுப்பிவைக்க வேண்டாமென்றும் கேரள பொலிஸாரை மன்றாடியுள்ளார்கள்.

அந்த முகாம் ஒரு நரகம். நாங்கள் அவர்களுக்கு அகதிகள் மாத்திரமே. எங்களைப் பராமரிக்கும் கியூ பிரிவுக் கிளை எம்மை மனிதப் பிறவிகளாகவே நோக்குவதில்லை. இதற்கு முன்னர் தப்பிச்செல்ல முயன்ற அகதிகள் பிடிக்கப்பட்டு, குரூர தண்டனைகளுக்குப் பின்னர் அடைக்கப்பட்டுள்ளார்கள். ஒவ்வொருநாளும் காலை 6 மணிக்குப் பின்னர் நாங்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுகிறோம். எனினும், இரவு 8 மணிக்கு முன்னரே திரும்பிவிட வேண்டும். எங்களுக்குப் போதிய பங்கீட்டுப் பொருள்கள் வழங்கப்படமாட்டா. பிள்ளைகளுக்கான முறையான கல்வி உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இதர வசதிகளும் அளிக்கப்படுவதில்லை என ஓர் அகதி தனது அவல நிலையைக் குறிப்பிட்டுள்ளார்.

எங்களைச் சந்தித்த முகவர்கள் குடியேற்ற நடைமுறைகளை எங்களுக்கு விளக்கவில்லை. குடியேற்றத் திட்டத்தில் அடங்கியுள்ள அகதிகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடவில்லை. பின் விளைவுகளை நாம் எண்ண வில்லை. நரக வாழ்விலிருந்து விடுபட்டு, சுதந்திரமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் வாழ வேண்டுமென்பதே எமது நோக்கமாகும் என்றும் அகதிகள் தெரிவித்துள்ளார்கள்.

''படகில் ஏறுவதற்கு முன்னர் பணம் வசூலித்த நபரை என்னால் அடையாளப்படுத்த முடியாது. படகில் ஏறிய ஒருவர் பதறிப்போய் இறங்கினார். ஆஸ்திரேலியாவுக்கருகிலுள்ள கிறிஸ்மஸ் தீவுகளை அடைய 18 நாள்கள்வரை ஆகும் என அறிவிக்கப்பட்டது. இந்தஅறிவித்தலைக் கேட்டே அந்நபர் இறங்கிவிட்டார்'' என ஓர் இளம் அகதி, துணை ஆணையாளரிடம் குறிப்பிட்டுள்ளார்.

எங்களை மீள அனுப்பாதீர்கள். அப்படி அனுப்பினால் சித்திரவதைகளுக்குள்ளாவோம். அவற்றுக்குத் துணை ஆணையாளரே பொறுப்பாவார். முகாமிலுள்ள அதிகாரிகள் சித்திரவதைகளுக்குள்ளாக்குவர் என்றும் அகதிகள் குறிப்பிட்டுள்ளார்கள். அகதிகளில் பெரும்பாலானோர் நன்கு படித்தவர்கள். பலருக்கு ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா, பிரிட்டன், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் உறவினர்கள் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## புலம்பெயர் தமிழர்களின் ஆக்ரோஷம் தணிய வழி

பிரிட்டன் நாட்டின் மகாராணியார் இரண்டாவது எலிஸபெத் முடிசூடி 60 வருட நிறைவைக் கொண்டாடும் வைரவிழாவில் கலந்து கொள்ளச் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் புலம்பெயர் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடி எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். பிரிட்டிஷ் பொலிஸார் பெரும்பாடு பட்டு மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயன்றும் கூட்டம் கட்டுக்கடங்காமல் போகவே ஜனாதிபதியையும் அவரது பரிவாரங்களையும் வேறுபாதை வழியாக அழைத்துச் சென்றனர் பொலிஸார் என்று செய்தி கூறுகின்றது.

வெளிநாட்டில் வாழுகின்ற புலிப் படையினரும் அவர்களின் ஆதரவாளர்களுமே இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை நடத்துவதில் ஈடுபட்டார்கள் என்று இலங்கை அதிகாரிகளும் அமைச்சர்களும் வாய் கூசாமல் தென்பகுதியில் இனிவரும் காலங்களில் இந்த நிகழ்வுகள் பற்றிப் பிரசாரம் செய்வார்கள் என்று கூறத் தேவையில்லை.

நாட்டில் பெற்றோலியப்பொருள்களின் மற்றும் நுகர்வுப் பொருள்களின் விலையேற்றங்களுக்கு மட்டுமன்றி நாணயத்தின் மதிப்பிறக்கத்துக்கும் கூட சர்வதேச புலி ஆதரவாளர்களே காரணம் என்று மேடைகளில் பிரசாரம் செய்து தென்னிலங்கை மக்களை உணர்ச்சி வசப்படுத்தி தம் வாக்கு வங்கிகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் இவர்களுக்கு ஹீத்ரு விமான நிலைய ஆர்ப்பாட்டமும் வெறும் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரித்தான். லண்டனில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் அனேகர் தம்முடன் புலிக் கொடிகளையும் வைத்திருந்தனர் என்பது இவர்களை கிலேசம் அடையச் செய்யக் கூடிய இன்னுமொரு அம்சமாகும்.

போரை நடத்தி புலிகள் அமைப்பை நிர்மூலமாக்கி நாட்டை மட்டுமல்ல குறித்த பகுதிகளில் வாழ்ந்த மக்களையும் விடுவித்து விட்டதாக உலகுக்கு அறிவித்துக் கொண்ட அரசு அப்பகுதிகளில் இன்னமும் இயல்பு வாழ்வை நிலைநாட்டவில்லை. ஆங்காங்கே குடியமர்த்தப்பட்ட மக்களும் இராணுவ கெடுபிடிகளுக்குள்ளாகி வருகின்றனர். நேற்றும் கூட வெளிவந்த பத்திரிகைச் செய்தியொன்றில் கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் பொதுமக்களின் காணிகளை அபகரித்துள்ள இராணுவத்தினர் அங்கிருந்து இந்துக் கோயிலை அகற்றி புத்தர் சிலையை நிறுவி வருவதாகவும் காணிகளை இழந்த மக்கள் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கிக் காலம் கழிப்பதாகவும் இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் முறையிடப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினர் நாட்டின் பாதுகாப்பிலும், பிரதேசத்தின் அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள் என்று பொறுப்பான அதிகாரிகளும், அமைச்சர்களும் கூறிக்கொள்வது இந்த மாதிரிப் பணிகளைத்தானா என்று மக்கள் கேட்கிறார்கள்.

போர் முடிவுற்ற நிலையிலும் நாட்டினதும் பிராந்தியத்தினதும் பாதுகாப்பில் இலங்கை அரசு அதிக அக்கறை கொண்டிருப்பதாக சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்ட பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் அங்கு வந்திருந்த அமெரிக்க, இந்திய பிரமுகர்களிடம் தனித் தனியே சந்தித்து விளக்கியுள்ளதாகத் தகவல் வந்துள்ளது.

இந்த விளக்கங்கள் ராணுவத்தை தொடர்ந்தும் வடக்கு, கிழக்கில் நிலைகொள்ளச் செய்வதற்கான நியாயப்பாடாக இருக்கலாகாது. வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள படையணிகள் மக்கள் குடியிருப்புக்களிலிருந்து அகற்றப்பட வேண்டும், குடிசார் பணிகளில் அவர்கள் தலையிடலாகாது என்பது இந்தப் பகுதியிலுள்ள மக்களின் கோரிக்கை. அதையே அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகளும் வலியுறுத்துகின்றன.

இந்தப் பின்னணியில்தான் புலம்பெயர்ந்த தமிழர்கள் லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள்.

உள் நாட்டிலோ வெளியிலோ உள்ள தமிழர்கள் திருப்தி கொள்ளும் விதத்தில் இங்கு எதுவுமே நடந்துவிடவில்லை என்பதே இதன் இரகசியம்.

* வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த அரசு சற்றும் மதிப்பதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை இடையில் முறித்துக்கொண்டு விட்டது.

*நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தயக்கம் காட்டப்படுகின்றது.

*இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக நம்பகத்தன்மையுடனான விசாரணை ஆரம்பிக்கப்படவில்லை. அவ்வாறான விசாரணை ஒன்றின் மூலம் உரியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

*பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் நீதியும் இழப்பீடும் வழங்கப்பட வேண்டும்.

இந்த விடயங்களை அரசு விரைந்து கவனத்தில் எடுத்து செயல்படுமானால் புலம்பெயர் தமிழர்களின் ஆக்ரோஷம் ஓரளவு தணிவதற்கு வழி பிறக்கும். அவர்கள் இந்த நாட்டில் இருந்து புலம்பெயர்ந்த குடி மக்கள். இங்கு நடப்பவைகளை அவர்கள் உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள். இங்குள்ள நிலைமைகளில் அவர்கள் திருப்தியடையும் போது நிச்சயமாக இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு அவர்களின் பங்களிப்பும் தாராளமாக கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# மூன்று மாகாண சபைகளுக்கு தேர்தல் செலவாக ரூ.25 கோடி

கொழும்பு, ஜூன் 6

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்கு 25 கோடி ரூபாவரை செலவாகக் கூடுமெனத் தேர்தல்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒழுங்குகள் தொடர்பான அடிப்படைத் திட்டங்கள் தற்போது தயார்படுத்தப்பட்டு வருவதோடு கடந்த மாகாண சபைத் தேர்தல்களுக்குச் செலவான தொகையை விட 10 வீதம் வரையான செலவினம் இந்த முறை அதிகரிக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசின் உயர்மட்டத் தகவல்களுக்கு அமைய இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகள் கலைக்கப்படவுள்ளன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்படலாம் எனத் தெரிவிக்கப்படும் தகவலில் உண்மை இல்லை எனவும், அந்த மாகாண சபையும், திட்டமிட்டவாறு ஏனைய மாகாண சபைகளுக்குச் சமமாக ஒரே தடவையில் கலைக்கப்படுமெனவும் திணைக்களப் பேச்சாளர் மேலும் கூறினார்.

இந்த மூன்று மாகாணசபைகளுக்குமான தேர்தலை செப்ரெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிப்பதே அரசின் திட்டமெனவும் அவர் குறிப்பிட்டார். (த-22)

# இலாபத்தில் செயற்பட்டால் மட்டுமே இனி சங்கங்களில் சம்பள அதிகரிப்புக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 6

கூட்டுறவுச் சங்கங்கள் அதிக இலாபத்தில் செயற்பட்டால் மட்டுமே புதிய சுற்றறிக்கைக்கு அமைய சம்பள அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்படும் என்று யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய ஐந்து வீதம் மற்றும் பதினைந்து வீதம் சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதற்கு சங்கம் அதிக இலாபத்தில் செயற்பட வேண்டும்.

ஆனால் கடந்த கால வியாபார நடவடிக்கைக்கு அமைவாக இந்தச் சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது. கிளை விற்பனை நிலையங்களில் குறைந்தது மாதத்தில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் ரொக்க வியாபாரத்தை மேற்கொள்வதன் மூலமே இந்தச் சம்பள அதிகரிப்பைப் பெறமுடியும். இந்தப் புதிய சம்பள அதிகரிப்பை பெறுவது பணியாளர்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. எனவே கிளை நிலையங்களில் வியாபார நடவடிக்கையை மேலும் அதிகரிப்பதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக நீர்வேலி, அச்சுவேலி ஆகிய சங்கங்கள் ரொக்க வியாபார நடவடிக்கையில் முன்னிலையில் உள்ளன. பணியாளர்கள் தமக்குரிய கொடுப்பனவைப் பெற வேண்டும் என்றால் வியாபார நடவடிக்கைகளை அதிகரிப்பதில் அக்கறை காட்ட வேண்டும்.

வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் கிளைகளில் தாராளமாக பொருள்களைக் களஞ்சியப் படுத்துவதுடன் விற்பனை நிலையங்களையும் துப்புரவாக வைத்திருக்க வேண்டும். கிராமிய வங்கிகளைப் புனரமைத்து அதன் செயற்பாடுகளையும் அதிகரிக்க வேண்டும்- என்றார். (த-17)

## பல்கலைக்கழக ஊழியர் பணிப் புறக்கணிப்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 6

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் இன்று முதல் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்கும் தொழிற்சங்கக் கூட்டுக் குழுவுக்கும் இடையில் கடந்த பெப்ரவரி 29ஆம் திகதி இடம்பெற்ற கூட்டு உடன்படிக்கை இதுவரை அமுல்படுத்தாமை தொடர்பாகவே இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களும் இன்று முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். (16)

### கூட்டம் ஒத்திவைப்பு

நல்லூர் வரலாற்றுக் கழகத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த இக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

(த-13-7)

## 12 உபதபால் நிலையங்கள் வடக்கில் இதுவரை முடக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடமாகாணத்தில் 12 உப தபால் நிலையங்கள் இயங்காத நிலையில் உள்ளதாக வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் 52 தபால் நிலையங்களும், 264 உபதபால் அலுவலகங்களும் உள்ளன. 264 உப தபால் நிலையங்களில் தற்போது 12 உபதபால் நிலையங்கள் இயங்காத நிலையில் உள்ளன.

யாழ். மாவட்டத்தில் மயிலிட்டி, தையிட்டி, ஊறணி ஆகிய உப தபால் நிலையங்கள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளதால் இயங்கவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் முகமாலை உபதபால் நிலையமும், மன்னார் மாவட்டத்தில் 5 உப தபால் நிலையங்களான பெரிய பொற்கேணி, பண்டாரவெளி, முள்ளிக்குளம், கொக்குப்படையான், பரப்புக்கடந்தான் ஆகியனவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 உப தபால் நிலையங்களான அம்பலவன் பொக்கணை, ஆனந்தபுரம், கொக்குத்தொடுவாய் ஆகியவையும் இயங்காத நிலையில் உள்ளன.

தற்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 உப தபால் நிலையங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவை விரைவில் மக்கள் பாவனைக்கு விடப்படும் எனவும் யாழ். மாவட்டத்தில் உள்ள உப தபால் நிலையங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளதால் இயங்குவதற்கான சாத்தியக்கூறுகள் எவையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று வடமாகாணத்தில் 31 உபதபால் நிலையங்கள் தனியார் கட்டடங்களில் இயங்குகின்றன, யாழ். மாவட்டத்தில் மட்டும், 7 உப தபால் நிலையங்கள் இயங்குகின்றன,

தனியார் கட்டடங்களில் இயங்கும் உபதபால் நிலையங்களுக்காக மாதாந்தம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் வாடகை செலுத்தப்பட்டுவருகிறது எனவும் மேலும் தெரிவித்தார்.

(13)

# கார் கொள்வனவுக்கான வட்டியில்லா கடனை வடபகுதி ஊடகவியலாளர் பெறமுடியாத நிலை

அச்சுவேலி, ஜூன் 6

அரசினால் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட வரிச்சலுகையுடன் கூடிய கார் கொள்வனவுக்கான வட்டியில்லாத கடனை வடபகுதி ஊடகவியலாளர்கள் பலரும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

18 வருடங்கள் சேவையை நிறைவு செய்த ஊடகவியலாளர்கள் இறக்குமதி தீர்வையில்லாமல் புதிய வாகனம் பெறுவதற்கு [illegible] நீண்ட காலக் கடனாக பெறுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் விண்ணப்பிப்பவர்கள் 'தகவல் ஊடகத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை முக்கிய ஆவணமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

. போர்க்காலத்தில் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் பணியாற்றியோருக்கு தகவல் ஊடகத்துறை அமைச்சின் அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை. மேற்படி அடையாள அட்டை அரசசார்பு பத்திரிகை மற்றும் லேக்கவுஸ் நிறுவன பத்திரிகையுடன் தொடர்புடைய ஊடகவியலாளர்களுக்கே வழங்கப்பட்டன. நீண்ட காலத்திற்குப் பின்னர் மூத்த ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகையை உரிய முறையில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் கடனுக்கான கால எல்லையை நீடிப்பதோடு தகவல் ஊடகத்துறை அமைச்சின் அடையாள அட்டை கிடைப்பதற்கு வசதி செய்யப்படுமா? இல்லாவிடில் கடனை பெற முடியாத நிலை ஏற்படும் என பாதிப்புக்கு உள்ளாகிய மூத்த ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் கஷ்டப்பிரதேச படிகள் வழங்கப்படாததற்குக் கண்டனம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடிதம்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சிக் கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அதிகஷ்டப்பிரதேச, கஷ்டப்பிரதேச படிகள் வழங்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் சங்கத்தினால் பின்வரும் விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுளளன.

பாடசாலைகளின் வசதிப் பற்றாக்குறைகளை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற ஆசிரியர்களுக்கான அதிகஷ்டப்பிரதேச, கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கான படிகள் கிளிநொச்சி வலயத்தில் உள்ள சில பாடசாலைகளுக்கு வடமாகாண கல்வி அமைச்சு, இந்த வருடம் ஜனவரி முதல் நிறுத்தியுள்ளதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது முற்றிலும் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்று. கொடூர போர் முடிவுக்கு வந்து இப்போது தான் அங்குள்ள பாடசாலைகள் புனரமைக்கப்படுகின்றன.

**ஆசிரியர்களுக்கான இடர் உதவிக் கடனோ அன்றிச் சலுகைமுறையிலான படிகளோ வழங்கப்படாத நிலையில் இந்த அதிகஷ்டப்பிரதேச, கஷ்டப்பிரதேசப் படிகளை வடமாகாணக் கல்வி அமைச்சு நிறுத்தியிருப்பது ஆசிரியர்களின் சேவையை அவமதிக்கும் செயலாகும்.**

இந்த நிலையில் ஆசிரியர்களுக்கான இடர் உதவிக் கடனோ அன்றிச் சலுகை முறையிலான படிகளோ வழங்கப்படாத நிலையில் இந்த அதிகஷ்டப்பிரதேச, கஷ்டப்பிரதேசப் படிகளை வடமாகாணக் கல்வி அமைச்சு நிறுத்தியிருப்பது ஆசிரியர்களின் சேவையை அவமதிக்கும் செயலாகும்.

ஆசிரியர்கள் பெருந்தொகையாகக் கடன்பட்டு தமது வீடுகளைப் புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் மற்றும் பெருந்தொகைப் பணம் செலவு செய்து வன்னிப்பிரதேசத்திற்கு ஆசிரியர்கள் கடமைக்குச் செல்லும் இந்த வேளையில் இந்தப் படிநிறுத்தமானது மிகவும் பாதிப்பை ஏற்படுத்துமென சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.


தயவு செய்து படிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த பாடசாலைகளுக்கு அதனைத் தொடர்ந்தும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இதைவிட மன்னார் மாவட்டத்தில் முறையற்ற இடமாற்றங்கள் நடைபெறுவதை கல்வி அமைச்சின் செயலாளரான தங்களிடம் நாம் முறையிட்டும் எந்த வித நடவடிக்கையும் தாங்கள் எடுக்கவில்லை. இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் பலர் இடமாற்றம் பெற்ற பாடசாலைகளுக்குச் செல்லும் போது அந்தப் பாடசாலை அதிபர்களால் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவதையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காதமையை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதோடு, சில அதிகாரிகளின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு தாங்கள் துணை போவதாகவே கருத வேண்டியுள்ளது.

இதை விட, வன்னிப் பிரதேசத்தில் இருந்து இடமாற்றத்திற்குத் தகுதியென்று இடமாற்றச்சபை தீர்மானித்த ஆசிரியர்கள் பலரின் இடமாற்றங்கள் தாமதமாவதற்கான சரியான காரணத்தைத் தாங்கள் இன்னும் கண்டறியாமல் இருப்பது வேதனை தருகின்ற விடயமாகும். இது தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களம் காட்டுகின்ற அசமந்தத் தன்மையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவை தொடர்பில் தாங்கள் விரைந்து நடவடிக்கை எடுக்காதவிடத்து இது பற்றி ஜனாதிபதியிடம் முறையிடவும் தீர்மானித்துள்ளோம்- என்றுள்ளது. (க)

## புகை கக்கும் பஸ்கள்



மன்னார், ஜூன் 6

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் பஸ்களை இயக்க ஆரம்பிக்கும்போது அதிகளவில் புகை வெளியேறுவதால் பயணிகள் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு சேவையிலீடுபடும் பஸ்கள் பாவனைக்கு உகந்தவையாகக் காணப்படவில்லை. ஆனால் புதிய பஸ்கள் கிடைக்காமையால் வேறுவழியின்றி இவை இயக்கப்பட்டு வருகின்றன.

சில வேளைகளில் இடைவழியில் பஸ்கள் நின்றுவிடுவதால் பயணிகள் கீழே இறங்கித் தள்ளி இயக்க வேண்டிய பரிதாப நிலையும் காணப்படுகின்றது.

மேலும் பஸ் ஆசனங்கள் கிழிந்த நிலையில் காணப்படுகின்றன. இவை சரிசெய்யப்படாமையால் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாதவாறு நல்ல நிலையிலுள்ள பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-12)

## மின்சாரத்தைக் காணவிருக்கும் நட்டாங்கண்டல் பிரதேசம்

துணுக்காய், ஜூன் 6

மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள நட்டாங்கண்டல் பிரதேசத்துக்கு விரைவில் மின் இணைப்புக்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக மாந்தை கிழக்கிலுள்ள நட்டாங்கண்டல், பனங்காமம், சாளம்பன், எருவில், உழவைநெறி ஆகிய கிராமங்கள் மின்சாரம் இல்லாத நிலையில் உள்ளன.

**சுமார் 30 வருடங்களுக்கு மேலாக மாந்தை கிழக்கிலுள்ள நட்டாங்கண்டல், பனங்காமம், சாளம்பன், எருவில், உழவைநெறி ஆகிய கிராமங்கள் மின்சாரம் இல்லாத நிலையில் உள்ளன.**

இந்த நிலையில் குறித்த பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த 23 ஆம் திகதி முற்பகல் 11.20 மணியளவில் மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ம.தயானந்தன் தலைமையில் இந்த வேலைகள் ஆரம்பமாகின. சுமார் ஐந்து கிலோ மீற்றர் சுற்றளவுள்ள பிரதேசத்துக்கு முதல் கட்டமாக மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இந்த ஆரம்ப கட்ட வேலைகளில் 100க்கும் அதிகமான கிராம மக்களுடன் இராணுவ அதிகாரியான திலிப்குமார, வடக்கின் வசந்தம் திட்டத்தின் பிரதிப் பொறியியலாளர் பிரசன்னா ஆகியோரும் கலந்துகொண்டனர்.


மேலும் அம்பாள்புரம், மூன்றுமுறிப்பு, கரும்புள்ளியான் ஆகிய பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-415)

## கடும் காற்றினால் பாதிப்புக்கள்

வேப்பங்குளம், ஜூன் 6

அண்மைய நாள்களாக வீசிக்கொண்டிருக்கும் கடும் காற்றினால் வவுனியாவில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாக வழமையை விடவும் பலத்த காற்று வீசி வருகின்றது. இதனால் பல இடங்களிலும் மரங்கள் முறிந்து வீழ்ந்து கிடப்பதைக் காணமுடிகின்றது. மின்சாரக் கம்பிகளும் அறுந்ததால் சில இடங்களில் தற்காலிகமாக மின் தடைகள் ஏற்பட்டுள்ள போதிலும் மின்சார சபையினர் அவற்றைத் துரிதமாகச் சீர்ப்படுத்துவதைக் காண முடிகின்றது. (க-421)



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் கட்டட வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. (6)

## அருகி வரும் கால்நடை வளம்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வளம் அருகி வருவதாக மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கால்நடை வளம் நிறைந்து காணப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது கால்நடை வளம் அருகி வருகின்றது. கால்நடை அபிவிருத்தியில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் எவையும் இல்லை.

கால்நடைகளை வேறு மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்குரிய நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் எனவும் வாழ்வாதாரத் தேவைகளுக்கு என ஒன்று அல்லது இரண்டு கால்நடைகளை வடமாகாணத்துக்குள், நிபந்தனைகளுடன் கொண்டு செல்ல முடியும் எனவும் வடமாகாண ஆளுநர் அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைப் பின்பற்றுவதன் மூலம் மாவட்டத்தின் கால்நடை வளத்தைப் பாதுகாக்க முடியும் எனவும் மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் கால்நடை அபிவிருத்தி தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க-6)

# தூக்கப்பட்டார் பிள்ளையார் இடத்தைப் பிடித்தார் புத்தர்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் ஆனைமுகன் இருந்த இடத்தை தற்போது புத்தர் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார்.

பாவம் பிள்ளையார் அருகில் - வேறிடத்தில் பலாத்காரமாக - 'அவர்களின்' கட்டளையின்படி 'பேசாமல்' வீற்றிருக்கிறார். முன்னர் கிழக்கு நோக்கி இருந்த பிள்ளையார் தற்போது மேற்கு நோக்கியவாறு இருக்கிறார்.

[illegible]

கிளிநொச்சி கிருஷ்ண புரம் பகுதியில் பொதுமக்களின் இருபது ஏக்கர் காணி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பகுதியில் இருந்த பிள்ளையார் கோயில் அகற்றப்பட்டு பௌத்த ஆலயம் அமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் பகுதியில் முன்னர் அங்கவீனமுற்ற போராளிகளின் தொழிற் பயிற்சிக் கூடமாக இயங்கி வந்த நவம் அறிவுக் கூடத்துக்குரிய ஐந்து ஏக்கர் காணி இராணுவ [illegible] மாற்றப்பட்டு இராணுவத்தினர் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் இதனை அண்டிய பகுதிகளில் உள்ள பதினைந்து குடும்பங்களுக்குரிய இருபது ஏக்கர் காணியும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணிகளுக்குரிய உரிமையாளர்களிடம் காணி அனுமதிப்பத்திரங்கள் உள்ளன.

இந்தப் பகுதிகளில் வசித்த பதினைந்து குடும்பங்களின் காணிகளில் கிணறுகள் பயன் தரு மரங்கள் வீடுகள் என்பனவும் இருந்துள்ளன.

தற்போது இந்தக் குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வெவ்வேறு இடங்களில் வசித்து வருகின்றன.

அத்துடன் மேற்படி நவம் அறிவுக் கூடத்துக்கு முன்பாக இருந்த பிள்ளையார் ஆலயம் அகற்றப்பட்டு அந்தப் பகுதியில் புத்த கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்வதால் பெருமளவான மக்கள் வாழ்விட வசதிகள், காணிகள் இன்றிச் சிரமப்பட்டு வருகின்றனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கூசி வலையைப் பறிக்க குடாக்கடலில் திடீர் சோதனை

## கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை

**இந்த சட்ட விரோத செயற்பாட்டைத் தடுக்க கடலில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். குடாக் கடலில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி தொடர்ந்தும் மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பான முறைப்பாடுகள் எமக்கு அடிக்கடி கிடைக்கப்பெறுகின்றன. இதையடுத்து இந்த சட்ட விரோத செயற்பாட்டைத் தடுக்க கடலில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சோதனையின்போது சிக்கிக் கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தடை செய்யப்பட்ட இந்தத் தங்கூசி வலையைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் சிலர் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது சிக்கிக் கொண்டனர்.

குறிப்பாக மண்டைதீவு, குருநகர் கடற்பகுதிகளில் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்த மீனவர்களே கடற்றொழில் பரிசோதகர்களிடம் சிக்கிக் கொண்டவர்களாவர்.

இவர்களிடம் இருந்த தங்கூசி வலைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இவ்வாறு தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனால் கடலில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தத் தங்கூசி வலைப் பாவனையை முற்றாகத் தடுக்க திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது - என்றார். (த-17)

# சைக்கிள் திருட முயன்றவர் துரத்திப் பிடிக்கப்பட்டார்

வலி.தென்மேற்கு, ஜூன் 6

ஆலயத்தில் விட்டுப் பூட்டியிருந்த சைக்கிளைத் திருடமுற்பட்ட இளைஞர் ஒருவர் அங்கு நின்ற இளைஞர்களிடம் வகையாக மாட்டிக் கொண்டார். கையும் மெய்யுமாகப் பிடிபட்ட இந்த இளைஞர் நையப்புடைக்கப்பட்டு அங்கு கடமையில் நின்ற பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் இவரைக் கைது செய்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் சுதுமலை அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

சுதுமலை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அம்பாளின் தேர்த்திருவிழாவைப் பார்ப்பதற்காக ஆலயத்திற்கு வந்த அடியார் ஒருவர் தனது சைக்கிளை ஒரு புறத்தில் வைத்துப் பூட்டிவிட்டுச் சுவாமி தரிசனத்தில் ஈடுபட்டிருந்தபோது அவ்விடத்துக்கு வந்த இளைஞர் ஒருவர் பூட்டி நின்ற சைக்கிளை உடைக்க முற்பட்டுள்ளார். இதை அவதானித்த சைக்கிள் உரிமையாளர் திருடன் என்று கூச்சல் போட்டதும் அவர் தப்பியோட முற்பட்டார். ஆனால் அங்கு நின்ற இளைஞர்கள் அவரைப் பின் தொடர்ந்து துரத்திச் சென்று மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர். பின்பு அங்கு கடமையில் நின்ற பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இளைஞரைக் கைது செய்த பொலிஸார், வயிற்றோட்டம் காரணமாக குறித்த இளைஞரை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர். (த-115-100)

# விடுமுறை தினங்களிலும் செயற்படும் வைத்தியசாலை

## மானிப்பாய் பகுதி மக்கள் மகிழ்ச்சி

நவாலி, ஜூன் 6

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை தற்போது போயாதினம் மற்றும் அரசவிடுமுறை நாள்களிலும் செயற்பட்டு வருவதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் நன்மையடைந்து வருகின்றனர்.

இந்த வைத்தியசாலையின் சுற்று வட்டாரங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களே அதிகம் வாழ்கின்றனர். தமது சகல மருத்துவத் தேவைகளுக்கும் அவர்கள் இந்த வைத்தியசாலையையே நாடுகின்றனர்.

இந்த நிலையில் சனி, ஞாயிறு தினங்களுடன்சேர்த்து வரும் விடுமுறை நாள்களில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு மூடியிருக்கும் விடயமறியாத நோயாளர்கள் சிகிச்சைக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இவர்களது இந்த நிலையைக் கருத்திற்கொண்டு வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி விடுமுறை நாள்களிலும் வைத்தியசாலையைத் திறந்து மனிதாபிமானத்துடன் தனது நேரத்தையும் பாராது சிகிச்சையளித்து வருகின்றார்.

அவரது சேவையை அப்பகுதி மக்களும் பாராட்டியுள்ளனர். இதேவேளை இங்குள்ள மகப்பேற்று விடுதி 24 மணிநேரமும் தொடர்ந்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-100)

# பளையில் புதிய பஸ் நிலையம்

யாழ்ப்பாணம்,ஜூன் 6

பளைப் பிரதேச சபையினால் நவீன வடிவிலான பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலத்தின் பின்னர் தற்போதைய சபை புதிய பஸ்தரிப்பு நிலையத்தை நகரின் மத்தியில் அமைத்துள்ளது.

அடுத்தவாரம் பிற்பகுதியில் புதிய பஸ்தரிப்பு நிலையம் பிரதேசசபைத் தலைவரினால் திறந்துவைக்கப்படவுள்ளது. (த-50)

# வீதிக்குக் குறுக்காக வாய்க்கால் விழுந்து எழும்பும் பயணிகள்

தென்மராட்சி, ஜூன் 6

குளத்திலிருந்து தோட்டத்துக்கு நீர் பெறுவதற்காக வீதியில் வெட்டப்பட்ட வாய்க்கால் உரிய முறையில் மூடப்படாததால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் இதில் விழுந்து காயமடைவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி விளைவேலி துர்க்கை அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள குளத்திலிருந்து மறுபக்கத்தில் உள்ள காணியில் பயிரிடப்பட்டுள்ள தோட்டத்துக்கு தண்ணீர் பெறுவதற்காக வீதியில் வாய்க்கால் வெட்டி குழாயைப் புதைத்துள்ளனர்.

இந்த வாய்க்கால் உரிய முறையில் மூடப்படாததால் வாகனங்களில் வருவோர் வாய்க்காலுக்குள் விழுந்து தூக்கி வீசப்பட்டு காயமடைகின்றனர்.

இதேவேளை -

மட்டுவில் தெற்கு இலுப்பையடி வீதியின் மறுபக்கத்தில் உள்ள தோட்டத்துக்கு நீர் பெறுவதற்காக வீதியில் போடப்பட்டுள்ள குழாயுடன் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வருவோர் மோதி வீழ்ந்து எழும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# போதையில் தனக்குத்தானே தீ மூட்டிய குடும்பஸ்தர்

மதுபோதையில் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டிக்கொண்டார் எனக் கூறப்படும் நான்கு பிள்ளைகளின் தந்தை மிகவும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நாவாந்துறையில் சம்பவம் இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் நிறை மதுபோதையில் வீட்டுக்கு வந்துள்ளார். திடீரெனத் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிக் கொண்டதுடன் தீ வேகமாகப் பரவத் தொடங்கியவுடன் தனது உடம்பில் இருந்த ஆடைகளைக் கழற்றி எறிந்துள்ளார்.

சம்பவத்தைக் கண்டவர்கள் தீயை அணைத்து அவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். ஆபத்தான நிலையில் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார். (த-14)

# அனுமதியின்றி அமைக்கப்பட்ட காக்கைதீவு மீன் சந்தை

## கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் நேரில் விசாரணை

வலி.தென்மேற்கு. ஜூன் 6

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியின்றி காக்கைதீவுக் கடற்கரையில் வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தையை நேரில் சென்று பார்வையிட்டுள்ள கொழும்பிலிருந்து வருகை தந்த கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

காக்கைதீவு கடற்கரையில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலப்பரப்பில் வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் மீன் சந்தை அமைக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் கடற்றொழிலாளர்களின் சம்மதமின்றியும் அமைக்கப்பட்டுள்ள இந்த மீன் சந்தை குறித்து சாவல்கட்டு கடற்றொழில் அமைப்பின் தலைவர் என். பொன்னம்பலம் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு அறிவித்திருந்தார்.

இது தொடர்பாகப் பார்வையிடுவதற்கு கொழும்பிலிருந்து வந்த மேற்படி திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் நேரில் சென்று மீன் சந்தையைப் பார்வையிட்டதுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். (த-115)

# குளிர்பானம் வழங்கிய படையினர்

வலி.தென்மேற்கு, ஜூன் 6

ஆலயத்துக்குச் சென்று அடியார்களுக்கு பாதுகாப்புப் படையினர் குளிர்பானமும் பிஸ்கற்றும் வழங்கினர்.

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற தீர்த்தத் திருவிழாவில் பல நூற்றுக் கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர். அடியார்களின் தாகத்தைத் தீர்க்கும் வகையில் ஆலயத்தைச் சுற்றிப் பல தாக சாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

மேற்படி ஆலயத்துக்கு முன்பாக பழைய கட்டடத்தில் நிலை கொண்டுள்ள பாதுகாப்புப் படையினர் ஆலயத்துக்கு வருகை தந்திருந்த அடியார்களுக்கு குளிர்பானமும் பிஸ்கற்றும் வழங்கி மகிழ்வித்தனர். (த-115)

# நடமாடும் வியாபார நிலையங்கள் சுகாதார அதிகாரிகளின் கண்காணிப்பில்

**பொதுச் சுகாதார உத்தியோகத்தரின் அறிவுரைக்கு ஏற்ப நடந்து கொள்ளாத வியாபார நிலையங்களில் உணவைக் கைப்பற்றி அழித்தல், சட்டநடவடிக்கை எடுத்தல் போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்**

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள நடமாடும் வியாபார நிலையங்கள் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் தரக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் இந்தப் பகுதியில் 20 நடமாடும் வியாபார நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் 'ஏ' தரத்தில் 7 நிலையங்களும், 'பி'தரத்தில் 13 நிலையங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

இவற்றின் தரத்தை உயர்த்துவதற்காக யாழ். மாநகர சபைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழு இரவு நேரத்தில் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் மூலம் சட்ட நடவடிக்கையாக குறுகிய கால அவகாசத்தில் பெற்றோல் மக்ஸ் பாவனையை நிறுத்தி சார்ஜ்ஜர் மின் விளக்கு பயன்படுத்தல், காஸ்குக்கர் பாவனை ஆகியன மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் வண்டில்களின் சுகாதார நிலை மேம்பாடு, உணவு கையாள்பவர்களின் மருத்துவ அத்தாட்சிப்பத்திரம், ஒப்பந்த நிலை [illegible] நிலை, தனி நபர் சுகாதாரம், வியாபாரம் செய்யும் இடம் என்பன பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் பரிசோதிக்கப்படுகின்றன.

பொதுச் சுகாதார உத்தியோகத்தரின் அறிவுரைக்கு ஏற்ப நடந்து கொள்ளாத வியாபார நிலையங்களில் உணவைக் கைப்பற்றி அழித்தல், சட்டநடவடிக்கை எடுத்தல் போன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் [illegible]ஜோதி அறிவித்துள்ளார். (த-16-4)

# வாய்த் தர்க்கம் மோதலாகியதில் இருவருக்கு பிசுங்கான் குத்து

யாழ்ப்பாணம் ,ஜூன் 6

முன்விரோதம் காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாகி பிசுங்கான் துண்டுகளால் குத்தித் தாக்கப்பட்ட இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது :-

வட்டுக்கோட்டை செம்பாட்டுத்தோட்டம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் முன்விரோதம் காரணமாக மதுபோதையில் இருந்த இளைஞருக்கும் வேறுசிலருக்கும் இடையே வாய்த்தர்க்கம் இடம்பெற்றுள்ளது. இதன் போது மதுபோதையில் இருந்த இளைஞர் கையில் மறைத்துவைத்திருந்த பிசுங்கான் துண்டுகளால் தன்னுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த நண்பர்களைக் குத்திக் காயப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த நபர்களை இடைமறிக்கச் சென்ற இன்னொரு நபர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.சம்பவத்தில் காயமடைந்த வட்டுக்கோட்டை செம்பாட்டுத்தோட்டத்தைச் சேர்ந்த புவனேந்திரன்(வயது 38),கரன்(வயது 21)ஆகியோர் மாவடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெகன் மோகனுக்கு கொலை மிரட்டல்



வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்த வழக்கில் கைதாகியிருக்கும் ஜெகன் மோகன் ரெட்டிக்கு கொலை மிரட்டல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவரைச் சிறை வளாகத்திலேயே கொல்ல சதித்திட்டம் நடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி, கடந்த 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டு லஞ்சல்குடா சிறையில் அடைக்கப்பட்டார். இந்தச் சிறைக்கு தீவிர பாதுகாப்பு போடப்பட்டிருப்பதுடன் பல்வேறு வழக்குகளில் கைதான பல முக்கியப் பிரமுகர்கள் இங்குதான் அடைக்கப்படுவார்கள். மாவோ யிஸ்ட் தீவிரவாதிகளும் இங்குதான் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது ஜெகன்மோகனை சிறை வளாகத்திலேயே கொல்ல சதி நடப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. மாவோயிஸ்ட்டுகள் அல்லது வேறு கும்பலால் இந்தச் சதித்திட்டம் தீட்டப்படலாம் என்கிற சந்தேகத்தில் ஜெகன் மோகன் ரெட்டிக்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொலை மிரட்டலுக்குப் பின், ஜெகன் மோகன் ரெட்டி 12 பேர் அடங்கிய சிறப்புப் பாதுகாப்புப் பிரிவினரின் மேற்பார்வையிலேயே எப்போதும் வைக்கப்பட்டிருக்கிறார். அறையைச் சுத்தம் செய்ய வருபவர்கள் கூட அதிகாரிகள் முன்னிலையிலேயே அனுமதிக்கப்படுகின்றனர். இந்தநிலையில் ஜெகனை சி.பி.ஐ. தங்களது பாதுகாப்பில் எடுத்து விசாரிக்க முற்பகல் 10 மணி முதல் வெளியில் அழைத்துச் சென்று விசாரணை நடத்திவிட்டு மாலையில் சிறையில் விடுவதுமாக இருப்பதால் பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (வ)

# எனக்கு எதிராகப் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன

## காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் மன்மோகன் கவலை


டில்லி, ஜூன் 6

கறுப்புப் பணம், ஊழல் பற்றிப் பொய்யான தகவல்களை தினமும் பரப்பி வருகின்றனர் என்று காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் பேசினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்க வேண்டிய கறுப்பு பணம் என்று தினந்தோறும் ஒரு நம்ப முடியாத தொகையைக் கூறி வருகின்றனர். இந்த விவகாரத்தில் பல்வேறு, நம்பத்தகாத நபர்களால் பொய்யான, தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இதைக் கட்சி தலைவர்கள், தொண்டர்கள் சேர்ந்து வலுவான வகையில் எதிர்த்து போராட வேண்டும். அரச நிர்வாகத்தில் உள்ளவர்கள் மோசடி செய்ததாகக் கூறப்படுகிற தொகைகள் நம்ப முடியாத அளவுக்கு உள்ளன. உண்மைக்கு அப்பால் எதுவுமே இருக்கக்கூடாது.

நம்பத்தகாத நபர்களால் தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இதை கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் சேர்ந்து வலுவான வகையில் எதிர்த்து போராட வேண்டும்.



காங்கிரஸ் கட்சியால் தான் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும். இதனால் வளர்ச்சி யின் பலனை ஒவ்வொரு குடிமகனும் அனுபவிக்க முடியும். சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களையும் காங்கிரஸ் கட்சி மட்டுமே அரவணைத் துச் செல்ல இயலும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவி ஏற்பதற்கு முன்பு இருந்ததை விட தற்போது வறுமை வேகமாக குறைந்து வருகிறது. பொருளாதார பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. சாமானிய மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற எல்லா முயற்சிகளையும் அரசு செய்கிறது.

உள்நாட்டுப் பாதுகாப்பு, ராணுவம், தொலைத்தொடர்பு, கல்வி, சமூக நலம், சுகாதாரத்துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றிருக்கிறோம். அதே நேரத்தில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் மிகுந்த மாவட்டங்கள் பிரச்சினைக்குரிய பகுதிகளாகவே நீடிக்கின்றன. உலகளவில் பொருளாதார மந்த நிலைக்கு மத்தியிலும், இந்தியா 2011-2012ஆம் ஆண்டில் 7 சதவீத வளர்ச்சி கண்டிருக்கிறது. இது உலகின் அதிகபட்ச வளர்ச்சிவீதத்தில் ஒன்று.

உலக பொருளாதாரத்தில் நிச்சயமற்ற நிலைமை உள்ளது. மேற்கு ஆசியாவில் நிச்சயமற்ற தன்மையால் கச்சா எண்ணெய் விலை போலவே பிற விலைகளும் உயர்ந்து வருகின்றன. இதெல்லாம் அரசுக்கு சவாலாக அமைந்துள்ளன - என்றார் அவர். (வ)



பாபா ராம்தேவ், டில்லியில் உள்ள பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் நிதின் கட்காரியின் இல்லத்துக்குச் சென்றார். அப்போது அவரை வரவேற்ற நிதின் கட்காரி, அவர் முன்பு குனிந்து ஆசிர்வாதம் பெற்றார்.

## மோடியால் மட்டுமே பா.ஜ.கவை மீண்டும் ஆட்சியில் அமர்த்த முடியும்

### ஆர்.எஸ்.எஸ்.கருத்து

டில்லி, ஜூன் 6

நரேந்திர மோடியை அவசரக் குடுக்கை என்று பாரதீய ஜனதாக் கட்சியின் அதிகாரபூர்வ இதழ் கமல் சந்தேஷ் தூற்றியிருந்த நிலையில், மோடியால் மட்டுமே பா.ஜ.கவை மீண்டும் மத்தியில் ஆட்சியில் அமர்த்த முடியும். அவர்தான் பிரதமர் பதவிக்கும் தகுதியானவர் என்று ஆர்.எஸ்.எஸ்ஸின் அதிகாரப்பூர்வ இதழான 'ஓர்கனைசர்' தெரிவித்தது.

1990களில் தனி மனிதராக, எப்படி பா.ஜ.கவை மத்தியில் ஆட்சியில் வாஜ்பாய் அமர்த்தினாரோ, அதே போல தனி மனிதராக பா.ஜ.கவை மீண்டும் ஆட்சியில் அமர்த்தக் கூடி திறமையும், தகுதியும் மோடிக்கு மட்டுமே உண்டு என்றும் 'ஓர்கனைசர்' புகழாரம் சூட்டியுள்ளது.

இதுகுறித்து ஆர்.எஸ்.எஸ்.மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டிலேயே மிகவும் பெரிய அளவில் மக்கள் செல்வாக்குடன் கூடிய, பிரபலமான தலைவர் மோடி மட்டுமே. 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மோடியே பா.ஜ.கவின் முகவரியாகத் திகழ்வார். தனி மனிதராக பா.ஜ.கவுக்கு உயர்வு கொடுக்கக் கூடிய ஒரே தலைவராக மோடி மட்டுமே இருக்கிறார். வாஜ்பாய் எப்படி பா.ஜ.கவை ஆட்சியில் அமர்த்தினாரோ அதேபோல மீண்டும் பா.ஜ.கவை ஆட்சியில் அமர்த்த மோடியால் மட்டுமே முடியும் - என்று அதில் கூறப்பட்டுள்ளது. (வ)

## ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானிக்க சோனியாவுக்கு காங்கிரஸ் அதிகாரம்

டில்லி, ஜூன் 6

ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாவுக்கு அதிகாரம் அளித்து அந்தக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி இதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

காங்கிரஸ் வேட்பாளராக நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் பெயரும், துணை ஜனாதிபதியாக ஹமீத் அன்சாரியின் பெயரும் பரிசீலிக்கப்பட்டு வருவதாக காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் இதுவரை யார் பெயரும் இறுதி செய்யப்படவில்லை என்று சோனியா கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

முன்னதாக ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள தி.மு.க., திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களிடம் காங்கிரஸ் தூதர்கள் ஆலோசனை நடத்தியிருந்தனர். இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளரை இறுதி செய்ய சோனியாவுக்கு அதிகாரம் அளித்து காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (வ)

## நித்தியானந்தாவின் நியமனம் சைவ மரபுகளுக்கான மிரட்டல்

### உலக சைவ சமய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றம்

சுவாமி நித்தியானந்தாவை மதுரை ஆதீனத்தின் இளைய சந்நிதானமாக நியமித்த செயல் சைவ மரபுக்கு விடுக்கப்பட்ட பெரும் மிரட்டலாகக் கருதப்படுகிறது என்று மலேசியாவில் நடைபெற்ற முதலாம் உலக சைவ சமய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம் வருமாறு:-

இந்தியத் துறவிகளில் ஒரு பிரிவினருக்கு ஆனந்தா என்ற அடைமொழியோடு தீட்சா நாமம் சூட்டப்படுமானால் அந்தத் துறவி வேதாந்த மரபைச் சார்ந்தவர் என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நித்தியானந்தாவின் தீட்சா நாமம் அவர் வேதாந்த மரபை ஏற்றுக் கொண்டவர் என்பதைக் காட்டுகிறது.

இப்படிப்பட்ட ஒருவர் திருக்கயிலாய மரபில் வரும் சைவ மடத்துக்கு தலைமை ஏற்பது மிகப்பெரிய முரண்பாடாகும். அவர் சைவ மரபை அறியாதவர் என்பதை சைவம் தொடர்பாக அவர் செய்த ஓர் உபதேசம் தெளிவாகக் காட்டிவிட்டது.

திருஞானசம்பந்தர் முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும் மதுரை ஆதீனம் சைவ சித்தாந்த பாரம்பரியத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்றும் திருஞான சம்பந்தரின் பாடல்களில் சைவ சித்தாந்த வார்த்தையோ சித்தாந்த கருத்தோ வரவில்லை என்றும் பேசியிருக்கிறார்.

இவர் கூறிய கருத்துகள் அனைத்தும் பிழையானவை என்பதை சைவ அறிஞர்கள் உடனே மறுத்துள்ளனர்.

இவ்வாறானவர்கள் மதுரை ஆதீனத்துக்கு இளைய சந்நிதானமாக நியமிக்கப்பட்டது சைவ மரபுக்கு மாறானது என்பதால் உலகெங்கும் உள்ள சைவர்கள் இந்த நியமனத்தை கண்டிக்க வேண்டும். இவ்வாறு அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## ஆந்திர அமைச்சருக்கு சி.பி.ஐ. அழைப்பாணை

ஹைதராபாத், ஜூன் 6

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஜெகன்மோகன் ரெட்டி வழக்குத் தொடர்பாக, ஆந்திர அமைச்சருக்கு மத்திய புலனாய்வுத்துறை அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இந்த வழக்கில் ஏற்கனவே மத்திய புலனாய்வுத் துறை இரு முறை ஜெகனிடம் விசாரணையை நடத்தியுள்ளது. இந்த நிலையில் ஆந்திர தகவல் தொழில்நுட்ப அமைச்சரான பொன்னால லட்சுமணையாவுக்கு சி.பி.ஐ. அழைப்பாணை அனுப்பி உள்ளது. (வ)

## பீஹாரில் விசக்காய்ச்சல்

## 19 குழந்தைகள் சாவு

பீஹாரில் பரவி வருகின்ற மர்மக் காய்ச்சலுக்கு இதுவரை 19 குழந்தைகள் உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பீஹாரில் பல மாவட்டங்களில் ஒருவிதமான விஷக்காய்ச்சல் பரவி வருகின்றது. இங்குள்ள கயா நகரில் இந்தக் காய்ச்சல் தாக்கிய குழந்தைகளில் 8 பேர் சிகிச்சை பயனின்றி இறந்தனர். மேலும் 6 குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முசாபர்பூர் மாவட்டத்தில் மட்டும் மர்மக் காய்ச்சலுக்கு 10 குழந்தைகள் உயிரிழந்து விட்டனர். மேலும் 10 குழந்தைகள் பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர முசாபர்பூர் அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு குழந்தையும் உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (வ)

கடந்த வருடமும் இதேபோன்று பரவிய மர்மக் காய்ச்சலால் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தனர்.

## அஸாமில் வெள்ளப்பெருக்கு

இந்தியாவின் வடகிழக்கு மாநிலம் அசாமில் கடந்த 2 தினங்களாகப் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி, 30 கிராமங்கள் தத்தளிக்கின்றன.

அசாமின் உதால்குரி மாவட்டத்தில் கடந்த 2 தினங்களாகப் பெய்து வரும் கன மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக 20 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பாடசாலைகளிலும், உயரமான பகுதிகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏராளமான கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன என்று கூறப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல்கள் தீவிரமடைகின்றன

## சிரியாவில் 80இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சாவு

ஹோம்ஸ், ஜூன் 6

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதல்களில் 80 க்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் பாதுகாப்புக் காவலரண்களை இலக்கு வைத்து இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கிளர்ச்சியாளர்களுக்குச் சார்பான இணையதளங்கள் குறிப்பிடுகின்றன.

டமஸ்கஸ் மற்றும் இட்லிப் உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள காவலரண்களே தாக்கப்பட்டுள்ளன.

அரச படையினருக்கு இதன்போது பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என கூறப்படுகின்றது.

சிரிய ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்கள் தொடரும் நிலையில், கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. இதேவேளை சிரியாவில் தொடரும் நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ரஷ்யா இணைந்து செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.



**இராணுவத்தினர் பாதுகாப்புக் காவலரண்களை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என கிளர்ச்சியாளர்களுக்கு சார்பான இணையதளங்கள் குறிப்பிடுகின்றன.**

# ஜன்னல்களை சுத்தம் செய்ய பணிப் பெண்களுக்குத் தடை

## சிங்கப்பூரில் விதிமுறை

சிங்கப்பூர், ஜூன் 6

சிங்கப்பூரில் ஜன்னல்களைச் சுத்தம் செய்யும்போது, பணிப் பெண்கள் தவறி விழுந்து உயிரிழப்பதால், அவர்கள் இதுபோன்ற பணிகளைச் செய்ய அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது. சிங்கப்பூரில், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த, இரண்டு லட்சம் பெண்கள் வீட்டு வேலை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பல அடுக்குகள் கொண்ட குடியிருப்புகளில் வேலை செய்யும் பணிப் பெண்கள், பல்கனியில் துணி காயவைக்கும் போதும், ஜன்னல்களைச் சுத்தம் செய்யும் போதும், தவறி கீழே விழுந்து விடுகின்றனர். இந்த ஆண்டில் மட்டும் ஒன்பது பெண்கள் இதுபோன்று கீழே விழுந்துள்ளனர். இவர்களில், ஏழு பேர் இறந்து விட்டனர்.

நேற்றுமுன்தினம் இந்தோனேசியாவைச் சேர்ந்த, 29 வயது பணிப் பெண், ஜன்னலை சுத்தம் செய்யும் போது, 12ஆவது மாடியில் இருந்து, கீழே விழுந்த போது, கீழ் மாடியில் இருந்தவர்கள் அவரைக் காப்பாற்றி விட்டனர். அடிக்கடி இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதால், ஜன்னலை சுத்தம் செய்யும் பணியில், உரிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு இல்லாமல் பணிப் பெண்கள் இந்த வேலையைச் செய்யக்கூடாது என, சிங்கப்பூர் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# நேட்டோவிடமிருந்து வரி அறவீடு

இஸ்லாமாபாத், ஜூன் 6

ஆப்கானிஸ்தானுக்கு எரிபொருள்களை ஏற்றிச் செல்லும் நேட்டோ படையினரின் வாகனங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா கட்டணத்தை வரியாகப் பெற பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையில் நேட்டோ படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான எரிபொருள்கள் வாகன கொள்கலன்கள் மூலம் பாகிஸ்தான் வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நேட்டோ படைகள், தவறுதலாக வான்வழித் தாக்குதல் நடத்தியதில், 24 பாகிஸ்தானிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானுக்குப் பொருள்களைக் கொண்டு செல்லும் நெடுஞ்சாலையைப் பாகிஸ்தான் மூடிவிட்டது. இது குறித்து, தேசிய நெடுஞ்சாலை ஆணையத் தலைவர் முகமது அலி கர்தேசி குறிப்பிடுகையில், நேட்டோ வாகனங்கள் கடந்த 10 ஆண்டுகளாகப் பாகிஸ்தான் நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்தியதில் 100 பில்லியன் டொலர் அளவுக்கு சாலைகள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சாலைகளைச் செப்பனிட 136 கோடி ரூபா செலவாகும். எனவே, இந்த செலவை ஈடுகட்டும் வகையில், நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் ஒவ்வொரு நேட்டோ வாகனத்துக்கும் கணிசமான கட்டணம் வரியாகப் பெற வேண்டும், என பரிந்துரை செய்திருந்தார்.

ஆப்கானிஸ்தானுக்கு நேட்டோ வாகனங்கள் செல்லும் சாலையைத் திறந்து விடும்படி அமெரிக்கா தொடர்ந்து வற்புறுத்தி வருவதால், பாகிஸ்தானின் சாலையைப் பயன்படுத்தும், நேட்டோ வாகனம் ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபா வரை கட்டணம் பெற திட்டமிட்டுள்ளது என, பாகிஸ்தான் அரசு அதிகாரி தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் இராணுவத்தினரைக் கொன்ற நேட்டோ படைகளுக்காக, மீண்டும் ஆப்கான் பாதையைத் திறக்கக்கூடாது என, ஜமாத் உத் தாவா அமைப்பின் தலைவர் ஹபீஸ் முகமது சயீது உள்ளிட்ட 40க்கும் அதிகமான தீவிரவாதத் தலைவர்கள், அரசை வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் நிர்ப்பந்தத்துக்குப் பாகிஸ்தான் அடிபணிந்து விட்டதாகக் கூறும் தீவிரவாதத் தலைவர்கள், பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையை எதிர்த்து, போராட்டம் நடத்தப் போவதாக எச்சரித்துள்ளனர்.

## ஜகார்த்தாவில் அதிர்வு

ஜகார்த்தா, ஜூன் 6


இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 6.1 அலகாகப் பதிவானது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந்தோனேசியாவின் தென்மேற்குப் பகுதியில் 121 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள சுகபூமி எனுமிடத்தில் உள்ளூர் நேரப்படி 11 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

நிலத்திலிருந்து 24 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவானதாக இந்தோனேசிய நிலவியல் பதிவு மையம் மற்றும் நில இயற்பியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் 214 கி.மீ. தூரத்தில் உள்ள தலைநகர் ஜகார்த்தாவில் உணரப்பட்டது என தகவல்கள் தெரிவிக்கின்றன

# புற்றுநோய் முற்றியது




லண்டன், ஜூன் 6

57 வயதான வெனிசுலா ஜனாதிபதி சவேஸ் புற்றுநோயால் அவதிப்பட்டு வருகிறார். அவர் இறுதிக்கட்ட நிலையில் உள்ளார் எனவும் சில மாதங்கள் மட்டும் அவரால் உயிர் வாழ முடியும் எனவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிகிச்சை அளித்துள்ள போதிலும் அவரது உடல் நிலையைப் பொறுத்து ஆயுள் அமையும். மேலும் அவர் எலும்பு புற்று நோயாலும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார். இந்த நிலையில் வெனிசுலா நாட்டில் நடைபெறவுள்ள தேர்தலில் 3 ஆவது முறையாகப் போட்டியிட பதிவு செய்துள்ளார். ஆனால் வரும் ஒக்டோபரில் தேர்தலுக்கான முடிவுகள் வெளியாகும். அந்த வேளையில் அவர் உயிருடன் இருப்பது சந்தேகமே என அவரது மருத்துவ அறிக்கை தெரிவிக்கிறது.

# மலையிலிருந்து உருண்டது பஸ்

## 23 பேர் சாவு



இஸ்லாமாபாத், ஜூன் 6

பாகிஸ்தானில் மலைச் சரிவில் பஸ் மலைச்சரிவில் புரண்டதில், திருமண வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த, 23 பேர் உயிரிழந்தனர்.

ராவல்பிண்டி மாவட்டம் சுகுதா என்ற இடத்திலிருந்து, 100 பேருடன் நேற்றுமுன்தினம் புறப்பட்ட பஸ், சக்வால் என்ற இடத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. திருமணத்தில் கலந்து கொண்டவர்கள் இந்த பஸ்ஸில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர். மலை பாதையில் சென்று கொண்டிருந்த பஸ், திடீரென நிலை தடுமாறி மலை சரிவில் உருண்டது. இந்த விபத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட, 23 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர். இந்த பஸ் விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என, ராவல்பிண்டி பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

**இந்த விபத்தில் திருமண வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த, 23 பேர் உயிரிழந்தனர்.**

# ஆளில்லா விமானத் தாக்குதல் பாகிஸ்தானில் 8ஆவது முறை

இஸ்லாமாபாத், ஜூன் 6

பாகிஸ்தானில் வஜிரிஸ்தானின் வடக்குப் பகுதியில் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் 15 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

மிர் அலி பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டின் சுற்றுச்சுவர் மற்றும் வாகனம் மீது கடந்த திங்கட்கிழமை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் பலர் காயமடைந்தனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. வஜிரிஸ்தான் பகுதியானது அல்-குவைதா மற்றும் தலிபான் தீவிரவாதிகளுக்குப் பாதுகாப்பான இடமாகக் கருதப்படுகிறது. அதனால் இந்தப் பகுதியில் ஆளில்லா விமானத் தாக்குதலை அமெரிக்கா நடத்தி வருகிறது.

வஜிரிஸ்தானின் தெற்குப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 10 தீவிரவாதிகள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற தாக்குதல்கள் மக்களை அச்சமடையச் செய்துள்ளது என அந்தப் பகுதியினர் தெரிவித்தனர்.

சிக்காக்கோவில் மே 21ஆம் திகதி நடந்த நேட்டோ மாநாட்டுக்குப் பின் வஜிரிஸ்தான் பகுதியில் இதுவரை 8ஆவது முறையாக ஆளில்லா விமானத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மகாராணியின் கணவர் மருத்துவமனையில்

பிரிட்டன் மகாராணி எலிசபெத்தின் கணவரும் கோமகன் பிலிப் நேற்று முன்தினம் இடம்பெற்ற மகாராணியின் வைரவிழா கொண்டாட்டங்களின் போது சுகவீனமுற்ற நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவருக்கு இப்போது வயது 90. கடந்த திங்கள் கிழமை தேம்ஸ் நதியில் இடம்பெற்ற படகுச் சவாரி நிகழ்வில் 4 மணித்தியாலங்கள் மழையிலும் குளிரிலும் தொடர்ச்சியாக நின்ற கோமகனின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது எனவும் இவருக்கு 6 மாதங்களுக்கு முன்னர் இதயத்தில் சத்திர சிகிச்சை ஒன்று இடம்பெற்றது எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



[illegible] கால்களை இழந்த அமெரிக்க இராணுவப் பிரிவினருக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் நியூயோர்க்கில் நடைபெற்றன. அதில் போரின்போது கால்களை இழந்து மாற்றுக்கால்களுடன் அணிவகுப்புக்காக வந்திருந்த இராணுவத்தினரின் கால்களைப் பார்வையிடுகிறான் அமெரிக்கச் சிறுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலயம் மீது மோதியது தற்கொலை வாகனம்

## 14 பேர் உடல் சிதறிச் சாவு




பவுஸி, ஜூன் 6

நைஜீரியாவில், தேவாலயம் மீது வெடிகுண்டுகள் நிரப்பிய காரை மோதி தற்கொலைப் படை தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 14 பேர் பரிதாபமாக உடல் சிதறி உயிரிழந்தனர். நைஜீரியாவின் வடக்கு பகுதியில் உள்ள பவுஸியில், லிவிங் பெய்த் தேவாலயம் உள்ளது.

இந்தத் தேவாலயத்தில் நடைபெறவிருந்த வைபவம் ஒன்றுக்காக முன்னாயத்தங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் கிறிஸ்தவர்கள் மீது தொடர்ந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதால் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அப்போது வேகமாக ஒரு கார் தேவாலயத்தை நோக்கிச் சென்றது. அதைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். ஆனால், கார் நிற்காமல் வேகமாகச் சென்று தேவாலயத்தின் மீது மோதி வெடித்தது.

இதுகுறித்துப் பொலிஸ் ஆணையாளர் முகமது லேடன் கூறுகையில், வெடிகுண்டு நிரப்பப்பட்ட காரை தேவாலயத்தின் மீது மோதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 14 கிறிஸ்தவர்கள் இறந்து விட்டனர். இந்த் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. எனினும், போகோ ஹரம் என்ற தீவிரவாத அமைப்புதான் இந்தச் சதியில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்றார். நைஜீரியாவை முஸ்லிம் நாடாக அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பல ஆண்டுகளாக போகோ ஹரம் என்ற அமைப்பு வன்முறையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## உலங்குவானூர்தியாக மாறிய பூனை



நெதர்லாந்தைச் சேர்ந்த கலைஞர் ஒருவர் தனது வளர்ப்புப் பூனை இறந்தவுடன் அதன் உடலைப் பறக்கும் உலங்கு வானூர்தியாக மாற்றியுள்ளார்.

போர்ட் ஜேசன் எனும் இந்தக் கலைஞர் வளர்த்த ஒலிவர் எனும் பூனை, காரொன்றில் அடிபட்டு இறந்தது.

அதன்பின் பூனையின் உடலைப் புதைக்க விரும்பாத ஜேஸன், அதைப் பதப்படுத்தி, விசேட பறக்கும் இயந்திரங்களைப் பொருத்தி, உலங்குவானூர்தியாக மாற்றியுள்ளார்.

விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்களில் ஒருவரான, ஒலிவர் ரைட்டின் நினைவாகத் தனது பூனைக்கு "ஒலிவர்" என ஜேஸன் பெயரிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போது தான் வடிவமைத்த உலங்கு வானூர்திக்கு ஒலிவர் எனப் பெயரிட்டுள்ளார்.

"ஒலிவர்" விரைவில் பறவைகளுடன் பறக்கும் எனக் கூறியுள்ள ஜேஸன், ஆம்ஸ்…ர்…டாம் நகரில் நடைபெறவுள்ள கண்காட்சி ஒன்றிலும் அதைக் காட்சிப்படுத்தத் திட்டமிட்டுள்ளார்.

## கொலம்பியப் பெண்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

### வல்லுறவை எதிர்த்து



கொலம்பியாவில் பாலியல் வல்லுறவுகளுக்கு எதிராக நூற்றுக்கணக்கான பெண்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்யும் ரோஸா எல்விரா செலி எனும் பெண், கடந்த 24 ஆம் திகதி தாக்கப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டமை கொலம்பியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த நாட்டில் கடந்த வருடம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளால் 51,000 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் கொலம்பிய தலைநகர் பொகோட்டாவில் பெண்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.




**கைதடி மேற்கில் காணி விற்பனைக்கு**

கைதடி மேற்கு - ஊரியான் பகுதியில் 60 நிலப்பரப்பு காணி விற்பனைக்குண்டு.

★ சரஸ்வதி சனசமூக நிலையத்திற்கு அருகில் கைதடி, கோப்பாய் வீதியில் அமைந்துள்ளது.

0041813282124

தொடர்பு : 021 3737103, 077 3993011

(18992)(6-7-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி **இராசம்மா இரத்தினமணி**

தோற்றம்
05★03★1938

மறைவு
07★05★2012



எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுத்துயரில் பங்கேற்று வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் எமக்கு ஆறுதலும், உதவியும் நல்கிய உறவுகளுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்வதோடு இன்று (06.06.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

நாவலர் பதி
அச்சுவேலி.

குடும்பத்தினர்

(18868)(45.6.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(27)

நம்முடைய விருப்பங்களையும் தேர்வுகளையும், செயல்களையும், எதிர் வினைகளையும், பொறுத்தே நம் வாழ்க்கை அமைகிறது.

*'வாழ்விற்கான முழுப் பொறுப்பையும்*
*ஏற்கிறவராயிருங்கள் இந்த வாழ்க்கை*
*எப்படி இருக்கிறது எப்படி இருக்க வேண்டும்'*

என்பதை எண்ணிப்பாருங்கள்?

நீங்கள் பொறுப்புணர்வோடு செயல்படும் பட்சத்தில் உங்களுடைய நிலைமைக்கு அடுத்தவரைக் குறை கூறமாட்டீர்கள். எவரிடத்தும், எது காரணம் பற்றியும் சீற்றம் கொள்ளமாட்டீர்கள். வாழ்க்கை ஒரு வரம், சாபமல்ல. நீங்கள் எண்ணிப் பார்த்து இன்புறும்படியாய் ஏராளமான நன்மைகளைக் கடவுள் உங்களுக்கு வழங்கியிருக்கிறார்.

உங்களுடைய உடைமைகளை, உங்கள் தகுதிகளை, உங்களுக்கு அமைந்திருக்கும் மனைவி மக்களை, உங்கள் சிநேக வட்டத்தை நீங்கள் அடைந்திருக்கும் உயர்வுகளை எண்ணி மனநிறைவு கொள்ளுங்கள்.

*'இல்லாததற்காக வருந்துவதை விட*
*இருப்பது குறித்து மகிழ்ச்சியடையுங்கள்'*

நீங்கள் நியாயமாக நடந்து கொள்ளுங்கள். யாருக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்காது. உங்களிடம் நேர்மை இருந்தால் எது பற்றியும் அஞ்சவேண்டியிருக்காது, முறையாகச் செயல்படுகிறவர் விளைவுகளைப் பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை. அஞ்சும் நிலைதான் ஒருவரைக் கவலைக்குள்ளாக்கும்.

*'உங்களை நேசியுங்கள்*
*உங்கள் வேலையை நேசியுங்கள்*
*உங்களுடைய சுற்றுப் புறத்தையும்*
*மனிதர்களையும் நேசியுங்கள்!''*
*உங்கள் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிடும்.*

மகாத்மாகாந்தி இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்,' மகிழ்ச்சி என்பது உங்களுடைய எண்ணமும், சொல்லும், செயலும் இசைவாகயிருப்பதன் விளைவு' என்று.

*'நல்லதை எண்ணுங்கள்,*
*நல்லதைச் சொல்லுங்கள்,*
*நல்லதையே செய்து*
*நன்றாக வாழுங்கள்'*

சிலர் என்றோ மகிழ்ச்சியாக இருப்பதற்காக உழைக்கிறார்கள். உழையுங்கள் நிறைய உழையுங்கள். அதற்காக இன்றைய மகிழ்ச்சியை ஏன் இழக்க வேண்டும்? மகிழ்ச்சிக்குரிய தருணங்களை ஏன் தவறவிட வேண்டும்?

ஸ்ரீ ரவிசங்கர்ஜி வெகு அழகாய் சொல்வார், 'நீங்கள் இரவு முழுவதையும் படுக்கையை அலங்கரிப்பதிலேயே செலவிட்டால் நீங்கள் எப்போது உறங்குவது?' என்று. நீங்கள் மகிழ்ச்சியாக இருந்த தருணங்களே உங்கள் வாழ்க்கையை அர்த்தப்படுத்தும். 'என் குறிக்கோளை அடைந்தால் தான் எனக்கு மகிழ்ச்சி' என்கிறார் ஒருவர்.

வாழ்க்கையில் எது வேண்டுமானாலும் நடக்கட்டும். எதுவும் என்னுடைய மகிழ்ச்சியைப் பாதிக்க முடியாது. மகிழ்ச்சி எனது சுவாசம் என்கிறார் மற்றொருவர். நீங்கள் எப்படி? நான் சொல்வதே சரி, நான் எதைச் செய்தாலும் அது சரியாக இருக்கும் என்று வாதிடுவீர்கள். நீங்கள் சொல்வது தவறு. உங்களுடைய கருத்தை நான் ஏற்க முடியாது என்று முரண்படுவீர்கள்.

தன்னுடைய சொல்லே இறுதியாய் இருக்க வேண்டும் என்று வாதிடுகிறவர் எண்ணுவார். முரண்படுகிறவரின் நோக்கம் தன் அறியாமையை, தன்னிடம் உள்ள குறையை மூடிமறைப்பதும் அடுத்தவருடைய அறிவை, திறமையை ஏற்க மறுப்பதுமாகும்.

அதில் நேரமும், சக்தியும் வீணாகும். நட்பு கேள்விக் குறியாகி விடும். வேண்டாத கவலை வந்து சேரும். அதைவிட இணக்க சுபாவத்துடன் நடந்து கொண்டால், எதிராளியின் தவறுகளை நயமிக்க முறையில் கனிவுடன் சுட்டிக் காட்டினால், இருவருடைய மகிழ்ச்சியும் கெடாது தானே. எப்படி நடந்து கொள்வது என்பதை நீங்கள் தீர்மானித்துக் கொள்ளுங்கள். எல்லாரிடமும், எல்லாருடைய செயல்களிலும் நூறு சதவீத கச்சிதத்தை எதிர் பார்க்க முடியாது. கொஞ்சம் முன்னே பின்னே தான் இருக்கும்.

*'நூறு சதவீத அறிவு,*
*நூறு சதவீத அழகு,*
*நூறு சதவீத நேர்மை.'*

'நூறு சதவீத திறமை சாத்தியமில்லை.' குறைகள் இருக்கும், குறைகளோடு ஏற்றுக் கொள்ளத் தயாராயிருந்தால் மகிழ்ச்சி குறையாது. மனிதர்களிடம் உண்மையைப் போலவே பொய்யும், அறிவைப் போலவே முட்டாள் தனமும், அழகைப் போலவே அருவருப்பும் இருக்கத்தான் செய்யும். ஒரு வினோத கலவையாகவே மனிதர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய மனமும், வாழ்க்கையும் கூட.

*'முழு நிலவைப் போலவே*
*அழகாய்த்தான் இருக்கிறது*
*மூன்றாம் பிறையும்!'*

குழந்தையிடம் உள்ள பிரியத்தில், அது போடுகிற தாறுமாறான கோடுகளை ஓவியமாய் பார்த்து மகிழ்கிறோமில்லையா, அந்த நேசிப்புடன் வாழ்க்கையை அணுகுங்கள், எல்லாமே மகிழ்ச்சியளிப்பதாய் இருக்கும்.

*'இயற்கையை நேசியுங்கள்*
*உலகம் அழகாய் இருக்கிறது*
*இரசிக்கத் தெரிந்தவர்களுக்கு.*
*வாழ்க்கை இனிதாய் இருக்கிறது.*
*வாழத் தெரிந்தவர்களுக்கு'*

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்த ஆலயங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இந்து மத குருமார் ஒன்றியத் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ். மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. போருக்குப் பின்னரான நிலையில் சமூக கலாசார சீரழிவில் சிறுவர் துஷ்பிரயோகமும் அதிகரித்துக் காணப்படுகிறது.

எவரும் எம்மைத் தட்டிக் கேட்க மாட்டார்கள் என்ற துணிவு, துஷ்பிரயோகங்களை மேற்கொள்பவர்களுக்கு இருக்கிறது. இவற்றை மேலும் மேலும் தொடரவிடாமல் தடுப்பதற்கான விழிப்புணர்வை சமூகத்தில் நாம் ஏற்படுத்த வேண்டும் என சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நல்லூர் செட்டித் தெரு வீதியில் உள்ள தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஒன்றியத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

தற்போது ஆலய திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. ஆலயங்களில் ஆலயத்தின் நிர்வாகிகள் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

திருவிழாக் காலங்களில் ஆலயங்களில் ஏராளமானோர் கலந்து கொள்வர். அங்கு கூடியிருக்கும் மக்கள் மத்தியில் ஒரு சில நிமிடங்கள் துஷ்பிரயோகங்கள் பற்றி விளக்கமான உரை நிகழ்த்தல், பாடசாலைகள் தோறும் இதுபற்றி மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அல்லது மக்கள் கூடுகின்ற இடங்களில் இதுபற்றி விளக்கமான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டால் ஓரளவேனும் இதனைக் கட்டுப்படுத்த வாய்ப்பிருக்கும் என்றார்.

இந்தக் கலந்துரையாடலில், தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையைச் சேர்ந்த மாவட்ட இணைப்பாளர் கௌதமன், மாவட்டச் செயலாளர், யாழ்.மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர், மாதர் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் மற்றும் மனித உரிமைகள் இல்லத்தைச் சேர்ந்த யாழ்.மாவட்ட உள்ளூர் அலுவலர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் தெரிவித்தனர். (எ-29)

# கணித புதிர்ப் போட்டி முடிவுகள்

வடமராட்சி வலயமட்ட தமிழ் மொழி மூல கணித புதிர்ப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விவரம் வருமாறு:-

தரம்-6

முதலாமிடம்-இராசலிங்கம் துஷாரகன்-ஹாட்லிக் கல்லூரி, இரண்டாம் இடம் -சிவகுமார் சயந்தன் -ஹாட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம் - க.தனலோஜினா -கம்பர் மலை வித்தியாலயம்

தரம்-7

முதலாமிடம் -சிவனேசன் ஜதுர்ஷன் -ஹாட்லிக் கல்லூரி, இரண்டாம் இடம் -ரவீந்திரன் கஜிராஜ் -உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, மூன்றாம் இடம் -ஜெயராசா விபுலன் -ஹாட்லிக் கல்லூரி,

தரம்-8

முதலாமிடம் -யோகராசா நிரோஜன் -ஹாட்லிக் கல்லூரி, இரண்டாம் இடம் -சிவசண்முகமூர்த்தி சிவதர்சன்- ஹாட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம் -அருள்ராசா இமெல்டா -வட இந்து மகளிர் கல்லூரி

தரம்-9

முதலாமிடம் -தபேந்திரன் அபிஷேகா -நெல்லியடி ம.ம.வித்தியாலயம், இரண்டாம் இடம் -கருணாநிதி ராகுலன்- ஹாட்லிக் கல்லூரி, விஜயராஜா சாளினி -கரணவாய்.ம.வித்தியாலயம்

தரம்-10

முதலாமிடம் -சுப்பிரமணியம் வரதராஜன் -உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, இரண்டாம் இடம் -யோகச்சந்திரன் அபிராமி -சிதம்பரக் கல்லூரி, முத்துராசா சுபிர்ணா -ஞானசாரியார் கல்லூரி

தரம்-11

முதலாமிடம் -கோபிகா வேணி கோபாலவாணிதாசன் -மெதடிஸ் பெ.உ.பாடசாலை, இரண்டாம் இடம்- கலாமணி மதனாகரன் -நெல்லியடி ம.ம.வித்தியாலயம், பாஸ்கரன் நிஷாந் -உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, ஆங்கில மொழி மூல புதிர்ப் போட்டி முடிவுகள்

தரம்-6

முதலாமிடம் -இராஜகுமார் விவேகா நெல்லியடி ம.ம.வித்தியாலயம், கிருஷ்ணராசன் நஜிதா - வட இந்து மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம் -கோபாலகிருஷ்ணன் கிருஷாந் -ஹாட்லிக் கல்லூரி

தரம்-7

முதலாமிடம் -குகனேந்திரன் மாலன்பன் -ஹாட்லிக் கல்லூரி, நல்லநாதன் விதுர்ஷன் -ஹாட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம்-ஜதிஸ்வர்ஜா வேணிகோபாலவாணி தாசன்- வட இந்து மகளிர் கல்லூரி.

தரம்-8

முதலாமிடம்-புஷ்பாகரன் பிருந்தாபன்-விக்னேஸ்வரா கல்லூரி, இரண்டாம் இடம்-பவானிஹா பிரேமகாந்தன்- மெதடிஸ்த பெ.உ. பாடசாலை, மூன்றாமிடம்- சண்முகதாசன் சஞ்சித்-ஹாட்லிக் கல்லூரி.

தரம்-9

முதலாமிடம்-பாலேஸ்வரன் பவித்ரா-நெல்லியடி ம.ம.வித்தியாலயம், இரண்டாம் இடம்-சங்கீதா ஆனந்தமூர்த்தி- மெதடிஸ்த பெ.உ. பாடசாலை, மூன்றாமிடம்-சங்கீர்த்தனா மோகன்-வடமராட்சி ம.கல்லூரி.

தரம்-10

முதலாமிடம்- மனோகரன் துஷிதா- நெல்லியடி ம.ம.வித்தியாலயம் , இரண்டாம் இடம்-தர்ஷனா கிருஷ்ணபிள்ளை- வடமராட்சி ம. கல்லூரி, மூன்றாமிடம்- ரவிக்குமார் நிருபரன்-ஹாட்லிக் கல்லூரி.

தரம்-11

முதலாமிடம்-கனகசபை மகிந்தன்-ஹாட்லிக் கல்லூரி, இரண்டாம் இடம்-லிங்கரட்ணம் விதுர்ஷா- நெல்லியடி ம.ம.வித்தியாலயம், மூன்றாமிடம்-சாம்பவி ராஜேஸ்வரன்-வடமராட்சி ம.கல்லூரி. (எ)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான பொதுச் சபைக் கூட்டம் தும்பளை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. இதில் புதிய ஆண்டுக்கான நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- ஆ.வடிவேலு, உப தலைவர்- இ.அன்ரனி, செயலாளர்- மா.கண்ணதாசன், உபசெயலாளர்- வ.பாலச்சந்திரன், பொருளாளர்- வே.இளவேந்தன்.

நிர்வாக உறுப்பினர்களாக- ஆ.மகேசன், வே.கபிரியல் பீற்றர், ச.கவிதா, ச.சிறிகௌரி, த.மாலதி, ம.சியாமளாவும் கணக்காய்வாளர் : க.கிருபாகரனும் ஆவார். (எ-253)

* * *

சண்டிலிப்பாய் மத்தி பகல் பராமரிப்பு நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது.

நிர்வாக உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டோர் வருமாறு:-

தலைவர்- க.தம்பாப்பிள்ளை, செயலாளர்- க.தேவராசா, பொருளாளர்- சோ.பத்மநேசன் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் மேலும் 8 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-100)

## தவிசாளர் தெரிவு

பருத்தித்துறை மத்தியஸ்தர் சபையின் முன்னைய தவிசாளர் ஆ.வடிவேலு இராஜினாமாச் செய்ததை அடுத்து என்.குணசீலன் தவிசாளராகவும் என்.சின்னையா உப தவிசாளராகவும் நீதி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த முதலாம் திகதியில் இருந்து இருவரும் பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (எ-253)

# பேரிடரிலிருந்து மக்களைக் காக்க அனைவரும் முன்வரவேண்டும்

## யாழ். அரச அதிபர் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 6

சுனாமி மற்றும் வெள்ளப் பெருக்கு போன்ற பேரிடர்கள் தற்போது அடிக்கடி நாடுதழுவிய ரீதியில் இடம்பெறுகின்றன.

இதற்கு ஏற்ற வகையில் மாவட்டத்தில் உள்ள அனைவரும் பேரிடருக்கு முகம் கொடுத்து மக்களை அழிவில் இருந்து பாதுகாக்க முன்வர வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டம் அண்மையில் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிய போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மாவட்டத்திற்கு 18.3 மில்லியன் ரூபா நிதி இந்த ஆண்டு கிடைத்துள்ளது. ஆனால் கிராமிய மட்டத்தில் இருந்து தெரிவுகள் இடம்பெறாமல் பிரதேச செயலர்கள், துறைசார் தலைவர்கள் முன்மொழிவுகள், திட்டங்களைத் தந்துள்ளார்கள்.

இந்தத் திட்டங்களை மீளவும் பரிசீலித்து விரைவில் கிராமிய மட்ட இடர் முகாமைத்துவக் குழுவுடன் ஒருங்கிணைத்து முன்மொழிவுகளை முன்னுரிமை ஒழுங்கில் தருமாறு கோரியுள்ளேன் - என்றார்.

யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பேராசிரியர் வி.கே கணேசலிங்கம் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கினர். சுனாமி பேரழிவு தொடர்பான காட்சிகளும் காண்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் திணைக்களத் தலைவர், பிரதேச செயலர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், சபை தலைவர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் என 50 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை சுஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# எதிர்காலத்தைக் காக்க என்ன செய்யப்போகிறோம்?

போர் - ஆயுதச் சண்டை - முடிவடைந்து மூன்று ஆண்டுகளாகிவிட்டபோதும் தமிழர் தேசத்தில் போரின் எச்சங்களால் ஏற்படும் உயிரிழப்புக்கள் குறைந்த பாடில்லை.

பளையில் இரு சின்னஞ்சிறுசுகள் வெடிபொருளுடன் விளையாடி உயிர் பிரிந்த சோகம் அடங்குவதற்குள் நயினாதீவில் மீண்டும் ஒரு மாணவனின் உயிர் காவு கொள்ளப்பட்டிருக்கிறது.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பான பகுதிகள் என எண்ணப்பட்ட இடங்களிலேயே வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்று உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன என்பது அதி தீவிர கவனத்துக்குரியது.

மீண்டும் மீண்டும் ஒரே தவறுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை அறிந்திருந்தபோதும் தடுக்கும் வழியறியாது திகைத்து நிற்க வேண்டியிருக்கிறது தமிழ் இனம்.

இத்தகைய உயிரிழப்புக்கள் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை என்பதும் நிதர்சனமாகத் தெரிகிறது.

நயினாதீவு நேரடியான சண்டையைக் கண்டு கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. அது தவிர அண்மைக் காலங்களில் அதிகளவில் சனநடமாட்டம் மிக்க பகுதியாகவும் அது இருக்கிறது. ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து போகிறார்கள். அத்தகைய பகுதியிலேயே 15 வயது மாணவன் வெடிபொருளினால் உயிரிழந்திருக்கிறான்.

கடலில் மிதந்து வந்து கரையொதுங்கிய ஏதோவொரு வெடிபொருளை எடுத்து விளையாட முயன்றபோது அது வெடித்ததாக அதிகாரிகள் கூறுகிறார்கள்.

இப்படி 15 வருடங்களாக நேரடியான போர் நடந்திராத பகுதியிலேயே வெடிபொருள் அபாயம் முற்றாக நீங்கிவிடவில்லை என்கிறபோது, வன்னியில் மிகப்பெரிய போர் - முழுக்க முழுக்க கனரக ஆயுதங்களின் சூட்டாதரவில் மட்டும் தங்கியிருந்த போர் - நடந்த பகுதிகளில் வெடிபொருள் அபாயம் இதைவிடப் பன்மடங்கு அதிகமாக இருக்கும் என்பதைக் கணிப்பது கடினமானதல்ல.

அதிலும் தற்போதைய நிலையில், வன்னியில் இடம்பெற்றுவரும் மீளக்குடியமர்வுகள் முற்றுமுழுதாக கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதிகளிலேயே இடம்பெற்று வருகின்றன. இங்கெல்லாம் மக்கள் நடமாடும் இடங்களுக்கு வெகு அருகிலேயே வெடிபொருள்களைத் தாராளமாகக் காணமுடிகிறது. எனவே அங்கெல்லாம் சிறுவர்களுக்கு - எதிர்காலத் தமிழ் சந்ததிக்கு - சாவுக்கான ஆபத்து பன்மடங்கானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏற்கனவே வன்னியில் அத்தகைய சம்பவங்கள் சில நடந்தேறிவிட்டன. ஆனாலும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையோ முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையோ போதியளவில் காணவில்லை. பொருள் (Materials) உதவி ஒன்றையே வன்னியில் முதன்மைப்படுத்தும் அரசு, இத்தகைய விழிப்புணர்வுச் செயற்பாடுகளைப் புறந்தள்ளுகிறது என்ற உண்மையும் கண்கூடு.

கண்ணிவெடி அகற்றலுக்கான உதவி நிதிகள் நிறுத்தப்படுகின்றன என்பதால் நிறுவனங்களும் மூடை முடிச்சுகளுடன் ஒவ்வொன்றாகக் கிளம்ப ஆரம்பித்துவிட்டன. இந்த நிலையில் போரின் எச்சங்கள் இன்னும் 20 வருடங்களுக்கு என்றாலும் தமிழர்களைக் காவு வாங்குவதை நிறுத்தப்போவதில்லை என்கிற யதார்த்தம் முகத்திலறைந்தபோதும் என்ன செய்யப் போகிறோம்? புரியவில்லை!

# நில்! கவனி!! செல்லாதே!!!

செந்தூரி

உலகில் ஐந்து வகையான ஒடுக்கல்கள் இருப்பதை பெரும்பாகப் படுத்தலாம். நிறவெறி, ஆணாதிக்கம், சாதி, வர்க்கம், இனம். முதல் நான்கினாலும் ஒடுக்கப்படுகின்றவன் ஒருநாளும் அழிந்துபோய் விடுவதில்லை. ஆனால் இனவொடுக்கலுக்கு ஆளாகும் "தேசிய இனம்" தன் சுயத்தை இழக்கும், சுரண்டலுக்குள்ளாகும், புதைந்தே போகும். இந்த இறுதிவகை ஒடுக்கலின் பின்னும் தனக்கு கிடைத்தவைகளை மட்டுமே கொண்டு நிமிர நினைக்கும், நீருக்குள் ஒளித்த, நிரம்பிய பந்துக் குணத்தை எந்தச் சூழலிலும் இழந்துவிடாத இயல்பு எம் எதிரியின் தூக்கத்தை அடிக்கடி குலைக்கும் கெட்ட கனவு.

வெட்டி எரித்து வேரைக் கிளறிய பின்பும், மூன்றாம் நாள் சின்ன முளை வைத்து 'பச்சை' கொண்டிருக்கும் தமிழனின் பக்குவத்தின் பாற்பட்ட பழக்கம், அடக்கியாள நினைப்பவனின் கீழ்க் கொடுப்பு வலியாக உறுத்துகின்றது போலும். "நீ என்ன செய்தாலும், என்னிருப்பு எப்படியோ எழுந்து நிற்கும்" என்கின்ற, எல்லாம் தாங்கும் எஃகு வலிமை மேல் அடங்கா அழுக்காறு கொண்டவனால் நித்திரைக்கும்-நல்ல நித்திரைக்குமான வித்தியாசத்தைக் கூட உணர்ந்தறிய முடிவதில்லை.

"போதுமென்கின்ற இந்த பொன் செய்யும் மருந்தை" ஆகப்பெரியதொரு இன அழிப்பின் பின்னரும், எவ்வித சலனமுமின்றி அழகாகப் பராமரிக்கும் இனத்துக்கே பொதுப்படையான குணமொன்றின் உரிமையாளர்கள் எனும் 'கோட்டா'வில் ஒவ்வொரு ஈழத் தமிழனும் நெஞ்சுயர்த்திக் கொள்ளலாம். 'ஷெல்' சுமந்த இரும்புப் பெட்டிகளை 'சூட்கேஸ்' ஆக்கிக்கொண்ட வாழ்க்கைமுறை 'ஊரடங்கு', 'ஆமிச்சோதனை', 'சுற்றிவளைப்புகளுக்குள்ளும்' இசைபுபடுத்தி எழுந்து நின்ற இயல்பு வாழ்க்கை, ஒரே வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட இழவுகள் துர்மரணத்தால் துரத்திய போதும், காடாத்தல் முதற்கொண்டு அந்தியேட்டி, ஆண்டுத்திவசம் என ஊரையே அழைத்து உறவு கொண்டாடும் சுற்றமும் சூழ வாழும் பெருமை, "எல்லாம் முடிந்ததென" உலகம் ஏப்பம் விட்ட பின்னாலும் இன்னமும் தொண்டையில் இடிக்கும் ஈரமுள்ளாக தமிழனின், குறிப்பாக வடபகுதி தமிழனின் இயல்பு வாழ்க்கைக்கான இசைவாக்கத்தை மனதளவிலாவது ரசிக்கும் பெருந்தன்மையுடையவனல்லன் எம் பரம்பரையை அழித்தவன்.

இறுக்கமான குடும்பநெறி, பின்னலாக்கப்பட்ட சமூக வழக்கங்கள், சர்ச்சைகளில்லாத சமயத் தொகுதிகள், ஒழுக்கமும் உயர்கல்வியறிவும் மிளிரும் இளம் சமூகத்தினர், புலம்பெயர்ந்தோராலும் கடும் முயற்சியுடைய தன் உழைப்பாலும் செழித்து நிமிர்ந்த பொருளாதார முதுகெலும்பு என எம்மினத்தின் "இன்னுமெம்மால் உணரப்படாத" புகழுடைத்த பேரியல்புகளின் மீது எப்போதும் ஒரு கேவலமான பொறாமைப் பார்வையுடையவர்களே எம்மைச் சூழ!

கடந்த காலத்தின் சில சில்லறைச் சம்பவங்களினால் இவற்றினை வெகு தெளிவாகப் புரிந்துணரவும், விரித்துணர்த்தவும் முடியும். வன்முறையைத் தூண்டிவிடும் பொருளழிவொன்றை ஏற்படுத்தும் நோக்கில் ஆயினும், பொதுப்படையான கல்வியறிவின் சின்னமான யாழ். நூலகத்தை ஏன் தீயூட்ட வேண்டும்? யாரென்றே மறந்து போன பல மனிதர்களின் எச்சம் மூடிய சிலைகள் நாடெங்கும் பரவியிருக்கையில், வல்வெட்டித் துறையில் எம்.ஜி.ஆர். சிலையை மட்டும் ஏன் உடைக்க வேண்டும்? தாய்ச் சமயமான இந்துமதத்தின் புனிதத்தை சொல்லளவில் தெரிந்தாவது வைத்திருந்தவர்கள் செல்வச்சந்நிதியின் நெடிதுயர்ந்த தேரை ஏன் பற்ற வைத்தார்கள்?

எண்பதுகளில் தொடங்கிய இந்தப் போர்க்களத்துக்கு வெளியேயான அழுக்கு மனத்தின் அடிப்படையிலான விஷமச்சீண்டல்கள் பல தசாப்தங்களைத் தாண்டியும் 'கிரீஸ் பூதம்', 'ஆயுதமேந்திய கொள்ளையர்', 'பிள்ளை பிடிகாரர்', 'கடத்தல்-கப்பம் வேண்டுநர்' என பல வேடங்களில் அரங்கேறியது பேரினவாதத்தின் ஒரே அசிங்க முகத்தையே!

எண்பத்தியொன்பதுகளில் பலாலியில் தொடங்கிய அகதி வாழ்க்கைக் கொடூரத்தை, இரண்டாயிரத்தியொன்பதில் முள்ளிவாய்க்கால் வரை முடிவின்றித் தொடுத்த போதிலும், எல்லாம் தாண்டி எம்மினம் "வீழினும் எழுந்து" நிற்பதை, விட்ட இடத்திலிருந்து சுட்டெரித்த சாம்பலிலிருந்து வாழ்வைச் சுகிப்பதை சகிக்க முடியாத ஆழ்மன ஆசையின் வெளிப்பாடுகளே இவை. "அப்பக்கடைகள்" என்கின்ற பெயரில், தமிழ் இளஞ்சமூகத்தினுள் ஆபாசக் குறுந்தகடுகளை எண்ணற்று அவிழ்த்துக் கொட்டியவர்களும், தமிழ்ப் பெண்களுக்கு கம்பீரக் காதல் வலை வீசி இனங்கலக்க முயன்றவர்களும், களியாட்டங்களிலும், விளையாட்டு நிகழ்வுகளிலும் தமிழனின் மான உணர்வினை மழுங்கடிக்கச் சிந்தித்தவர்களும், பிரயாண வசதிகள் கொடுத்து, 'கன்ரீன்' நடத்தி மனங்கவர எண்ணியவர்களும் ஆயுதம் தாங்கிய மூளைச் சலவையாளர்கள் என்பதைப் புரிந்து கொள்ள வெகு குறைந்த காலமே எடுத்துக்கொண்ட எம்மவர்களுக்காய், நிச்சயம் தோள் நிமிர்த்திக் கொள்ளலாம்.

இந்த விரைவான துலங்கலைக் காட்டும் தனியியல்பே, எல்லாவகையான ஒடுக்கங்களுக்குப் பின்னாலும், எல்லாவகையான அடக்கு முறைகளுக்குப் பின்னாலும் துளிர்த்து நிற்கின்ற எம்மீழெழுச்சியின் நம்பிக்கைகள். "நோயாளியான சமூகம் போராடுவதில்லை" என்கின்ற அகிலவுண்மையில் தெளிவுபெற்ற எம் வைரமனத் தாழ்ப்பாள்களைத் திறக்கும் வலிமை, இனவாதிகள் ஏவிவிட்ட 'சகஜ வாழ்வின் சிதைப்பு' என்கின்ற கள்ளச்சாவிக்குக் கிடையாது. தம் முயற்சிகளில் மீண்டும் மீண்டும் மனந்தளராத "சுடலை விக்கிரமாதித்தன்"களின் ஏவல்களின் தாக்கத்தால் தமிழ்ச் சமூகம் நோயாளிகளாகவில்லை என்பதும், போராட்ட குணத்தை குறைக்கவில்லை என்பதும் பின்னிருந்து இயக்கும் தேவையுடையவர்களுக்குப் பெருத்த தலைவலி.

இந்த வைராக்கியம் எம்மால் தேடப்பட்டது; எம் காயங்களிலிருந்து நாமே கண்டுபிடித்துக் கொண்டது; எம்மை எரிக்க வந்த அக்கினிச் சுவாலைகளிலிருந்து விளக்கு திரியேற்றி நாம் நாடிக் கொண்ட சம்பத்துக்களில் ஒன்று. நான்கு நாள் ஊரடங்கு போட்ட போதிலும் மரவள்ளி மாவில் பிட்டவிக்க முடிந்ததே! கீரைத் தோட்டக்காரனிடம் முருங்கைக் காய் வீட்டுக்காரன் பண்டம் மாறிக் கொண்டான். பல்கலைக்கழகப் பிள்ளைகள் பயண வழியில் கோயில்களில் படுத்து பசியாறியும் கொண்டனர். இருந்த மாவில் பேக்கரிகள் பாண் பிரசவித்தன. மூன்று, இரண்டாகவோ, ஒன்றாகவோ சுருங்கிய போதிலும், பாலகர்கள் எவரையும் பசித்திருக்க விடவில்லை எம் பசுமை.

பொருளாதாரத் தடைகள், தரைவழித் தொடர்பின்மை, அடிப்படை வசதிகள் குறைப்பு இராணுவ நெருக்கத்துடனான சிவில் நிர்வாகம், அச்சுறுத்தும் படைக் கட்டமைப்புக்கள், ஆள்கடத்தல், வீதிக் கொலைகள் போன்ற போர்க்களத்தின் புறவெளியிலான யுத்திகளின் தாக்கத்தினால் கலங்கினான், குழம்பினான், என்றாலும் நிதானமிழந்து சிதைந்து விடவில்லை என்பது எல்லோருக்குமான கீர்த்தி. இதே நெடும்புகழில் தொடர நாம் நிதானிக்க வேண்டிய வருங்கால விளைவுகள் ஏராளம், ஏராளம். நில்! கவனி!! செல்!!! ஏற்பாடுகள் நிச்சயம் கச்சிதமாய் பொருந்தும். இனிமேல் எம் ஒவ்வொரு சுவடுகளுக்கும், "வரவில்லை! ஆனால் வந்தார்கள்" எனும் மாயத்திற்குரிய 'கிறிஸ் மனிதர்'களின் பிழைப்பில் நாவாந்துறை என்கின்ற கிராமமே திரண்டு நீதிமன்றேறிய போது 'மண்' விழுந்தது. ஆனால் இன்னமும் முடியாத வழக்குகளும், உடல் ஊனங்களும், உள் காயங்களும், அவமானங்களும் முழு வட இலங்கைக்குமாக, அந்த ஊர் மக்கள் செய்ததைச் சொல்ல 'தியாகம்' என்கின்ற வார்த்தைகள் நிச்சயம் போதாதில்லையா?

கடந்து போன எம் வாரத்தில் எம் தெருக்களில் நிகழ்ந்த பெரும்பான்மைச் சம்பவங்கள் இதே வகை இயல்பைக் கெடுக்கும் துர் எண்ணத்தின் ஒன்று விட்ட சகோதரர்களே என்பதில் மறுபேச்சு வேண்டாம்!

பிழைப்புத் தேடி வந்த தென்னிந்திய வர்த்தகரை வீதியில், உடுபுடவைகள் சிதற அடித்துக் காயப்படுத்தியது, கடத்திய சிறுவனை சிறு கீறல் கூட இல்லாமல் நல்ல சோறும் கொடுத்து காலையில் இறக்கி விட்டது, பிடித்து மதம் மாற்றிய பையனை புடவை வியாபாரத்தில் சொந்த மாவட்டத்திலேயே இறக்கி வேடிக்கை காட்டியது, இரும்பு அள்ள வந்தவர்கள் மனநலம் குன்றிய பெண்ணிடமும் வக்கிரம் காட்டியது. இந்தச் செய்திகளின் பின்னால் இருக்கும் சம்பவங்களின் பொதுப்பண்பில், 'பிரஷர்' ஏற்றும் முரட்டுச் சிகிச்சையொன்றின் வலிந்த கள்ளெண்ணமொன்று ஒளிந்திருப்பதைக் கொஞ்சம் காரண, காரியத் தொடர்பூன்றிப் பார்ப்பின் புரியமுடியும்?

மேற்கூறிய எல்லாச் சம்பவங்களிலும் பாதிக்கப்பட்ட தரப்புக்களில் அல்லது குற்றமிழைத்த தரப்புக்களில் ஈழத்தின் வடபகுதித் தமிழர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வாழும் இன்னொரு சமூகத்தினர் இணைந்திருப்பதுதான். தமிழர்களான தென்னிந்தியர்கள் எம் சமூகத்தில் இணைந்திருப்பது பொறுக்க முடியாமையும், கடத்தப்பட்ட சிறுவனின் தந்தை இந்திய துணைத்தூதரகப் பணியாளர் என்பதும் தமிழகத்திலும், இணைந்த இனவுணர்வுகளில் ஏற்படுத்த எண்ணிய விரிசல்களுக்கான சிறு துணையே!

நீண்ட பிரிவுகளுக்குப் பின் வடபகுதிக்குத் திரும்பிய முஸ்லிம் சமூகத்தினர் மீது காலம் கடந்ததொரு பிணக்கு மனப்பான்மையை மீண்டும் சீண்டிவிடும் இன, மத முறுகல் ஒன்றை எதிர்பார்க்கும் எவராலும் இறுதி இரு சம்பவங்களையும் இலகுவாக நெறியாள்கை செய்ய முடியும். சுலபமாக சர்ச்சைகளுக்குள் சிக்கக்கூடிய மத இறுக்கங்களையும், பாரம்பரியங்களையும் பின்பற்றுபவர்களான இஸ்லாமியர்களான வடபகுதி முஸ்லிம்களின் மீது, தடம் இட்டு தமிழனின் கோபத்தை திருப்புகின்ற மலிவான 'மூட்டிவிடும்' மனவாற்றாமையின் வெளிப்பாடாக போன வாரத்து நிகழ்வுகளை மீள்நினைவோட்டம் செய்து முடிவெடுப்பது ஒன்றும் தவறில்லை. எம்மவர்களே! "இதுக்குத்தானே, உங்களை அப்பவே கலைச்சவங்கள்" எனும் வகைக்குரிய எழுந்தமானமான கோஷங்கள் இந்தவகை கூக்குரல்களை எம் உள்ளாறாத தீ நாவுளிலிருந்து எதிர்பார்த்து காத்திருப்பவர்களின் வேலையின் பெரும்பகுதியை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்துவிடும் கெடுதலுக்கானவையே.


தமிழனின் சமூகவியல் இயல்பு நிலையை எப்பாடுபட்டாயினும், சிதைத்து விடும் 'நரித்தனங்களுடன்' உள்நுழைவோரே! "நீங்கள் எவ்வளவு தூரம் உட்சென்றிருந்தாலும், அது தவறான பாதை! உடனே திரும்பிவிடுங்கள்!!" கணக்குப் பார்ப்பதில் கோட்டை விடாத ஈழத் தமிழன், 'வட்டியோடு', அசலையும் திருப்பிக் கொடுப்பதில் தவறிழைப்பது அரிதினும் அரிது. அது காசாயினும் சரி! பட்ட சாயமானாலும் சரி!!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோத்தபாய – பொன்சேகா இராணுவ பேரினவாத சாத்தான்கள்



■ செஞ்சடை போன்

இலங்கையில் அண்மைக் காலத்தில் மேலெழுந்திருக்கும் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகா இருவரும் இராணுவ இனவாதத் தீதை போதிப்பவர்களாக இருக்கின்றனர்.

கோத்தபாய ராஜபக்ஷ இவ்வார முற்பகுதியில் பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய கருத்துரைப்பின்போது வடக்கை இலங்கைத் தமிழர்கள் பெரும்பான்மையாகக் கொண்ட முக்கியமான பிரதேசமாகக் கொள்ள முடியாது எனக் கூறியிருந்தார். வடக்கைத் தமிழர்களின் தனித்துவப் பிரதேசம் எனத் தமிழ்த் தலைவர்கள் கூறுவதை நிறுத்த வேண்டும் என்று கூறிய கோத்தபாய, வடக்கின் நிர்வாக உயர் அதிகாரிகள் இந்தத் தலைவர்களாக இருப்பதில் தவறு ஏதும் இல்லை என்று கூறியுள்ளதுடன் போருக்கு முன்னர் அங்கு சிங்கள உயர் நிர்வாக அதிகாரிகள் இருந்துவந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இறுதிப் போரின்போது பிரகடனப்படுத்தப்பட்டுவரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்றும், ஏழாயிரத்து நானூறு பேர் மட்டுமே கொல்லப்பட்டனர் என்பதுடன் தமது தரப்பில் ஆறாயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனவும் கூறி ஒரு சமப்படுத்தலைச் செய்துகொண்டார்.

அதுமட்டுமன்றி, அந்தத் தொகையில் அதிகமானோர் பயங்கரவாதிகள் என்றும் அவர் குறிப்பிடத்தவறவில்லை. அவரது செய்திச் சேவைக்கான கருத்துரைப்பில் இட்டுக்கட்டல்கள், மறைப்புகள், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் செறிந்து காணப்பட்டதை நேர்மையான விடயங்களை அணுகும் எவரும் காணமுடியும்.

வடக்கில் மீன்பிடித்தடை அகற்றப்பட்டுள்ளது எனக் கூறும் பாதுகாப்புச் செயலாளர் அவரது அறிவுறுத்தலின் படி இப்போதும் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு பாஸ்முறை இருந்து வருவதை ஒரு விடயமாகவே காணவில்லை. அது மட்டுமன்றி, இன்றும் உயர் பாதுகாப்பு வலயங்களுக்காகப் பொதுமக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்களுக்கும், வீடுகளுக்கும் மக்கள் மீளச் சென்று குடியமர மறுக்கப்படுவதையும் – மறைப்புச் செய்யப்படுவதையும் காணமுடியும்.

அது மட்டுமன்றி, தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டுள்ளன என்ற அவரது கூற்று எவ்வளவு சிரிப்புக்கிடமானது என்பதை வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் தாக்குதல்கள், ஆள்கடத்தல்கள் என்பன எடுத்துக்காட்டுகின்றன.

இவற்றுடன் கடத்தப்பட்டுக் காணாமற் போனோர் பற்றிய கேள்விகளுக்குப் பதில் அளித்த பாதுகாப்புச் செயலாளர் மழுப்பலும், வேடிக்கைத்தனமானதுமான பதிலையே வழங்கியுள்ளார். அதாவது, காணாமற் போவது பற்றிய முறைப்பாடும் – பதிவுகளும் தவறானவை என்றும், இவைபற்றிக் கூறப்படுவது இலங்கையின் உல்லாசப் பயணிகளினதும் முதலீட்டாளர்களினதும் வருகைக்கு எதிரான திட்டமிட்ட பரப்புரையாகும் என்றும் கருத்துக்கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் ஏற்கனவே வெளிவந்த கடத்தல்கள் பற்றிய புள்ளி விவரத்தை நோக்கினால் எந்த அளவிற்கு உண்மைகள் மறைக்கப்படுகின்றன என்பது புலனாகும்.

போர் முடிவடைவதற்கு முன்பு சகலவற்றுக்கும் புலிகள் இயக்கத்தைக் காரணம் காட்டி வந்த பேரினவாதிகள் இப்போது நாடு கடந்து வாழ்வோரை குற்றம் காண்கின்றனர். இதில் முன்னணி வகிப்பவர் கோத்தபாயவும் அவரது சகோதரரான ஜனாதிபதியுமாவார். முன்பு புலிகளைக் கண்டு மிரண்டவர்கள் இப்போது அவர்களின் நிழல்களைப் போன்ற ஒன்றைக் கண்டு புலம்புகிறார்களோ எனப் புரியவில்லை. இது அவர்களது இராணுவ மயப்பட்ட சிந்தனைக்கு மட்டுமன்றி, அரசியல் அதிகார இருப்பிற்கும் தேவைப்படும் ஒன்றேயாகும்.

அண்மையில் 'த ஐலன்ட்' பத்திரிகையின் ஊடகவியலாளர் சந்திரப்பிரேம எழுதி வெளியிட்டுள்ள 'கோத்தாவின் போர்' நூல் முழுவதும் இராணுவ மயப்பட்ட பேரினவாதச் சிந்தனை இழையோடி இருப்பது பதியப்பட்ட சாட்சியமாகவே காணப்படுகிறது.

அதேவேளை, பொது மன்னிப்பின் கீழ் அண்மையில் சிறையிலிருந்து வெளியே வந்த சரத் பொன்சேகா எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு கருத்துரை வழங்குகையில், சிங்கள, தமிழ் மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு கட்டியெழுப்பப்படாத நிலையில் அதிகாரப்பகிர்வு நடைமுறைச் சாத்தியமற்றது என்று கூறியிருக்கிறார். அத்துடன், மேற்படி புரிந்துணர்வு ஏற்பட இருபது வருடங்கள் அல்லது ஒரு தலைமுறைக்கு மேலும் செல்லலாம் என்றும் கூறியுள்ளார். பதிமூன்றாவது திருத்தம் உட்பட எந்தத் தீர்வும் காகிதத்தில் இருப்பதால் பயனில்லை.

அவை மக்களின் பரஸ்பர நம்பிக்கையின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்கு சிங்கள, தமிழ் மக்கள் ஒன்றாக வாழ்ந்து ஒருவரையொருவர் புரிந்துகொள்வது அவசியம் என்பதுடன், இதற்குப் பொறுமையாக இருப்பது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

இந்தக் கூற்று அவரது முன்னைய கூற்றான தமிழர்கள் இந்த நாட்டின் பூர்விகக் குடிகள் அல்லர் என்பதிலிருந்து வேறுபட்டது போன்று தோற்றமளிக்கலாம். ஆனால், உண்மையிலேயே இது தற்போதைய நிலைக்கு ஏற்றவாறு சுற்றி வளைக்கப்பட்டுக் கூறி இருப்பதேயாகும்.

அதாவது, முன்னையது இராணுவத் தளபதியாக நின்று கூறியதாகும். தற்போதையது, அரசியலில் ஈடுபடும் நோக்கிலிருந்து கூறப்பட்டதாகும். அதாவது, அரசியல் தீர்வும் அதிகாரப் பகிர்வும் இலங்கைச் சூழலுக்கு சரிவராது என்பதையும் சிங்கள மக்கள் அதற்குச் சம்மதிக்க மாட்டார்கள் என்பதையும் சரத் பொன்சேகா நாகரிக வார்த்தையில் கூறியிருக்கிறார். ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி, சிஹல உறுமய, ஜே.வி.பி. என்பன வெவ்வேறு தொனிகளிலும் – குரல்களிலும் பேரினவாதம் பேசுவதில் வல்லமையுடையனவாகவே இருந்து வருகின்றன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பேசுவதிலும் பார்க்க நடைமுறைப்படுத்தியவைகளே அதிகம். அதற்கு கைகள் உயர்த்தும் சமசமாஜ – கம்யூனிஸ்ட் கட்சியினர் பேரினவாதம் பேசாவிடினும் அதற்கு சிகப்புக் கலந்த வியாக்கியானம் வழங்குவர். இந்த நிலையில், தற்போது அரசியல் அரங்கில் புதிய பயணம் ஆரம்பிக்க இருக்கிறது எனக் கூறிக்கொள்ளும் முன்னாள் இராணுவத் தளபதி மேற்கூறிய கருத்துகளைக் கூறியதில் ஆச்சரியம் ஏதும் இருக்க முடியாது.

மேலும் சரத் பொன்சேகா போர் பற்றியும் புலிகள் சம்பந்தமாகவும் கூறிய கருத்துகள் அவர் ஒரு இராணுவப் பேரினவாதி என்பதைத் தெளிவுபடுத்தி நிற்கிறது. போரில் பொதுமக்கள் கொல்லப்படவே இல்லை என்றும் தான் மிகவும் கவனமாகத் தனது இராணுவத்தை வழி நடத்தினார் எனவும் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்குக் கூறியுள்ளார்.

போர்க் குற்றங்களுக்கு, மனித உரிமை மீறல்கள் எதுவும் இடம்பெறவில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டில் நின்றே பொன்சேகா கருத்துரைத்துள்ளார். இதில் சரத் பொன்சேகா தனது தளபதிக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அதுமட்டுமன்றி, வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவம் அகற்றப்படக்கூடாது என்பதுடன் அண்மையில் வடக்கில் இராணுவத்தினர் தமக்குள் சுடுபட்டிருந்ததைப் புலிகள் சுட்டு இறந்ததாகவே பொன்சேகா கூறியிருப்பது அவரது இராணுவமயப்பட்ட மூளையின் வெளிப்பாடேயாகும். இங்கே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் (முன்பு சரத் பொன்சேகா இராணுவத்தில் உயர் அதிகாரியாக இருந்தவேளை கோத்தபாய இளநிலை அதிகாரியாக இருந்து சேர் எனக் கூறி 'சலூட்' அடித்தவர். பின்னர் இறுதிப் போரின் போது அதே கோத்தபாய பாதுகாப்புச் செயலாளராக மாறியபோது சரத் பொன்சேகா சேர் எனக் கூறி 'சலூட்' அடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது) சரத் பொன்சேகாவுக்கு இவ்விடயத்தில் மாறுபாடு கிடையாது என்பது காணவேண்டிய ஒன்றாகும்.

ஆதலால், இறுதிப் போரின் போது கொல்லப்பட்டனர் எனக் கணிக்கப்பட்ட சுமார் நாற்பதினாயிரம் தமிழ் மக்கள் பற்றியோ, காணாமற்போனோர் சம்பந்தமாகவோ, அல்லது முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்ட மூன்று லட்சம் மக்களது இன்றைய அவல வாழ்வு பற்றியோ கோத்தாவுக்கும் அவரது முன்னாள் தளபதிக்கும் எந்த வித அக்கறையோ, அனுதாபமோ இல்லை.

ஏனெனில், இருவரும் பேரினவாத நிலைப்பாடுடைய இராணுவ வாதிகளேயாவர். இவர்களது அரசியல் நிகழ்ச்சிநிரல் எப்போதும் இராணுவமயப்பட்டவையாகவும், பேரினவாதச் சிந்தனை நிரம்பியவையாகவும் இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. இவர்கள் இருவரும் இலங்கையின் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினர் மத்தியில் செல்வாக்குப் பெற்றவர்கள். ஒருவரையொருவர் அரசியலில் எதிர்த்து நின்றாலும் அடிப்படையில் ஒரே நிலைப்பாடு கொண்டவர்களே.

# துரித உணவு ஆபத்தானதா?

■ ஆர்.எஸ். நாராயணசாமி

இன்றைய அவசர உலகில் உணவுகளும் துரிதமாய் கிடைக்கின்றன. அவற்றுக்குப் பெயர் வீதிகளில் விற்பனையாகும் துரித உணவுகள்.

சமையல் இல்லாமல் அதாவது சமையலறைக்குச் செல்லாமல் பல மாதங்களுக்கு முன்பே சமைக்கப்பட்டதும் கெடாமல் இருக்க இரசாயனங்களும் சேர்க்கப்பட்டதுமான பொதி உணவுதான் துரித உணவு. இவற்றிலும் பூச்சி மருந்து விஷம் இருக்க வாய்ப்புண்டு. பூச்சி மருந்து விஷத்திற்கு மேல் வேறு ஆபத்துகளும் உண்டு.

துரித உணவில் அதிகமான சத்துக் கூறுகள் உண்டு. ஊட்டம் இல்லாததால் நோய் ஏற்படும். முக்கியமாகக் கூடுதல் கொழுப்பு உடலில் சேர்ந்து குண்டுக்குழந்தைகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. உடலில் தேவைக்குமேல் சதை ஏறுவதால் சர்க்கரை நோய், உயர்ந்த ரத்த அழுத்தம் ஏற்பட்டு மனித ஆயுள் குறைகிறது.

100 வயது வாழ வேண்டிய மனிதன் 50, 60 வயதுகளில் இறக்க நேரிடும். ஆகவே மேலை நாடுகளில் துரித உணவு விளம்பரங்களுக்குத் தடை உண்டு. சில நாடுகளில் துரித உணவுக்குக் வரி அறவிடப்படுகின்றது. விளம்பரங்களால் தூண்டப்படும் குழந்தைகள் அளவுக்கு மீறி துரித உணவுகளைச் சாப்பிட்டு உடற்பருமன் நோய் வருவதைக் கண்கூடாகப் பார்க்கலாம். குறைந்த எடை குழந்தைகளைவிடக் கூடுதல் எடை குழந்தைகளின் ஆரோக்கிய நிலை ஆபத்தில் முடியலாம்.

சில துரித உணவு தயாரிப்பு நிறுவனங்கள் தமது தயாரிப்புகளில் சுவைக்காக அனுமதிக்கப்பட்ட கொழுப்பின் அளவை விட அதிகளவை துரித உணவில் கலக்கின்றன. அடர் கொழுப்பு 20 கிராம் அளவுக்குமேல் மனிதன் உண்ணும் போது இரத்தக்குழாய் தடிக்கும். இரத்த அழுத்தம் உயரும். இதயம் மட்டுமல்ல, சிறுநீரகம் பழுதுறலாம். நீரிழிவு வரும். ஊளைச்சதையுள்ள குண்டுக்குழந்தை, குண்டுப் பெண்மணி நோயுடன் வாழ்ந்து குறைந்த ஆயுளில் இறந்துவிடுவார்கள்.

ஒரு மனிதன் நலமுடன் வாழ சராசரியாக 2,200 கலோரி உணவு போதும். இந்தக் கலோரி 300 கிராம் காபோவைதரேட், 6 கிராம் உப்பு, 20 கிராம் கொழுப்பு, 2 கிராம் டிரான்ஸ் கொழுப்பு ஆகியவற்றில் கிடைத்துவிடும். 300 கிராம் காபோவைதரேட் என்பதில் சர்க்கரையும் அடங்கும். தானியங்கள், பருப்பு வகைகளில் புரதச்சத்து உண்டு. விற்றமின் சத்துக்காக உண்ணும் காய்கறி – பழங்களில் தேவையான நார்ச்சத்தும் கிடைக்கும்.

நாம் உண்ணும் பல உணவுகளில் மாவுச்சத்துடன் புரதச்சத்தும் உண்டு. ஆனால், துரித உணவுகளில் புரதம், நார்ச்சத்து, விற்றமின் எதுவுமே இல்லை என்பதுடன், அனுமதிக்கப்படும் அளவுக்குமேல் உப்பும், கரையாத கொழுப்பும் உள்ளதால் மனித ஆயுள் குறைகிறது. ஆயுள் குறைவது மட்டுமல்ல, தினமும் மாத்திரைகள், ஊசிகள் என்று மனித உடல் மருந்துக்கு அடிமையாவதையும் கவனிக்கலாம்.

அதிகபட்சமாக அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் துரித உணவுகளிலும் குறைந்தபட்சமாக அவரவர் சமைக்கும் உணவுகளிலும் கெடாமல் இருக்கவும் நிறத்திற்காகவும் சேர்க்கப்படும் இரசாயனப் பொருள்களினாலும் நோய்கள் ஏற்படும். சாதாரணமாக சமைத்த உணவு 6, 7 மணி நேரத்திற்கு மேல் பழுதடையாமல் இருக்காது. பூஞ்சைக்காளான் பிடிக்கும். புளிக்கப் புளிக்கக் கெட்ட வாசனை வரும். முற்காலத்தில் சர்க்கரைப்பாகு, தேன், உப்பு, கிராம்பு, எலுமிச்சை போன்றவை உணவு கெடாமல் இருக்கப் பயனாயிற்று. இப்போது குளிர்சாதனப் பெட்டி. மின்சாரம் நின்றுவிட்டால்? அந்த உணவும் பாதுகாப்பானது இல்லை.

மனிதர்கள் உண்ணும் ஜாம், ஜெலி, சீஸ் போன்ற துரித உணவுகளில் பென்சோட் என்ற நச்சு சேர்க்கப்படுகிறது. பென்சீன் என்ற இரசாயனம் நிலக்கரி வாயுவிலிருந்து உருவாகும் எரிபொருள். பூச்சி மருந்துகளிலும் பென்சோட் உண்டு. அடைக்கப்பட்டு விற்கப்படும் இறைச்சிகளில் நைட்ரேட் சேர்க்கப்படுகிறது. ரொட்டி, பணிஸ், கேக் போன்றவற்றில் சோடியம் பென்சோட் சேர்க்கப்படுகிறது. வெள்ளை நிறம் பெற சல்பைட் சேர்க்கப்படுகிறது. சிவப்பு / மஞ்சள் / பிங்க் நிறம் பெற அலுமினியம் குரோமைட் என்ற விஷப்பொருள் சேர்க்கப்படுகிறது. கேசரி பவுடர் என்ற பெயரில் குரோமைட் விற்கப்படுவதால் அதை அல்வாவிலும் கேசரியிலும் பயன்படுத்துவார்கள். விஷயமறியாத தாய்மார்கள் கேசரி பவுடரை வாங்கி சிவப்பு நிறத்துக்குப் பயன்படுத்துவது உண்டு. இதுவும் உப்பைப்போல் அளவுக்கு அதிகமானால் ரத்த அழுத்த நோய்க்கு வித்தாகும். சல்பைட் விஷத்தால் ஒவ்வாமை, மூச்சுத்திணறல், சளி ஏற்படும்.

இது ஓர் அவசர உலகம். நல்லுணவை நல்ல விதமாகச் சமைக்கக்கூடிய மூத்தவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பவிட்டோம். துரித உணவு – அதாவது கெட்ட உணவை விலைகொடுத்து வாங்கி நோயுறுகிறோம். மனிதர்களே நன்கு யோசியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பட்ட நெஞ்சம்

ஓர் ஊரில் ஒருத்தர் இருந்தார். அவருக்கு அவசரமாகக் கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. அதற்காக இன்னொருத்தரைத் தேடிப்போய், கடன் கேட்டார். இதற்கு அவர் ''சாட்சியோடு வாங்க கடன் கொடுக்கிறேன்'' என்றார். இறைவனுடைய சாட்சியே போதுமே என்றார் இவர். ''நான் கொடுக்கப்போகும் கடனுக்கு யாராவது பொறுப்பு ஏற்க வேண்டாமா? அப்படியானால் கடனுக்குள் இறைவனையே பொறுப்புதாரி ஆக்குகிறேன்'' என்றார் அவர். சரி என்று கேட்ட கடனை குறிப்பிட்ட தவணைக்குள்ளே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் கொடுத்தார்.

கடன் வாங்கியவர் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொண்டார். அதன் பின் பிழைப்புத் தேடி கடல் கடந்து வேறு நாட்டுக்குப் போய்விட்டார்.

போன இடத்தில் அதிகமாகச் சம்பாதிக்கிறார். கடன் திருப்பிக் கொடுக்க வேண்டிய நாள் நெருங்கியது. எப்படியாவது குறிப்பிட்ட நாளுக்குள் சொந்த இடத்துக்குத் திரும்பிச் சென்று சொன்னபடி கடனைக் கொடுத்துவிட வேண்டும் என்று முடிவு செய்தார். அதற்காக ஒரு தோனியைத் தேடினார்.

அந்தக் காலத்தில் வேறு வசதிகள் எதுவும் கிடையாது. படகில்தான் பிரயாணம் செய்ய வேண்டும். ஆனால் உடனடியாகப் பிரயாணம் செய்வதற்கு இவருக்குப் படகு கிடைக்கவில்லை. என்ன செய்வது குறிப்பிட்ட நாளைக்குள் போய் சேர முடியாது போன்று இருக்கிறதே என்று தவித்தார். கடன் பட்டார் நெஞ்சம் கலங்க ஆரம்பித்தது. ஒன்றும் புரியவில்லை. ஏதாவது செய்யலாம் என்று முடிவு செய்தார். ஒரு மூங்கில் குழாயை எடுத்தார். அதைச் சுத்தம் செய்து அதற்குள் தான் கொடுக்க வேண்டிய பணத்தை வைத்தார். அதனுடன் தன்னுடைய நிலைமையை விளக்கி ஒரு கடிதத்தையும் எழுதி வைத்தார். தண்ணீர் உள்ளே புகாதவகையில் அதை இறுக்கமாக மூடிக்கொண்டு கடற்கரைக்கு வந்தார்.

''இறைவா, உன்னுடைய அடியார் ஒருத்தரிடம் நான் கடன் வாங்கினேன். அது உனக்கும் தெரியும். அவர் சாட்சி கொண்டுவரச் சொன்னபோது நான் உன்னையே சாட்சியாக்கினேன். கடனுக்கு யார் பொறுப்பு என்று கேட்டபோது உன்னையே பொறுப்புதாரி ஆக்கினேன். இதுவும் உனக்குத் தெரியும். இதற்கு சம்மதித்து அவர் எனக்குக் கடன் கொடுத்தார். திருப்பிக் கட்ட வேண்டிய காலக்கெடு நெருங்கிவந்து விட்டது. அவரிடம் போய்ச்சேர எந்த வழியும் இல்லாமல்தான் இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன். எப்படியாவது இதை அவரிடம் சேர்த்துவிடு'' என்று மனமுருகி வேண்டிக்கொண்டு மூங்கில் குழாயைக் கடலில் வீசினார்.


அந்த நேரத்தில் கடன் கொடுத்தவர் கடற்கரையில் வந்து காத்துக்கொண்டிருந்தார். காலக்கெடு முடியப் போகிறது. கடன் வாங்கியவரைக் காணவில்லை என்று பார்த்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவர் காலடியிலே வந்து ஒதுங்கியது அந்த மூங்கில் குழாய். எடுத்துப் பார்த்தார். பணமும் கிடைத்தது. கடிதமும் கிடைத்தது. அவருக்கு ஆச்சரியம். சிறிது நாள்கள் கழித்து கடன் வாங்கியவரும் வந்து சேர்ந்தார். 'ஐயா தாமதமாக வந்து சேர்ந்திருக்கிறேன். எனக்கு வேறு வழியே கிடைக்கவில்லை. என்னை மன்னித்து விடுங்கள். இந்தாருங்கள் பணம் என்றார்.

''சகோதரரே! அதற்கு அவசியமே இல்லை. எனக்கு வரவேண்டிய பணம் எப்போதோ வந்து சேர்ந்துவிட்டது'' என்றார் அவர். கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்துவதற்காக நபிகள் நாயகம் தமது தோழர்களுக்கு சொன்ன கதை இது.

திருப்பித் தரவேண்டும் என்கின்ற எண்ணத்துடன் மக்களின் பொருள்களை ஒருவன் கடனாகப் பெறுகிறான் என்றால் இறைவன் அவன் சார்பில் அந்தக் கடனை நிறைவேற்றித் தருகிறார். ஆனால் கடனைத் திருப்பிக் கொடுக்கும் எண்ணமே இல்லாமல் ஒருவன் பெறுவானாகில் அதன் காரணமாக இவனை இறைவன் அழித்தே விடுகிறான் என்று நபிகள் நாயகம் எச்சரிக்கிறார்.

இந்தக் காலத்தில் நடந்த கதை ஒன்று. ஒருத்தரைத் தேடி ஒருத்தர் வந்தார். ''ஐயா என்னை அடையாளம் தெரிகிறதா?'' என்றார். ''இல்லையே'' என்றார் மற்றவர்.

''ஐந்து வருடத்துக்கு முன்னர் உங்களைத் தேடி வந்து, என்னுடைய கஷ்ட நிலையைக் கூறினேன். உடனே 500 ரூபாவைத் தூக்கிக் கொடுத்து இதை வைத்துப் பிழைத்துக்கொள் என்று கூறினீர்கள். அந்த உதவியை என்னால் மறக்கவே முடியாது. அதனால்'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அதற்குள் மற்றவர் ''அதற்காக நன்றி எல்லாம் சொல்ல வேண்டாம். கொடுத்த பணத்தை திருப்பியும் தரவேண்டாம்'' என்றார். இதற்கு அவர் ''நான் அதற்காக வரவில்லை; மறுபடியும் ஒரு உதவி செய்தீர்கள் என்றால் நான் அதை வைத்து மேற்கொண்டு பிழைக்க வசதியாக இருக்கும்'' என்றார்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 வருடங்களாகத் தொடர் சேவையாற்றும் கருகம்பன் கிராம கம்பன் ச.ச.நிலையம்




## கர்ணன்

பொரு நிலப்பரப்பைக் கொண்ட தோட்டங்களுக்கு மத்தியில் ஒரு நீள் சதுரப் பகுதியில் மிக நெருக்கமாக சின்னஞ்சிறிய வீடுகளைக் கொண்ட 35 குடும்பங்கள் வாழும் கிராமம்தான் கருகம்பன் என்னும் கிராமம்.

புலோலி என்னும் பெரும் பிரதேசத்தில், மந்திகை கிராம சேவையாளர் பிரிவில், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு தென்மேற்குப் புறத்தில் அமைந்துள்ள இந்தக் கிராமம் பல ஏக்கர் புகையிலை வெங்காயம் பயிரிடும் தோட்ட நிலங்களைக் கொண்டது. அத்தோட்ட நிலங்களுக்கு தென் மேற்கு மூலையில், பல கிராம மக்கள் பயன்படுத்தும் கிராமத்தின் பெயரைக் குறிக்கும் கருகம்பன் இந்து மயானம் ஒன்றுண்டு. இதே தோட்டநிலங்களின் கிழக்குப் புற எல்லையில், வெளிப்பார்வையில் சேரி போன்று காணப்படும் நிரையான வீடுகளில் இந்தக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. கூலித் தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்ட இந்தக் கிராம மக்கள் சைவப்பற்றும், தமிழ்ப் பற்றும் நிறையப் பெற்றவர்கள்.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அரசினர் வைத்தியசாலையின் மேற்கு எல்லையில் இருந்து இந்தக் கிராமத்திற்கான வீதி செல்கின்றது. இந்த வீதியின் மேற்கே பல்லாண்டு காலத்துக்கு முன்னர் இந்தக் கிராம மக்கள் அண்ணமார் கோயிலை நிறுவி தமது குல தெய்வமாக வழிபட்டு வருகின்றார்கள்.

கல்வி அறிவு குறைந்த, பண்பாடு, கலாசார விழுமியங்களால் உயர்ந்து நின்ற இந்தக் கிராமத்தில், உயர்கல்வி பெற்றோரும், இடைநிலை ஆரம்பக்கல்வியைப் பெற்றோருமாக இளைஞர்குழு ஒன்று, ஒன்றிணைந்து கிராமத்தின் அபிவிருத்தி, தேவைகள் என்பன போன்ற நல்நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கும், கிராமத்தில் புதிதாகத்தோன்றி வரும் இளைய தலைமுறையினரிடையே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத் தவும் புதிதான சிந்தனை கிராமத்தை நல்வழிப் படுத்தவும், கிராமத்தை முன்னேற்றவும் கடந்த 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி சனசமூகநிலையம் ஒன்றை ஆரம்பித்தார்கள்.

இத்தகைய நன்னோக்குடன் இளைஞர்கள் குழு ஒன்று சேர்ந்து சனசமூக நிலையத்தை உருவாக்கிய போதிலும் அந்தக் குழுவில் அனுபவம் மிக்க பெரியோராக இளைப்பாறிய கிராம சேவையாளர் பா. இராசேந்திரம், கி.இராசதுரை, மா.மகேந்திரன், கி.செல்வசோதிநாதன், ம.செல்வராசா வை.வேலாயுதம், க.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

> கம்பன் கழக, கம்பன் சனசமூக நிலையம் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் கிராம மக்களுக்கு கல்வி, கலை, கலாசாரம், சுகாதார சேவைகள், அபிவிருத்தி சுயதொழில் வேலை வாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கி வந்துள்ளது.

இந்தச் சனசமூக நிலையத்திற்கு ஒரு பெயரைச் சூட்ட முனைந்த போது, கருகம்பன் என்னும் கிராமத்தின் பெயரில் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பெயர் ஆதி முதலே இணைந்திருந்ததாலும். தமிழ் உலகில் இராமாயணம் எனும் இதிகாசத்தைத் தனது கவிப்புலமையால் தமிழர்களுக்கு வழங்கிய கவிச்சக்கரவர்த்தி கம்பராயிருந்தமையாலும் - சனசமூகநிலையத்தின் பெயர் ''கம்பனின்'' பெயரால் அமைவதனைப் பெரும்பாலானோர் விரும்பினார்கள். கிராமத்தில் உள்ள எவரது பெயரையும் குறிப்பாகச் சூட்டாமல், பொதுவான ஒரு பெயராக, கவிப் புலமை மிக்க பெரியாரின் பெயரைச் சூட்டுவதன் மூலம் இந்தக் கிராமத்தில் கல்வி எழுச்சி ஒன் றினை அந்தப் பெயரின் மூலமே கட்டி எழுப்பலாம் என்னும் காரணத்தால், கம்பன் கழகம், கம்பன் சனசமூக நிலையம் எனப் பெயர் சூட்டப்பட்டு கம்பன் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

கம்பன் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்ட வேளை, அதற்கு வேண்டிய காணி, கட்டடங்களை வழங்கும் நிலையில் அன்றைய கருகம்பன் கிராம மக்கள் இருக்கவில்லை. இதனால் இந்தக் கிராமத்தின் குல தெய்வமான 'அண்ணமார்' கோயில் அமைந்த காணியில், அந்தக் கோயிலின் மடமாக வடக்குப்புறத்தில் இருந்த சிறிய கட்டடத்தை சனசமூக நிலையத்துக்கு உபயோகிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்துக்கமைய கோயில் மடம் இந்தக் கிராமத்தின் பிரதான வீதிப்பக்கம் முகப்புக்கொண்டதாக அமைக்கப்பட்டு அந்தக் கட்டடத்தில் சனசமூக நிலையம் செயற்படத் தொடங்கியது.

பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாக இந்த சனசமூக நிலையம் இருந்தமையாலும், அதன் செயற்பாடு ஓர் ஒழுங்கு முறையில் அமைய வேண்டும் என்பதாலும், கிராம மக்களுக்கு ஒத்துழைப்பும் தன்மையும் ஆர்வமும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களிலிருந்து நிர்வாகசபை ஒன்றும் உருவாக்கப்பட்டு செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் ஆரம்பத்தில் 27 அங்கத்தவர்களைக் கொண்ட கம்பன் கழகம், இப்போது 46 அங்கத்தவர்களைக் கொண்டிருப்பது உயர்வுக்கான ஒற்றுமைத் தன்மையைக் காட்டுகிறது.

46 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாக சபையில் தலைவர், உபதலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், இரு செயற்குழு உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 9 பேர் உள்ளடக்கப்படுகின்றனர். இன்றும் இதே நடைமுறை பின்பற்றப்படுவதுடன் ஒரு நிர்வாக சபையின் ஆயுள்காலம் ஓராண்டு என்ற வகையில் செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கிராம மக்கள் தமது உழைப்புக்கடமைகளை முடித்து விட்டு பத்திரிகைகளைப் படிப்பதில் ஆர்வம் காட்டி, நாட்டு நடப்புகளையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் இந்தக் கிராமத்தில் கல்வியறிவு குறையப் பெற்றோர் அறிவு, ஆற்றல்களைப் பெற்றுக் கொண்டதுடன் நின்று விடாமல், அவற்றை வளர்த்துக் கொண்டனர். அறிவு, ஆற்றல்களைப் பெற்றுக் கொண்டதால் ஏனைய சமூகத்தினருடன் கைகோர்த்து செயற்படும் பக்குவத்தையும் கிராம மக்கள் பெற்றுக் கொண்டனர்.

கம்பன் கழக, கம்பன் சனசமூக நிலையம் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக இந்தக் கிராம மக்களுக்கு கல்வி, கலை, கலாசாரம், சுகாதார சேவைகள், அபிவிருத்தி சுயதொழில் வேலை வாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கி வந்துள்ளது. இருப்பினும் போர் காலத்தில் அதன் வேலைகள் தடைப்பட்டன. தற்போது இதே பணிகளை முன்னெடுத்துச் செல்ல கம்பன் சனசமூக நிலைய நிர்வாகசபை உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

இந்தச் சனசமூக நிலையமானது கருகம்பன் கிராமச் சிறார்களுக்கான பாலர் பாடசாலை ஒன்றையும் ஆரம்பித்து நடத்தியது. ஆனால் போர்ச் சூழ் நிலையால் அது இடைநிறுத்தப்பட்டது. தற்போது இந்தக் கிராமச் சிறார்கள் பாலர் கல்வியைத் தொடர அருகில் உள்ள முன்பள்ளி ஒன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

(தொடரும்)

# ஆசிரியர் பற்றாக்குறையை சம்மாந்துறையில் நிவர்த்தியுங்கள்

**பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஆசிரியர்களின்மையால் மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது**

எருவில்,ஜூன்6

சம்மாந்துறை கல்வி வலயத்திலுள்ள இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை உடனடியாக நிவர்த்திசெய்து தருமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அவசரவேண்டுகோள் விடுத் துள்ளன.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்துக்குள் உள்வாங்கப் பட்டுள்ள இறக்காமம் அஷ் ரப் மத்திய கல்லூரியில் தரம் - 6 தொடக்கம் தரம்-13 வரையிலான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

தரம் - 6 தொடக்கம் தரம் - 11 வரைக்குமான வகுப்பு மாணவர்களுக்குக் கணிதம், ஆங்கிலப் பாடங்களைக் கற் பிக்கவும், ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவு கணித, விஞ்ஞானத் துறை மாணவர்களுக்கு பௌதீகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்க ளைக் கற்பிப்பதற்கும் ஆசிரி யர்களின்மையால் மாணவர் களின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று பெற்றோர்கள் கவலை தெரி வித்தனர்.

குறித்த பாடங்களைக் கற்பித்துக்கொண்டிருந்த கல்முனைக் கல்வி வலய ஆசிரியர்கள் வேறு பாடசா லைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னர் அவர்களின் வெற்றிடங்க ளுக்கு இதுவரை புதிய ஆசிரியர்கள் எவரும் நியமிக் கப்படவில்லை என்று அவர் கள் தெரிவித்தனர்.

அண்மையில் இடமாற் றம் செய்யப்பட்ட கல்முனைக் கல்வி வலய ஆசிரியர்க ளுக்குப் பதிலாக புதிய ஆசி ரியர்களை கல்முனை வல யம் நியமிக்கும் என்ற எதிர் பார்ப்பில் இறக்காமம் கோட்டப் பாடசாலைக ளுக்கு சம்மாந்துறை வல யம் ஆசிரியர்களை போதி யளவு நியமிக்கவில்லை.

இந்தநிலையில், கல் முனை வலயம் சம்மாந் துறை வலயத்துக்கு புதிய ஆசிரியர்களை நியமிக்காத தால் இறக்காமம் கோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள் ளது என்று கல்வி அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

இறக்காமம் கோட்ட மட்டத்திலுள்ள 11 பாடசா லைகளிலும் முன்னணி பாடசாலையாகவுள்ள இறக் காமம் அஷ்ரப் மத்திய கல் லூரியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு இக்கல் லூரி அதிபர் எஸ்.எம்.இஸ் மாயிலும், பாடசாலை அபி விருத்திச் சங்கக் குழுவின ரும் பல்வேறு உயரதிகாரிக ளைச் சந்தித்து பல முயற் சிகளை மேற்கொண்டும் பயன் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

எனவே, கிழக்கு மாகா ணக் கல்வித் திணைக்களம் இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று பாடசாலை அபிவிருத்திச்சங்கம் வேண்டு கோள் விடுத்துள்ளது. (ச-31)

## வாக்காளர் இடாப்பில் பதிவு; அவதானமாகச் செயற்படவும்

**மத்திய மாகாண சபை உறுப்பினர் கோருகிறார்**

நுவரெலியா,ஜூன்6

2011 ஆம் ஆண்டு வாக் காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்ள விண்ணப் பித்த 7 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டன. அதனால் இந்த ஆண்டு மலையகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர்களை இணைத்துக் கொள்ள விண்ணப்பிப் போர் அவதானமாகச் செயற் பட வேண்டும் என்று மத் திய மாகாண சபை உறுப் பினர் முரளிரகுநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாக்காளர் படிவம் கிராம அலுவலர் அல்லது கணக் கெடுப்பு உத்தியோகத் தரால் வழங்கப்படும் போது அனைத்து மலையக மக்க ளும் பிழையின்றி விண் ணப்பத்தைப் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட உத்தியோகத் தரிடம் கையளித்து அதற் கான பற்றுச்சீட்டை பெற் றுக் கொள்ள வேண்டும்.

கடந்த வருடம் ஜூன் மாதம் நிரப்பப்பட்ட சுமார் 7000 நுவரெலிய மாவட்ட விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டுள்ளன. அதனால் விண்ணப்பங்கள் பிழை யின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை மலை யக சமூகம் புரிந்து செயல்பட வேண் டும்.

கடந்த வாரம் நுவரெ லியா மாவட்டத்தில் நடத் திய வாக்காளர் பட்டியல் திருத்தம் சம்பந்தமான செயலமர்வில் கடந்த ஜூன் மாதம் பதிவு செய்யப்பட்ட நுவரெலியா மாவட்ட வாக் காளர்களின் 7000 விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து கவனம் செலுத்தப் பட்டது. விண்ணப்பப்படி வங்கள் ஒழுங்காக நிரப்பப் படாததன் காரணமாகவே அவை நிராகரிக்கப்பட்ட தாக தேர்தல் செயலக அதி காரிகள் தெரிவித்தனர். - என்றார். (ச)

## வரக்காபொலவில் சந்தேகத்தில் நால்வர் கைது

வரக்காபொல,ஜூன்6

வரக்காபொல பிரதேசத் தில் வான் ஒன்றில் பய ணித்த நால்வர் சந்தேகத் தின் பேரில் கைது செய் யப்பட்டுள்ளனர்.


வான் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.15 மணிக்கு திடீர் சோத னைக்கு உட்படுத்தப்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாரம்மல பிரதேசத்தில் வீடு ஒன்றை உடைத்தமை உள்ளிட்ட மூன்று குற்றச் சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாரம்மல, தோரபிட்டிய பகுதியில் வீடொன்று உடைக் கப்பட்டு 19,0000 ரூபா பண மும் 247,000 ரூபா பெறு மதியான தங்க நகைகளும் திருடப்பட்டுள்ளன.

இவ்வாறு திருடப்பட்ட பணத்தில் 89315 ரூபா பணமும், சில நகைகளும் திருடப்பட்ட பணத்தில் கொள் வனவு செய்யப்பட்ட கைய டக்கத் தொலைபேசியும் கைது செய்யப்பட்டவர்க ளிடம் இருந்து கைப்பற்றப் பட்டுள்ளன.

சந்தேகநபர்களிடம் வரக் காபொல பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற இரண்டாம் வருட மாணவர்களுக்கு குறுகிய கால ஊடகக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் பணிப்பாளர் எம்.ஏ.சி சல்பியா உம்மா, அறிவிப்பாளர்கள் ஏ.எல் நயீம், ஜே.ஹைராத்தீன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (31)

## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

நுவரெலியா,ஜூன்6

மத்திய மாகாண கைத் தொழில், விளையாட்டு, மகளிர் விவகார தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு தோட்ட வீதிகளின் அபிவி ருத்திக்கென 30 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியின் மூலம் கண்டி, மாத்தளை, நுவரெ லியா ஆகிய மாவட்டங் களில் அமைந்துள்ள 30 பிரதான தோட்டப் பாதை கள் அபிவிருத்தி செய்யப் பட்டு வருகின்றன.

2012 ஆம் ஆண்டுக் கான நிதியொதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட் டுள்ள இந்தத் திட்டம் குறித்த காலத்துக்கு முன்னரே நிறை வேற தோட்ட நிர்வாகங் களின் பங்கு சிறந்த வாய்ப் பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மட்டு. நூலக நிர்மாணத்துக்கு 40 மில்லியன் ரூபா நிதி

மட்டக்களப்பு,ஜூன்6

மட்டக்களப்பு நகரில் அமைக்கப் பட்டு வரும் பொது நூலகத்தின் கட்டட நிர்மாணப் பணிக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந் தன் தனது விசேட அபிவிருத்தி நிதி மூலம் 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

மட்டக்களப்பின் 250 மில்லியன் ரூபா செலவில் கிழக்கு மாகாண முதல மைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் முழு முயற்சியின் கீழ் இந்தப் பொது நூலகம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்காக இதுவரையில் 150 மில்லியன் ரூபா செல விடப்பட்டுள்ளது. அத்து டன், தொடர்ந்து நிர்மாணப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின் றன. அடுத்த வருடம் நிறைவடையும் என எதிர்பார்க் கப்படும் இந்தப் பொது நூலகமானது சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வீடமைப்புத் திட்டத்துக்கு ரூ.5 லட்சம் கடனுதவி

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நுவரெலியா மாவட்ட அலுவலகத்தின் ஊடாக நுவரெலியா மாவட்ட மக்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு வீடு என்ற திட்டத்தினூடாக புதிய வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு குறைந்த வட்டியில் 5 லட்சம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது. இந்தக் கடனைப் பெற்றுக்கொள் வதற்கு அரச சேவையாளர்களும் ஏனையவர்களும் விண்ணப்பிக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

இந்தக் கடனைப் பெறவுள்ளவர்கள் காணியுறுதிப் பத்திரம் உள்ளவர்களாகவும் பிணையாளர்களைக் கொண்டவர்களாகவும் கடனை தவணை முறையில் மீளச்செலுத்தக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த வீடமைப்புத் திட்டம் தொடர்பாக பிரதேச கிராம சேவகர்கள் மூலமாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## டெங்கு பரவ இடமளித்தோர் பொலிஸாரிடம் சிக்கினர்

**கட்டுகஸ்தோட்டையில் சம்பவம்**

கட்டுகஸ்தோட்டை,ஜூன்6

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரதேசத்தில் கட்டுகஸ் தோட்டை சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது டெங்கு நுளம்புகள் உருவாகும் வகையில் சுற்றாடல்களை வைத்திருந்த 32 பேரைக் கைது செய்துள்ளனர். பொலிஸார் அக்குறணை, பாத்ததும்பறை போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இந்தச் சோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை பொலிஸார் கண்டி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது நீதிவான் தலா 1500 ரூபா வீதம் 48,000 ரூபாவை அபராதமாக விதித் துள்ளார். (ச)

## ரயிலுடன் ஓட்டோ மோதி மூவர் பரிதாபகரமாகச் சாவு

ஜா-எல,ஜூன்.6

ஜா-எல குடுகஹபொல ரயில் நிலையத்துக்குஅண் மையில் ஓட்டோ ஒன்று ரயில் என்ஜினுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள் ளனர். இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 8.50 மணிக்கு இடம்பெற்றுள்ளது. கொழும்பில் இருந்து [illegible] நோக்கி பயணித்த ரயில் குறித்தஓட் டோவுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோ வின் சாரதியான பிரதீப் பிர சன்ன (வயது- 42) அவரு டைய மனைவி மேரியன் விஜிதா பெரேரா ( வயது- 40) மகள் ஆகியோர் உயிரி ழந்துள்ளனர். 6 வயதுச் சிறுமி ஒருவரும் விபத்தில் காயமடைந்துள்ளார். சடலங் கள் [illegible] வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ச)



மஹரகம நகரசபையின் ஏற்பாட்டில் பொஸன் பௌர்ணமி கொண்டாட்டங்கள் மஹரகமவில் இடம்பெற்றன. அலங்கரிக்கப்பட்ட பல தோரணங்கள் மக்கள் பார்வைக்காக வைக்கப் பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமாகவே காணப்படுவீர்கள். தைரியமும் தன்னம்பிக்கையும் மிக அதிகமாக இருக்கும். பண விடயமாக எடுக்கின்ற முயற்சிகளில் முதலில் சிறு தடங்கல்கள் ஏற்பட்டாலும், அவை மொத்தமாக வந்து சேரும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பயணங்களாலும் சில ஆதாயம் ஏற்படும்.

**இடபம்:** அவசரப்படாமல் செயற்படுவதால் எல்லோரும் உங்களைப் பாராட்டுவார்கள். குடும்பத்தார் செய்த தவறுகள் காரணமாக சிறு குழப்பம் ஏற்பட்டு விலகும். பணத்தைத் தேடிச் செய்கின்ற முயற்சிகள் அவ்வளவு திருப்தியைத் தராது. நண்பர் ஒருவரின் வார்த்தைகள் அதிகம் யோசிக்க வைக்கும். அது தங்களின் நன்மைக்காகவும் இருக்கும்.

**மிதுனம்:** நாணயமாகச் செயற்பட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். அதற்கேற்றபடி நல்லவர்களுடைய தொடர்பும்-நெருக்கமும் அதிகமாகும். பண விடயத்திற்காக கௌரவத்தை இழக்காமல் செயற்படுவீர்கள். உங்களது திறமை பளிச்சென்று தெரிவதால் நிறைய இடங்களில் வரவேற்பும் பாராட்டும் கிடைக்கும்.

**கடகம்:** சில சாதனைகளைச் செய்ய வேண்டும் என்ற வைராக்கியத்தோடு உழைப்பீர்கள். தடைகளைப்பற்றிக் கவலைப்படமாட்டீர்கள். வெளியூரிலிருந்து தேவையான உதவிகள் கிடைக்கும். அலுவலகப்பணிகளில் சக ஊழியர்களின் செயற்பாடுகள் கொஞ்சம் அதிகமாகவே யோசிக்க வைக்கும்.

**சிங்கம்:** மனமகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். சில சூழ்நிலைகளை சாதகமாக்கிக் கொள்வீர்கள். நன்மையான பல காரியங்களும் நடைபெறும். விரும்பிய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அலுவலகப்பணிகளில் பளு கூடிய போதும் சிரமம் தெரியாது. பயணங்களால் மனநிறைவு எற்படும். வழக்குகளில் நிலவும் இழுபறி அதிகமாக கவலை கொள்ளச் செய்யும்.

**கன்னி:** தெளிவான மனநிலையோடு செயற்படுவீர்கள். சகோதரர்களால் உருவான பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவீர்கள். விருந்து விசேடங்களில் பங்கேற்று அளவளாவி மகிழ்வீர்கள். ஆடை ஆபரணங்கள் வாங்குவதாலும், வெளியூர் பயணங்களாலும் செலவுகள் நேரலாம்.

**நாளை**

வைகாசி 25 வியாழக்கிழமை 07.06.2012
திதி: திருதியை மு.ப 11.25 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப 07.48 வரை
சுபநேரம்: 07.22- 08.52 வரை
ராகு காலம்: 01.22- 02.52 வரை

**துலாம்:** பெரிய விடயங்களை மிகவும் கச்சிதமாக முடித்து விடலாம். ஆனால், சின்னச்சின்ன விடயங்களை மாத்திரம் அவ்வளவு சுலபமாக முடித்துவிட முடியாது. எனவே, அதை அப்படியே விட்டு விடுங்கள். குடும்பத்தார், சில சமயம் முழுமனதோடு ஒத்துழைக்கமாட்டார்கள். இதையும் கண்டும் காணாமல் இருந்து விட்டால் நல்லது.

**விருச்சிகம்:** பணம் பல வழிகளில் வரும். எடுத்த வேலைகளில் எதிர்பாராத வெற்றிகிட்டும். பெற்றோர்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களின் முன்னேற்றங்களுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். குழந்தைகளின் கல்விக்காக மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் காணலாம்.

**தனுசு:** குடும்பத்தில் சுபீட்சம் காணப்படும். கலகலப்பு, சந்தோஷம் கூடும் நாள். கடன் தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். சில நபர்களின் செயற்பாடுகள் அதிகம் யோசிக்க வைக்கும். எனினும் வெளிகாட்டிக் கொள்ளாமல் கொண்டு செல்வீர்கள். தொழிலை நவீனப்படுத்த முயற்சி மேற்கொள்வீர்கள்.

**மகரம்:** எதிர்பாராத பண வரவுகளால் சந்தோஷம் கூடுதலாகும். சில காரியங்களை தைரியத்தோடு மேற்கொள்வீர்கள். வெற்றிகரமாக முடிக்கவும் செய்வீர்கள். அரசியல்வாதிகள் கட்சியில் செல்வாக்குடன் காணப்படுவர். தொழில் தொடர்பாக திடீர் நடவடிக்கை மேற்கொள்வீர்கள்.

**கும்பம்:** நீங்கள் மேற்கொள்ளும் காரியங்களில் உங்களின் புத்திசாலித்தனம் பளிச்சிடும். நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைச் சந்திப்பார். பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் சற்று எச்சரிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்ப விடயம் ஒன்று மனக்கவலையை ஏற்படுத்தும்.

**மீனம்:** செல்வாக்கு, சொல்வாக்கு அதிகரிக்கும். வருமானங்களை அதிகரிக்க முயற்சிப்பீர்கள். சில இடங்களில் நகைச்சுவையாகப் பேசுகிறோம் என்ற எண்ணத்தில் பேசினால், விவகாரமாகி விடும், கவனம் தேவை. தொழிலில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடுதலாகும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 6 | | 8 | 5 | | |
| | | 8 | | | | 3 | 6 | 9 |
| | | 7 | | | 9 | 4 | 8 | 1 |
| | 7 | | | 9 | | | | 8 |
| | | | 1 | | 3 | | | |
| 9 | | | | 5 | | | 3 | |
| 8 | 9 | 4 | 5 | | | 7 | | |
| 7 | 5 | 2 | | | | 6 | | |
| | | 6 | 9 | | 2 | | | 5 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 6 | 3 | 8 | 9 | 2 | 7 | 4 |
| 9 | 2 | 3 | 7 | 5 | 4 | 8 | 1 | 6 |
| 8 | 4 | 7 | 2 | 6 | 1 | 9 | 5 | 3 |
| 4 | 6 | 2 | 1 | 7 | 3 | 5 | 8 | 9 |
| 5 | 8 | 1 | 9 | 4 | 6 | 7 | 3 | 2 |
| 3 | 7 | 9 | 8 | 2 | 5 | 6 | 4 | 1 |
| 2 | 3 | 4 | 5 | 9 | 8 | 1 | 6 | 7 |
| 6 | 9 | 5 | 4 | 1 | 7 | 3 | 2 | 8 |
| 7 | 1 | 8 | 6 | 3 | 2 | 4 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
17.04.1942

உதிர்வு
19.05.2011

### திருமதி சிவகாமவல்லி கந்தையா

திதி: அபரபக்க துதியை (06.06.2012)

சமுத்திரங்களைக் கடந்து பர்ணமித்துப்போன எம் கண்ணீரின்
வெம்மை ஓராண்டு கழிந்தும் இன்றும் அதே வெம்மையாய்,
எமது நெஞ்சில் நீங்காத நினைவலைகளை விட்டுச் சென்ற நீ
நீண்டு செல்லும் இந் நாள்களில் எம்முடன் இருப்பதாய் ஒரு நினைவு

எம்மை அன்பிலே வளர்த்தெடுத்த நீ, சிறந்த தாய், அன்பான மாமி,
அறிவொழுகும் பாட்டி. நாள்கள் பல நகர்ந்தாலும் உன் நினைவுச்
சுவடின் தடம் இன்னும் அழியவில்லை.
கருணை பொங்கும் உன் முகமும்
எம் உள்ளத்தினின்றும் மறையவில்லை
ஒளிர்ந்த போது ஒளி கொடுத்த மெழுகுதிரியாகவும்
அணைந்த பின்பும் எம் அகத்தில் அங்கு ஒளியாகவும் மிளிரும்
எம் வீட்டுச் சூரியனே, நாம் இருக்கும்வரை உன் நினைவலை
எம்மை விட்டு நீங்காது.
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

கணவர், மகன்மார், மகள்மார்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்.

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.




# சரவணா ரெக்ஸ்

**வாடிக்கையாளருக்கான விசேட சலுகை**

சித்தரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தியாவில்
இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
Special OFFICE WARE பஞ்சாபிதுணிகள்
சாறிகள் இந்தியா விலைக்கே
விற்பனை செய்யப் பட்டுவருகின்றது என்பதனை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
(கையிருப்பு முடியும் வரை)

**இடம் - சரவணாரெக்ஸ் களஞ்சிய சாலை**
**சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்**
**(ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)**





**கையிருப்பு முடியும்வரை**
நேரம்- காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணி வரை
1 சில்க் சாறி- 500/=
1 கொட்டன் சாறி- 500/=

* இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள் - 1500/=
* இந்தியன் பட்டுச் சாறிகள் - (Full work) 3000/=
* இந்தியன் கஸ்மீர் சாறிகள் - 1500/=
* இந்தியன் மைசூர் சில்க் சாறிகள் - 2500/=
* இந்தியன் சூங்குடி வோயில் சாறிகள் - 1000/=
* ஜப்பான் சில்க் சாறிகள்
* இந்தியன் பன்சி சாறிகள் மற்றும் பாகிஸ்தான் பஞ்சாபித்துணிகள், சில்க் பஞ்சாபித் துணிகள், கொட்டன் பஞ்சாபித் துணிகள் மற்றும் ரெடிமேற் பஞ்சாபிகள்
* பெண்களுக்கான ரொப் - 500/=
* இந்தியன் ரெடிமேற் பஞ்சாபி - 2000/=
* ஆண்களுக்கான சேட் - 500/=
* ஆண்களுக்கான ஜீன்ஸ் - 500/=

மற்றும் விதவிதமான சாறித் தெரிவுகள்

[சி/282] [2-6-9]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் நோயைத் தடுக்க விசேட வேலைத்திட்டங்கள்

## சிறைச்சாலை ஆணையாளர் தகவல்


கொழும்பு,ஜூன்6

சிறைக் கைதிகள் இடையே எயிட்ஸ் உள்ளிட்ட இதர தொற்று நோய்கள் பரவுவதை தடுக்க விசேட வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யு.கொடிப்பிலி தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்ட வெலிக்கடை சிறைக் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார். .இவர் எயிட்ஸ் நோயால் உயிரிழந்தார் என்று கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார் என்று அவர் கூறினார்.

இந்த நிலையில் கைதிகள் இடையே தொற்று நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில் விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எயிட்ஸ் உள்ளிட்ட நோய்கள் குறித்து கைதிகள் தெளிவுபடுத்தப்படவுள்ளனர். (ச)



திருகோணமலை, திரியாய் பகுதியிலுள்ள உலகின் முதலாவது தாது கோபுரமான கிரிஹடுசேய 10 மில்லியன் ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு மின் ஒளி விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு பொஸன் தினமான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது

# பாரத லக்ஷ்மன் கொலை; விசாரணைகள் நிறைவு

## குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிப்பு

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர தொடர்பான அறிக்கைகளை கொண்ட கோவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு,ஜூன்6

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர மற்றும் ஏனைய மூவரின் கொலைச் சம்பவம் தொடர் பான விசாரணை முடிவடைந்துள்ளதாகக் கூறி கொழும்பு நீதிவான் நீதி மன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று செவ் வாய்க்கிழமை அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

அரசாங்க பகுப்பாய்வு திணைக்களமும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாக நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கூறினர். இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்காக காத்திருக்கின்றோம் என்று தெரிவிப்பதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றம் சென்றுள்ளனர்.

பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திர வின் மகள் ஹிருணிக்கா பிரேமச்சந்திர நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித் துள்ளார். எனவே அவர் நீதிமன்றத்தை அவமதித்தமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிவானிடம் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய கோரினார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திர தொடர்பான அறிக்கைகளைக் கொண்ட கோவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கோவையை சட்ட மா அதிபர் திணைக் களத்திடம் கையளிக்குமாறு நீதிவானை அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

# எரிபொருள் நிலையத்தில் 25 லட்சம் ரூபா கொள்ளை

கொழும்பு,ஜூன்6

வான் ஒன்றில் வந்த கும்பல் ரம்புக்கன எரி பொருள் நிரப்பு நிலையத்தில் 25 லட்சம் ரூபா பணத்தை நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணிபுரிந்த இருவரை அச்சுறுத்தி வானில் வந்த கும்பல் பணத்தை சூறையாடிச் சென்றுள்ளது. இது தொடர்பில் ரம்புக்கன பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இணையத்தின் பாதுகாப்புக்கு அறிக்கை சமர்ப்பிக்கத் தயார்

கொழும்பு,ஜூன்6

எந்தவொரு இணையத்தின் பாதுகாப்பு தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்கத் தயார் என்று இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இணையம் ஒன்றைப் பாதுகாப்பதற்கு முன்னர் அதன் பாதுகாப்பு குறித்து ஆராய்வது மிகவும் அவசியம் என்று அந்தப் பிரிவின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்த தெரிவித்தார்.

இணையத்துக்கு வேற்று நபர்கள் பிரவேசித்து அதன் அமைப்பை மாற்றியிருந்தால் அந்தச் சமயத்தில் கணினி அவசரப் பிரிவின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# சந்தேகநபர் கைது

கொழும்பு,ஜூன்6

சீன நபர்களுடன் இணைந்து இணையத்தின் மூலம் நிதி மோசடியில் ஈடுபட்ட கும்பலின் பிரதான சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இலங்கை நபரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகள் மூலம் நிதி மோசடி குறித்த பல தகவல்கள் கசிந்துள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புத் திணைக்களத்தினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

இந்த நிதி மோசடியின் தலைமை சந்தேகநபர் தாய்லாந்தில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர் தொடர்பில் சர்வதேச பொலிஸார் ஊடாக தகவல் பெற நடவடிக்கை எடுத்துள்ளதாக குற்றத்தடுப்புத் திணைக்களத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (ச)

# படையினருக்கு பயிற்சி வழங்க இந்தியா, அமெரிக்கா இணக்கம்

## வெளிவிவகார அமைச்சு தகவல்

கொழும்பு,ஜூன்6

இலங்கைப் படையினருக்கு பயிற்சிகளை வழங்க வேண்டும் என விடுக்கப் பட்ட கோரிக்கையை இந்தியாவும், அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டுள்ளன. இந்தத் தகவலை இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூரில் நடைபெறும் பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினரை மேம்படுத்தும் முகமாக இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும் என்று கோத்தபாய கோரிக்கை விடுத்தார்.

இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடைமுறை மற்றும் அதன் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பாக இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் பீரிஸ், இந்திய மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறியதாக வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும், தமது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைத் தொடர்ந்தும் பேண இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் ஆணைக் குழுவின் நடைமுறை, நிரந்தர சமாதானம் என்பன அவசியமானவை என்று இந்திய மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச)


# துண்டாடப்பட்ட கை வெற்றிகரமாகப் பொருத்திச் சாதனை


கொழும்பு, ஜூன்.6

வாள்வெட்டில் 17 வயது மாணவனின் வலது கை மீண்டும் பொருத்தப்பட்டது. தோளுக்குச் சற்றுக் கீழாக முற்றாகத் துண்டிக் கப்பட்டது. துண்டிக்கப்பட்டவரது கை 10 மணிநேர சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவின் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த மாணவன் தற்போது குணமடைந்து வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவின் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர் அமில சிறிவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணரான துஷான் பெனரகமையின் நெறிப்படுத்தலின் கீழ் சத்திர சிகிச்சை மருத்துவர் அமிலசிறிவர்த்தனவால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சத்திர சிகிச்சைக்கு குறித்த பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவின் மருத்துவர்கள், உணர்விழக்கச் செய்யும் மருத்துவர்கள் மூவர் மற்றும் தாதிமாரும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.





கடந்த முதலாம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு ஆரம்பமான இந்தச் சத்திர சிகிச்சை மறுநாள் முற்பகல் 10.30 மணிக்கே முடிவடைந்துள்ளது.

பாணந்துறை களுதாவல பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த மாணவன் கடந்த 31 ஆம் திகதி இரவு 10 மணிக்கு வீட்டின் முன்றிலில் இருந்த வேளையில் ஓட்டோவில் வந்த நபரொருவர் இவனை வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் கை துண்டாக்கப்பட்டவுடன் கடந்த முதலாம் திகதியன்று உடனடியாகவே கையுடன் மேற்படி மாணவன் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு பின்னர் உடனடியாகவே கொழும்பு தேசிய வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா காணும் நாயகன்
# உயர்திரு.பரமநாதன் விக்னேஸ்வரன்
## (மாகாணக் கல்விப் பணிப்பாளர் வட மாகாணம்) அவர்களின்
# சேவை நயப்பு மலர் – 06.06.2012

### Governor's Message



I have a great pleasure to felicitate Mr P. Vigneswaran, Provincial Director of Education celebrating 60th birthday and retiring from public service.

Starting as a teacher in 1974, he has entered Sri Lanka Educational Administrative Service in 1987 and reached the highest post Provincial Director in the Education Sector.

He has a very good quality of team building in the office administration and I am aware that his cadre has provided fullest co-operation to achieve the targets.

He quickly acts on the decision made and thereby avoided cropping up problems. Zonal Directors on his direction has implemented policies up to the school level.

I wish for him for a happy retired life with family members and expecting voluntary contribution in the field of education in Northern Province which needs an urgent attention.

I thank him on behalf of Northern Provincial Council for his valuable service rendered and wish him a success.

G.A.Chandasiri,
Governor, Northern Province.



### கௌரவ ஆளுநரது செயலாளரின் வாழ்த்துச் செய்தி



மணிவிழாக்காணும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அராலி இந்துக் கல்லூரியில் ஆசிரியராகத் தடம் பதித்து பல்வேறு பதவிகளை அலங்கரித்து வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகி மணிவிழாக்காணும் திரு. பரமநாதன் விக்கினேஸ்வரனைச் சேவையின் சிகரமெனக் கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன். உன்னதமான கல்விச் சேவையினால் கூர்ப்படையாத புலங்களே இல்லையெனலாம். திரு. விக்னேஸ்வரன் ஜோன் டூயியின் சிந்தனைக்கு இலக்கணமாக மிளிர்ந்தார். ஏற்றத்தாழ்வின்றி எல்லோரும் கல்வி யறிவைப் பெறவேண்டும் என்ற ஜோன் டூயியின் சிந்தனையைச் செயலாக்கப் பாடுபட்ட ஒருவர் அவர். அன்னாரின் முப்பத்தெட்டாண்டு காலக் கல்விப்பணி கவிதை வரிகளால் எழுதப்படக்கூடிய கனதி வாய்ந்தது.

நெருக்கடி மிகுந்த கால கட்டங்களில் அலுக்காது சலிக்காது அவர் சேவை செய்தார். எதையும் நேருக்கு நேர் கூறும் மனப்பாங்குடையவர் திரு. விக்னேஸ்வரன். மகாத்மாகாந்தி கண்ட சாதி, மத, பேதமற்ற சர்வோதய சமூகத்தைக் கல்வியினூடு காண அவர் விழைந்தார். காலத்தால் அழியாத கல்விச் செல்வத்தை வடமாகாணத்தில் வளமாக்கப் பாடுபட்ட திரு. ப. விக்னேஸ்வரனின் கல்விப் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

இ.இளங்கோவன், கௌரவ ஆளுநரின் செயலாளர்,
ஆளுநர் அலுவலகம், வடமாகாணம்.

### வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



கல்வித் துறையில் 30 ஆண்டுகளுக்கு மேல் அரும்பணியாற்றி இன்று அகவை அறுபதில் காலடி எடுத்து வைக்கும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. ப.விக்னேஸ்வரன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அரச சேவைக் காலத்தில் நல்லாசிரியனாக சிறந்த அதிபராக ஆளுமை மிக்க அதிகாரியாக நற்பண்பு மிக்க மனிதனாக பல்வேறு பாத்திரங்களில் அர்ப்பணிப்பும் சேவைமனப்பான்மையும் ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்றியமை பெருமைக்குரியதாகும். எமது கல்வி உலகின் எதிர்பார்ப்புகளையும் நோக்கங்களையும் நிறைவு செய்வதிலும் கல்வியறிவும் நற்பண்புகளும் உயரிய சமூக விழுமியங்களும் உடைய ஆற்றலும் ஆளுமையும் மனித நேயமுடைய உயரிய மாணவ சமூகத்தின் உருவாக்கத்தில் இவர் ஆற்றியுள்ள சிறப்பான பணியினை பாராட்டுகின்றேன். அவர் தனது குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து இன்னும் பல சமூகப் பணிகளை ஆற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சத்தியசீலன், செயலாளர், கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

உயர் திரு. பரமநாதன் விக்னேஸ்வரன்
மாகாணக் கல்விப்பணிப்பாளர் வட மாகாணம்

பிறந்த திகதி 07.06.1952

| | |
|---|---|
| ஆரம்பக்கல்வி | : யா/ வியாவில் சைவ வித்தி. காரைநகர் |
| இடைநிலைக்கல்வி | : யா/ யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர். |
| உயர்தரக் கல்வி | : யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை. |
| பட்டப்படிப்பு | : யாழ். பல்கலைக்கழகம் B.Sc. (Hons) |
| பட்டப் பின் படிப்பு | : யாழ் பல்கலைக்கழகம் Dip in Edu. |

இலங்கை கல்வி நிர்வாகசேவை III 01.06.1987
இலங்கைக் கல்வி நிர்வாக சேவை II 08.06.1997
இலங்கை கல்வி நிர்வாக சேவை I 01.01.2005

**சேவை விவரம்:**

யா /அராலி இந்துக் கல்லூரி
ஆசிரியர் 10.05.1974 - 09.07.1978
யா/ கலாநிதி ஆ. தியாகராசா ம.வி.
ஆசிரியர் 10.07.1978 - 07.04.1991
யா /ஸ்கந்தவரோதயக் கல்லூரி
அதிபர் 08.04.1991 - 19.12. 1993
கோட்டக் கல்விப் பணிப்பாளர், சங்கானை.
20.12.1993 - 28.01.1997
பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம்
29.01.1997 - 30.09.1998
வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்
01.10.1998 - 23.01.2003
யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்
24.01.2003 - 06.03.2005
வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
07.03.2003 - 05.09.2010
மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்
06.09.2010 - இன்று வரை

### அருளாசிச் செய்தி
### கல்விசார் பெருந்தகையீர்



வடமாகாண கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு நிலை யடையும் பரமநாதன் விக்னேஸ்வரனைப் பாராட்டி விழா எடுப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கல்விப் பராம்பரியத்தின் வரலாற்றில் தனக்கொரு இடத்தை ஒதுக்கிக் கொண்ட திரு. விக்னேஸ்வரன் ஆசிரியராக, அதிப ராக, கோட்டக் கல்வி அதிகாரியாக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, வலயக் கல்விப் பணிப்பாளராக, மாகாணக் கல்விப் பணிப்பாளராக, கடமையாற்றிய சிறப்பு அடக்கம், அறிவு, விடாமுயற்சி, எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் திறன், இறைபக்தி, எல்லோரிடமும் மேன்மையாகப் பழகும் சுபாவம் அனைத்திற்குமுரிய கல்விப் பணிப்பாளரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சங்கானை கல்விக் கோட்ட சைவத் திருமுறை விழா பல ஆண்டுகளாக சிறப்பாக நடைபெறுகின்ற செய்தியைக் கொண்டுள்ளது. பணிப்பாளருடைய பணிகளை வாழ்த்திப் பாராட்டு கின்றோம். இன்று போல் என்றும் மகிழ்ச்சியாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

### யாழ்.ஆயரின் ஆசியுரை



கல்வித் துறையில் பெயர்போன யாழ்ப்பாணப் பிரரேசத்தில் பல கல்விமான்கள் காலத்துக்குக் காலம் அளப்பெரும் சேவையாற்றி சென்றிருக்கிறார்கள். இவர்கள் வரிசையில் உயர்திரு. பரமநாதன் விக்னேஸ்வரன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வடமாகாணம் அவர்களின் பெயர் நினைவில் வைக்கப்பட வேண்டியது ஒன்றாகும்.

யாழ்மண்ணிலேயே தனது பட்டப்படிப்புக்களை முடித்து இலங்கை கல்வி நிர்வாக சேவையில் முதல் தரத்தை அடைந்து 93ஆம் ஆண்டில் இருந்து கல்வி அலுவலகங்களில் தொடர் பணியாற்றி யாழ் கல்வியை பொறுத்தளவில் மிக்க அனுபவம் உள்ளவராக விளங்குபவர்தான் திருவாளர் பரமநாதன் விக்னேஸ்வரன்.

இவரை நான் சில கல்வி பொது வைபவங்களில் சந்தித்து உரையாடியும் இருக்கின்றேன். யாழ் மக்களின் கல்வி மேம்பாட்டில் மிகுந்த அக்கறையும் அனுபவமும் கொண்டவர். இவரின் வழிகாட்டலில் யாழ் மண்ணில் எத்தனையோ கல்வி சேவையாளர்கள் தோன்றி பயனடைந்துள்ளனர். தனது அருட்பெரும் பணியை முடித்து ஓய்வு பெற இருப்பதனால் இவர் பணியையும் சேவைகளையும் வாழ்த்தி யாழ் மண்ணின் கல்விப் பணிக்கு புகழ் சேர்த்த இவர் நீடூழி வாழ்க என வாழ்த்தி இறையாசீர் கூறுகின்றேன்.

பேரருட் திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

### அன்பும் பண்பும் மிக்கவர்



அன்பும் பண்பும் மிக்க ஆளுமை கொண்ட நிர்வாகத் திறன் மிக்கவர் தான் உயர்திரு. ப. விக்னேஸ்வரன் என்று கூறுவதில் நான் புளகாங்கிதம் அடைகின்றேன்.

எமது கல்லூரி 2003 ஆம் ஆண்டு மீள ஆரம்பிக்கப்பட்ட போது யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் என்ற வகையில் மீள் தொடக்க விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததோடு இன்று வரை எமக்கு பல்வேறு வழிகளில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் ஆளுமை மிக்கவர் தான் திருவாளர். ப. விக்னேஸ்வரன் அவர்கள். வடமாகாண கல்வி மறுமலர்ச்சிக்கு அவரது அர்ப்பணிப்பான சேவை காலத்தால் மறக்க முடியாததாகும்.

மணிவிழாக்காணும் நாயகனது வாழ்வு வளம் கொழிக்கவும் கல்விப்பணி சிறக்கவும் இறைவழிகாட்டல் கிடைக்கவும் எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

எம். எஸ். ஏ.எம். முபாறக்
பிரதம இமாம் அல்லா பிச்சை முகம்மதியா மஸ்ஜித், முஸ்லிம் வட்டாரம், யாழ்ப்பாணம்.

### காலப் பதிவுகள்

காரைநகர் மண்ணின் புகழ் பூத்த சீரிய குடும்பமாம் பரமநாதன்- பரிமளம் தம்பதிகளின் அருந்தவப் புதல்வனாய் உதித்து வடமாகாண மக்களின் கல்வித் தந்தையாய் இருள் அகற்றி ஒளி ஏற்றிய காலைக் கதிரவனாய் உங்களை நாம் பார்க்கின்றோம். கல்விக் கடமைக்காய் பணியேற்று ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, பல வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளராக, மாகாணக் கல்விப் பணிப்பாளராக மாண்புடனும் மதிப்புடனும் மாணவர் உயர் தேர்ச்சியே என் உயிர் மூச்சு என உழைத்த உழைப்பினை நாம் மறக்கவில்லை. வடமாகாணத்தின் 1031 பாடசாலைகளும் அவற்றின் உள்ளீடான 2 இலட்சத்து 54 ஆயிரத்து 616 மாணவர்களினதும் அவர்களுக்கு கல்வியளிக்கும் 13 ஆயிரத்து 853 ஆசிரியர்களினதும் 1058 அதிபர், பிரதி அதிபர்களினதும் நம்பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் உரிய அதிகாரியாக தாங்கள் கடமையாற்றிய பெறுமதி மிக்க காலங்களை நாம் நினைவிற் கொள்கின்றோம்.

வடமாகாணத்தின் 34 கோட்டக் கல்விப் பணிப்பாளர்களினதும் சுயத்தைப் பாதுகாத்த பெருமைக்குரிய உத்தம மாகாணக் கல்விப் பணிப்பாளராக தங்களைப்பார்க்கின்றோம். தங்களின் தன்னலமற்ற சேவைக்குத் தலைவணங்குகின்றோம். கோட்டக்கல்விப்பணிப்பாளர்களை பாடசாலைகளின் அண்மித்த மேற்பார்வையாளர்களாக்கியதுடன் எம்மை வலுவூட்ட தாங்களும் தங்கள் அன்புக்குரிய அதிகாரிகளும் எடுத்த முயற்சிகள் என்றும் மறக்கமுடியாதனவாகும்.

வடமாகாணத்தின் பல கோட்டக்கல்விப் பணிமனைகளை சிறப்பார்ந்த வளமுடையதாக்கியதுடன் ஏனையவற்றின் வளப்படுத்தலுக்காக 2012 இல் சிபார்சுகளையும் முன்வைத்துள்ளமையை மறக்க முடியாது. தங்களால் ஒழுங்கமைக்கப்பட்ட ஹபறணை வாண்மை விருத்தி வதிவிடச் செயலமர்வும் ஏனைய வதிவிடச் செயலமர்வும் மறக்க முடியாத சேவைகளாகும்.

வடமாகாண கல்விப் புலத் தரவுகளை விரல் நுனியில் வைத்து [illegible] தங்களின் திறன் கண்டு வியந்திருக்கின்றோம். வடமாகாண கல்விப் பிரிவுப் புள்ளி விவரம் என்னும் மாதாந்த கையேடு தங்கள் காலத்தின் அரும்பெரும் சொத்தாகும்.

தாங்கள் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய ஒவ்வொரு வலயங்களும் ஒவ்வொரு விதத்தில் வளம் பெற்றதை மறக்க முடியாது. குறிப்பாக தளபாடங்கள், பாடசாலைக் கட்டடங்கள், ஆசிரியர் வளம், அதிபர் வளம், கணினி வளம் என்பனவற்றைக் கூறமுடியும். விசேடமாக யாழ்மாவட்டத்தின் 05 வலயங்களிலும் தாங்கள் இறுதியாக வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வலிகாமம் வலயம் நவீன கட்டடத் தொகுதியை முதன் முதல் பெறக் காரணமாக இருந்தவர் என்ற வகையில் குறிப்பிட்ட பிரதேச சமூகம் தங்கள் சேவையினை மதிக்கின்றது. வாழ்த்துகின்றது. வன்னிப் பெருநிலப்பரப்பு மன்னார், வவுனியா போன்ற இடங்களின் பாடசாலை அபிவிருத்தி, மாணவர் நலன், அதிபர், ஆசிரியர் நலன்களில் தாங்கள் வெளிப்படுத்தி வரும் கரிசனையும் ஆர்வமும் மறக்க முடியாது. குறிப்பிட்ட இடங்களில் மிகக் கஷ்டமான இடங்களில் முகாமிட்டு கடமையாற்றியதனை அப்பகுதி மாணவர்களும் மக்களும் உயிர் உள்ளவரை மறக்க மாட்டார்கள்.

வலயக் கல்விப் பணிமனைகளின் தேவைகளை அறிந்து உடனுக்குடன் தீர்த்த காரணத்தினால் தான் இவ்வளவுக்காவது வட மாகாணக் கல்வி உயிர்ப்புள்ளதாக சாதனை நோக்கி வளர்ந்து வருகின்றது.

உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்ற உயர் சேவையாளனான தாங்கள் 38 ஆண்டு கால கல்விப் பணியில் எவருக்கும் கிடைக்காத நன்மதிப்புடன் மணிவிழாக்காண்பது உயர்சிறப்பாக வடமாகாண சமூகம் வாழ்த்துகின்றது. உண்மை, நேர்மை, உறுதி, சத்தியம், காருண்ணியம் இவற்றைத் தங்கள் சேவைக்காலத்தில் கடைப்பிடித்த சேவையாளராக விளங்கியதை மறக்க முடியாது. தங்களின் மொழியாற்றலும் மனிதனை மனிதான மதிக்கும் பண்பும் காலத்தால் அழிக்க முடியாதது. மணிவிழாக்காணும் தாங்கள் சுகநலன்களுடன் நீடூழி வாழ வாழ்த்துவதுடன் வாழ்நாள் கல்விப் பணியாளராக எம் சமூகத்துக்கு தாங்கள் விளங்க வேண்டும் என்பதே எமது விருப்பமும் வேண்டுகையுமாகும்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - வட மாகாணம்.

(அ/457) (2-6-7)

## வாழ்த்துவோர் - கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - வட மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முள்ளிவாய்க்காலில் கைவிடப்பட்ட

# கன்னியர்மடத்தின் 'ஹைஏஸ்' வாகனம் கடத்தப்பட்டு கொழும்பில் விற்பனை

## இனங்காணப்பட்டதையடுத்து உரியவர்களிடம் நீதிமன்றால் ஒப்படைப்பு

கிளிநொச்சி, ஜூன் 6

இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் கைவிடப்பட்ட திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கு சொந்தமான ஹைஏஸ் ரக வாகனம் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டு கொழும்பில் 3 ஆவது நபருக்கு விற்கப்பட்ட நிலையில் அது தற்போது மீட்கப்பட்டு நிபந்தனை அடிப்படையில் கிளிநொச்சி நீதிமன்றால் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் செயற்பட்டு வந்த திருக்குடும்ப கன்னியர் மடத்தின் மாற்றுவலுவுடைய சிறார்களின் போக்குவரத்திற்கென இறுதி வரை பயன்படுத்தப்பட்டு வந்த ஹைஏஸ் ரக வாகனம் இறுதி போரின் போது நல்ல நிலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அதனுடைய சகல ஆவணங்களுடன் கைவிடப்பட்டிருந்தது.

**முள்ளிவாய்க்கால் பகுதியில் கைவிடப்பட்ட தமிழ் மக்களின் பெறுமதியான வாகனங்கள், சொத்துக்கள் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட நிலையில் பல்வேறு இடங்களிலும் பிடிபட்டுள்ளன.**

இந்த நிலையில் குறித்த வாகனம் அதே இலக்கத் தகட்டுடன் கொழும்பில் நடமாடுவதை அவதானித்த திருக்குடும்ப கன்னியர்மட நிர்வாகத்தினர், அதனை மீட்டுத் தருமாறு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்தனர்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸார் குறித்த வாகனம் முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு 3 ஆம் நபர் ஒருவருக்கு சுமார் 19 லட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்து வாகனத்தையும் மீட்ட கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 31 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த வாகனத்தை உரிமை கோரிய திருக்குடும்ப கன்னியர் மட நிர்வாகத்திடம் ஒப்படைக்க உத்தரவிட்டதுடன் குறித்த நான்கு சந்தேக நபர்களையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் பணித்தார்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் கைவிடப்பட்ட தமிழ் மக்களின் பெறுமதியான வாகனங்கள், சொத்துக்கள் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட நிலையில் பல்வேறு இடங்களிலும் பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (10 - 6)

# கிளிநொச்சி வாகன விபத்தில் ஒரே குடும்பத்தில் மூவர் காயம்

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சி ஏ -9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்து கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கிளிநொச்சி செல்வநகரைச் சேர்ந்த சின்னையா சிவலோகநாதன் (வயது -48), சிவலோகநாதன் கிறிஸ்ரீனா (வயது -38) மகனான சிவலோகநாதன் மயூசுகன் (வயது -5) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு ஏ-9 வீதி கிளிநொச்சி காக்கா கடைச் சந்திக்கும் பொலிஸ் நிலையத்திற்கும் இடையில் மோட்டார் சைக்கிளும் ஹைஏஸ் வாகனமும் மோதி விபத்து நிகழ்ந்தது.

குறித்த விபத்து தொடர்பில் விசாரணை நடத்திய கிளிநொச்சி பொலிஸார் ஹைஏஸ் வாகனத்தை செலுத்திச் சென்ற சாரதியை கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன் போது குறித்த சாரதியை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். (10- 6)

# கனடாவிலுள்ள இரண்டு ஆலயங்களுக்கு அபராதம்

## புலிகளுக்கு பணம் அனுப்பியதாக குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 6

விடுதலைப் புலிகளுக்கு பணம் அனுப்பி வைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு கனடாவிலுள்ள இரண்டு இந்து ஆலயங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு இந்து ஆலயங்களினதும் நிர்வாகிகள் கடந்த 2004ம் ஆண்டில் புலிகளுக்கு பணம் அனுப்பி வைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் போது தகுதியற்ற அறக்கட்டளைகளுக்கு பணம் அனுப்பி வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது. ரிச்மன்ட் ஹில் இந்து ஆலயம் மற்றும் மஷி சாகுவா இந்து ஆலயம் ஆகியவற்றுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

முறையே 140000 மற்றும் 300000 டொலர் என்ற அடிப்படையில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த இரண்டு ஆலயங்களினதும் அறக்கட்டளைகள் தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்கு பணம் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்து வந்த அமைப்பு என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற போது 70 வீதமான தமிழர் பிரதேசங்களே பாதிக்கப்பட்டதாகவும், கிடைக்கப்பெற்ற உதவிகளில் 80 வீதமானவை தென் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் ரிச்மன்ட் ஹில் ஆலயத்தின் செயலாளர் மணிக் அம்பிகாபதி தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்கில் பணம் அனுப்பி வைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். கனடாவின் வருமான முகவர் நிறுவனத்தால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்க பாதுகாப்பு செயலர் இந்தியாவில்

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் லியோன் பனேட்டா 2 நாள்கள் பயணமாக நேற்று இந்தியா சென்றுள்ளார்.

ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் நிலைமை, இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் அவர் விவாதிப்பார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈழத் தமிழர்களை ஏமாற்றுகிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி

மதுரை, ஜூன் 6

தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதியின் ஈழத் தமிழர்கள் மீதான அக்கறை வெறும் ஏமாற்று வேலை என்று லட்சியத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் , இயக்குநருமான டி.ராஜேந்தர் குற்றம்சாட்டியுள்ளார்.

பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்து லட்சியத் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மதுரை தலைமை தபால் நிலையம் அருகில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

டி.ராஜேந்தர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழ் மக்கள் சிங்கள ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட போது மத்திய அரசில் தி.மு.க. இருந்தது. அப்போது மத்திய அரசில் இருந்து விலகுமாறு தி.மு.க.வை கேட்டுக் கொண்டோம். ஆனால் கருணாநிதியோ பதவிக்காக மத்திய அரசில் இருந்து விலகவில்லை.

தற்போது மட்டும் இலங்கைத் தமிழர் உரிமைக்காக போராடுவதாகக் கருணாநிதி கூறுவது மக்களை ஏமாற்



றும் செயல்.

கருணாநிதி உண்மையாகவே மக்களுக்காகப் போராடுபவர் என்றால், முதலில் மத்திய அரசில் உள்ள தி.மு.க. அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்றார். (10)

### சிங்கப்பூரில் இலங்கையர்கள் நால்வர் கைது

கொழும்பு, ஜூன் 6

சிங்கப்பூரில் உள்ள 'லிட்டில் இந்தியா' என்ற வர்த்தக நிலையத்தில் 7 தங்கச் சங்கிலிகளை களவாடினர் என்ற குற்றச்சாட்டில் நான்கு இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 30ஆம் திகதி குறித்த வர்த்தக நிலையத்தின் 58 வயதுடைய விற்பனை பிரதிநிதி ஒருவர், 7 தங்கச் சங்கிலிகளை விற்பனைக்காகக் காண்பித்துக் கொண்டிருந்தவேளையில் அவை களவாடப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையத்தில் அதிக சன நடமாட்டம் இருந்ததால் கள்வர்களை அப்போது பிடிக்க முடியவில்லை. இந்நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முதலாவது சந்தேகநபர் ஜூன் முதலாம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய மூன்று சந்தேகநபர்களும் சிங்கப்பூரை விட்டுச் செல்லும் வழியில் கடந்த 2 ஆம் திகதி சங்கி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து, களவாடப்பட்ட நான்கு தங்கச் சங்கிலிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர் குற்றவாளி ராஜபக்ஷவே பிரிட்டனை விட்டு வெளியேறு

## நியூசிலாந்திலும் மக்கள் கூடி நேற்று ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஜூன் 6

பிரிட்டன் மகாராணியின் 60 ஆவது வைர விழாவில் கலந்துகொள்ள சென்ற இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அந்த நாட்டை விட்டு வெளியேற கோரி நியூசிலாந்தின் வர்த்தக நகரமான ஆக்லாந்தின் மத்திய நகரங்களில் ஒன்றான பில்மோரல் பகுதியில் ஒன்று கூடிய தமிழ் மக்கள் கடும் குளிர், மழையுடன் கூடிய பலத்த காற்றுக்கும் மத்தியில் கவனஈர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

பிரிட்டனில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆர்ப்பாட்டம் நடத்தும் தமிழ் மக்களுக்கு ஆதரவாக மோசமான கால நிலையையும் பொருட்படுத்தாது நியூசிலாந்தில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் நியூசிலாந்தின் தலைநகரில் உள்ள பிரிட்டன் தூதரகத்திற்கும் மகஜர் ஒன்றை கையளித்தனர். (10)

# ஓட்டோவில் மூவருக்கு மேல் பயணிக்க புதிய திருத்த சட்டம்

## நாடாளுமன்றில் சமர்ப்பிக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 6

ஓட்டோவில் 3 பேருக்கு மேல் பயணிக்கலாம் என்ற சட்டத்தில் திருத்தம் ஒன்றை கொண்டுவருவதில் அரசு கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோவில் மூவரே பயணிக்கலாம் என்ற சட்டமே நடைமுறையில் இருந்து வருகிறது.

ஓட்டோ உரிமையாளர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**ஓட்டோவில் மூவரே பயணிக்கலாம் என்ற சட்டமே நடைமுறையில் இருந்து வருகிறது.**

ஓட்டோவில் மூவருக்கு மேல் பயணம் செய்யக் கூடாது என்ற சட்டம் கடந்த மே 8ஆம் திகதி பொலிஸாரினால் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஓட்டோக்கள் அதிகளவில் விபத்திற்குள்ளாவதாகவும், இதனால் அதிகமானோர் பாதிக்கப்படுவதாகவும் கூறியே இந்தச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது.

இலங்கையில் சுமார் 07 லட்சத்துக்கும் அதிகமான ஓட்டோக்கள், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

### ஐக்கிய அரபு இராச்சியம் இலங்கைக்கு பேரீச்சம்பழம் அன்பளிப்பு

புனித ரமழானை முன்னிட்டு ஐக்கிய அரபு இராச்சியம் 20 மெற்றிக்தொன் பேரீச்சம் பழங்களை இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.


பேரீச்சம் பழங்கள் கையளிக்கும் நிகழ்வு கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதுவராலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் மஹ்மூத் முஹம்மத் அல் மஹ்மூத், ஹஜ் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்நிகழ்வில் கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதுவராலயத்தில் கவுன்சிலர் ஜூமாஹ் அல் டமாணியும் கலந்துகொண்டார்.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ள இந்த பேரீச்சம் பழங்கள் நாடளாவிய ரீதியிலுள்ள பள்ளிவாசல்கள் ஊடாக பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொன்மை வரலாறு கொண்

# கண்ணகி அம்மனி

# பொங்கல் விழா - 2012

**வன்னியெங்கும் வி**
**போல அவர்க**

### வாழ்த்துச் செய்தி

ஈழ நாட்டின் முல்லைத்தீவில் அமைந்துள்ள வற்றாப்பளை கிராமத்தின் அருள் பாலிக்கும் கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் விழாவை சிறப்பாக நடத்திமுடித்த ஆலய பரிபாலன சபையார்க்கும் மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்கள், வணிகர்களுக்கும் பொலிஸாருக்கும், விழாவுக்காக உழைத்த மற்றும் எல்லா மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

கண்ணகி அம்மன் அருள் எல்லோருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

எஸ்.உ_தா.ருமார், தலைவர், முல்லைத்தீவு வர்த்தக சங்கம்.

### வாழ்த்துச் செய்தி

ஈழவள நாட்டின் முல்லை மாவட்டத்தின் வற்றாப்பளை கிராமத்தில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் விழாவைச் சிறப்பாக நடத்தி முடித்த ஆலய பரிபாலன சபை ஏனைய தொண்டர் நிறுவனங்கள், பொலிஸார், விழாவுக்காக உழைத்த எல்லோருக்கும் முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். கண்ணகி அம்மன் அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்.

க.தேவராசா, தலைவர், முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கம்.

வேறெங்கும் இல்லாத
இந்த விழா ஆண்டு
கண்ணகி அம்மனின்
எங்குமில்லாத பல சிற
மிக்கதாக விளங்குகி
இலட்சக்கணக்கான ம
ஒலி இவைகளினூடே
பூரிப்படைந்ததைத் கா
சடங்கு ஆசாரங்களுட
களிக்க முந்தியடித்து
தங்கவைத்து தமிழ் நா


**வரதன் லேணர்ஸ்**
சிவசோதி அரங்கு,
பிரதான வீதி, முல்லைத்தீவு.
கிளைகள் :
மாங்குளம், மல்லாவி,
உடையார்கட்டு, வள்ளிபுனம்,
யாழ்ப்பாணம், கே.கே.எஸ்,
சாவகச்சேரி, கிளிநொச்சி.
T.P. 0779595153

**மின்னிசை இலத்திரனியல்**
சிறந்த தெரிவு,
அதிசிறந்த தெரிவு.
P.W.D.VV, முல்லைத்தீவு.
T.P. 0212290088

**மயில் புடைவையகம்**
பிரதான வீதி,
முல்லைத்தீவு.
T.P. 0776168782

**பூங்குன்றன் உணவகம்**
தண்ணீரூற்று,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.
T.P.-0770257054

**கஸ்தூரி ரெக்ஸ் ரைஸ்**
சந்தை அருகில்,
பிரதான வீதி,
முள்ளியவளை.
T.P. 077044348

**றெயின்போ காலணியகம்**
P.W.D றோட்,
பிரதான வீதி,
முல்லைத்தீவு.
T.P. 0776570397

**அபி மோட்டோஸ்**
304/5, பிரதான வீதி,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.
T.P. 0771519489

**ஜோதி ஹசன் பல்பொருள் வாணி**
சிலாவத்தை,
முல்லைத்தீவு.

(C471) (10)

**கோல்டன் ிறீம் ஹவுஸ்**
பிரதான வீதி, தண்
முள்ளியவளை.
T.P. 07785007

**காளியம்பாள் வெல்டிங் வேக்ஸ் சொப்**
தண்ணீரூற்று,
முள்ளியவளை.
T.P. 0772796935

**அம்பாள் சைவ உணவகம்**
கடற்கரை வீதி,
முல்லைத்தீவு.
T.P. 0778923338

**பிரனுஜா கூல் ஹொட்டல்**
முள்ளியவளை
முல்லைத்தீவு.
T.P. 0773330126

**பவிஸ் ஹொட்டெ**
தண்ணீரூற்று,
முள்ளியவளை.
T.P. 021791561


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ண்ட பத்தினித் தெய்வமாம்
# னின் நந்தன வருட



## ம் விழாக் கோலம் மக்கள் மனதில் குதூகலம் பொங்கியது
## வர்கள் வாழ்வும் வன்னியெங்கும் நிலைகொள்ளட்டும்

### வன்னியெங்கும் விழாக்கோலம்

இல்லாத தனிச் சிறப்பு வன்னிக்கு உண்டென் றால் அது பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மனுக்கு விழா எடுத்தல். வன்னிப் பிரதேசங்களில் ஆண்டு தோறும் வைகாசித் திங்களிலே கண்ணகி அம்மன் ஆலயங்களில் பொங்கல் விழாவாகக் கொண்டாடப்பட்டாலும் வற்றாப்பளை ம்மனின் பொங்கல் விழா என்றதும் வன்னி மட்டுமல்ல வட மாகாணம் மட்டுமல்ல நாடே விழாக் கோலமாக மாறிவிடுகின்றது. இங்கு வேறு த பல சிறப்புக்களைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக "உப்பு நீரில்" நந்திக்கடல் நீரில் விளக்கேற்றும் அதிசயத்துடன் கூடிய சிறப்பு ிளங்குகின்றது. இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் இப் பெருவிழாவிற்கு வருகை தருவார்கள். இம்முறையும் பல க்கான மக்கள் ஒன்று கூடிய ஜன சமுத்திரமாக வற்றாப்பளை காணப்பட்டது. மக்களின் கரகோஷம், பஜனை ஒலி, அரோஹரா எனும் பக்தி ளினூடே மக்கள் பொங்கலோ பொங்கல் என பொங்கலிட்டு பழவகையுடன் படையிலிட்டு தங்கள் நேர்த்திக்கடன்களையும் பூர்த்தி செய்து தைத் காணக்கூடியதாக இருந்தது. வைகாசித்திங்கள் விசாக நட்சத்திரம் கூடிய பூரணையில் இப்பெரு விழா நடைபெற்றது.
ரங்களுடன் நடைபெறும் தூவி பிடித்தல், கச்சு நேர்தல், வளந்து நேர்தல் போன்ற வழிபாட்டு முறைகளை மக்கள் பக்தி பூர்வமாக கண்டு தியடித்துச் சென்றார்கள். நந்தன வருடபொங்கல் படையலில் பூரிப்படைந்த அம்பாள் தன்னடியார்களை அரவணைத்து தன் பக்கலில் தமிழ் நாதம் ஒலிக்க வைக்கட்டும்

"பக்தர் குழாம்"

**குமரன் ஹொட்டல் அன் கூல்**
உங்களுக்கு தேவையான உணவு வகைகளான, புரியாணி, சிற்றுண்டி மற்றும் விசேட தேவைகளுக்கு குறைந்த விலையில் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளநாடவேண்டிய ஒரே இடம்.
P.W.D. வீதி, முல்லைத்தீவு.
T.P: 0775360958

**தூரி ...ரைஸ்**
...ுருகில்,
... வீதி,
...வளை.
...443480

**விண்ணொளி மெடிக்கல்**
சந்தையடி,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.
T.P. 0772818836

**சஞ்சு ஹாட் வெயார்**
முல்லைத்தீவு நகரம்,
முல்லைத்தீவு,
T.P: 0770426421

*தாமரைச் செல்வன் பல்பொருள் வாணிபம்*
சிலாவத்தை,
முல்லைத்தீவு.
T.P: 0776391892

**கோசலா புடைவை மாளிகை**
நவநாகரிக புடைவை உலகின் முன்னோடிகள்.
தண்ணீரூற்று,
முள்ளியவளை.
T.P: 0778371266

**S.K. மோட்டோர்ஸ்**
இல. 304/1, பிரதான வீதி,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.
T.P: 0243248717

**...றசன் ... வாணிபம்**
...த்தை,
...த்தீவு.

**ஆ.ஜி. பழக்கடை**
பிரதான வீதி,
முல்லைத்தீவு.

**நெல்சன் லேணர்ஸ்**
T.P: 021 3200240.

**ராதிகாஸ்**
பிரதான வீதி,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
(தண்ணீர் ஊற்று)
T.P: 0776421350

**லிது மல்ரி சொப்**
அனைத்து வகையான இலத்திரனியல் பொருள்கள் விற்பனை, சேவிஸ் செய்யும் இடம்
முள்ளியவளை,
முல்லைத்தீவு.
T.P: 0776031544

**கஜாலினி தளபாட விற்பனை நிலையம்**
வீட்டுத் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
முல்லை வீதி, தண்ணீர் ஊற்று,
முள்ளியவளை. T.P: 0779174358

**...ட்வெயர்**
...ரூற்று,
...வளை.
...915612

**அபி புத்தகசாலை**
பிரதான வீதி,
முல்லைத்தீவு.

**குவின் மல்ரி சொப்**
இலத்திரனியல் பொருள்கள் மற்றும் பல
பிரதான வீதி,
முல்லைத்தீவு.
T.P: 0773563596

**ஆனந்தன் புத்தகசாலை**
அனைத்து வகையான பாட சாலைப் பொருள்களை, அழகு சாதனப் பொருள்களை பெற்றுக் கொள்ள முடியும்.
தண்ணீரூற்று சந்தி.
தண்ணீரூற்று, முள்ளியவளை.
T.P: 0772873429

**லிது மெடிக்கல் சென்ரர்**
தண்ணீரூற்று,
முள்ளியவளை.
முல்லைத்தீவு

**றொயல் நெட் கபே**
அனைத்து வகையான போன் வகைகளை
CD, Photo கொப்பிகளை பெற்றுக்கொள்ளலாம்.
முல்லைத்தீவு நகரம்,
முல்லைத்தீவு.
T.P: 077 5068824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணிநேர தொடர் மின்சாரம் நயினைக்கு சில தினங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நயினாதீவுக்கு இன்னும் சில தினங்களில் 24 மணி நேர மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளது. இதற்கென 500 கிலோ வாற் மின் பிறப்பாக்கி ஒன்று கடல் மார்க்கமாக இன்று எடுத்துவரப்பட உள்ளது.

இந்த மின்பிறப்பாக்கி இயங்கத் தொடங்கினால் தமது நீண்ட நாள் கனவு நனவாகும் என்று நயினாதீவு மக்கள் தெரிவித்தனர்.

சுன்னாகத்தில் இருந்து மின்பிறப்பாக்கியை நயினாதீவுக்கு கொண்டுவருவதற்கு இலங்கை மின்சார சபையின் வடக்கு பிரதி பொது முகாமையாளர் துரித நடவடிக்கையை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மின்பிறப்பாக்கியைப் பொருத்துவதற்கு முதற்கட்டமாக மின்சார சபையின் தொழில் நுட்பக் குழு நேற்று நயினாதீவுக்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டது. மின்பிறப்பாக்கியை குறிகாட்டுவான் துறை வழியாக இறக்க முடியாது என்பதால் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்பாக இந்த மின் பிறப்பாக்கியிலிருந்து 24 மணி நேர மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று செயலகத்தில் நடந்த கூட்டத்தில் மின்சார சபையின் அதிகாரி உறுதியளித்திருந்தார். இதனையடுத்தே இந்த மின் பிறப்பாக்கி இன்று சுன்னாகத்தில் இருந்து கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எடுத்துவரப்படும் மின்பிறப்பாக்கியை வைத்துப் பராமரிப்பதற்கான இடத்தை நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் இலங்கை மின்சார சபைக்கு வேலணைப் பிரதேச சபைத் தலைவர் வழங்கியுள்ளார்.

இந்த மின்பிறப்பாக்கி பல மாதங்களுக்கு முன்பே கொழும்பிலிருந்து சுன்னாகத்துக்கு எடுத்துவரப்பட்டிருந்தது. எனினும் கடல் வழியாக அதனை நயினாதீவுக்கு எடுத்துச் செல்வதில் இருந்த சிக்கல்கள் காரணமாக அது அப்படியே கிடந்தது.

தற்போது காற்று பலமாக இருப்பதால் கடலால் மின்பிறப்பாக்கியை எடுத்துச் செல்வதில் சிரமம் இருக்கும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். எனினும் உரிய உபகரணங்கள் வரவழைக்கப்பட்டு மின்பிறப்பாக்கி கடல் வழியே நகர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-50)


## மாதம் 50,000 ரூபா வருமானத்துடன்...



## ஹோட்டல் பயிற்சிநெறி & தொழில்வாய்ப்பு

உணவு, தங்குமிட வசதி இலவசம்!

SkillsMalaysia City & Guilds UEL University of East London aets

பயிற்சிநெறி முடிவில்
மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்ரேலியா, சீனாவில்
**வேலைவாய்ப்பு!**

- 9ம் வகுப்பு வரையில் படித்த, 18-45 வயதுக்கு இடைப்பட்ட எவரும் இணைந்துகொள்ளலாம்.
- விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஒரு மாதத்தில் பயண உத்தரவாதம்!
- நேரடியாக மலேசியாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு, பயிற்சிநெறி முடியும் வரையில் கண்காணிப்பு.
- கணவன், மனைவி ஒன்றாகச் செல்ல முடியும்.

**இன்னும் சொற்ப வெற்றிடங்களே உள்ளன**
ஏமாற்றத்தைத் தவிர்க்க
உடனே சான்றிதழ்கள், கடவுச்சீட்டுடன் விரையுங்கள்
(பெற்றோர் / பாதுகாவலருடன் வரவும்)

ஜூன் 2, 3ம் திகதிகளில் மட்டக்களப்பு, திருகோணமலையில் நடாத்தப்படவிருந்த கருத்தரங்கு, 17ம், 18ம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறும்.

MEDIA
**சிகரம்** கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798


## விற்பனைக்கு

நாகர் கோயில் மண், பூநகரி மண், கண்டாவளை மண் உடன் விநியோகிக்கப்படும்.
(நம்பிக்கைக்குரியது)
தொடர்பு:- 0771988980 0774735228

## தேவை

மாணவன் ஒருவர் தங்குவதற்கு அறை ஒன்று வாடகைக்குத் தேவை.
தொடர்பு:-0772367508

## தவறிவிட்டது

தெல்லிப்பழை செல்வராசா சிவகுமார் என்னும் பெயர் முகவரியுடைய தே.அ.அட்டை இல (741992612v) மற்றும் இராணுவ அடையாள அட்டை, டோகா நாட்டில் தொழில் புரிந்தமைக்கான அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய BROWN COLOUR பேர்ஸ் யாழ். பஸ் நிலையத்தில் கடந்த (01.06.2012) அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்து உதவவும்.
தொடர்புகளுக்கு:- 0778915443

## ஸ்கந்தாவின் இதய அஞ்சலி



எங்கள் கல்லூரியின் புகழ்பூத்த
பழைய மாணவரும் ஆசிரியராக,
பிரதி அதிபராக அரும்பணியாற்றிய
பெருந்தகை உயர்திரு
**அ.தற்பரானந்தன் (J.P.)**
அவர்களின் பிரிவு குறித்து
கல்லூரிச் சமூகம் மிகுந்த வேதனை
அடைகின்றது. அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்கந்தவரோதய கல்லூரி, சுன்னாகம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## இதய அஞ்சலி

எமது உறவினரான
திருமதி **ராஜேஸ்வரி சோமசுந்தரம்**
(தாத்தோ)
அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கனடா, லண்டன், கொழும்பில் வசிக்கும்
பொன்னம்பலம் குடும்பத்தினர்.

ஸ்ரீ ராம ஜெயம்

## சௌள வேதோக்தம யக்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேச ஸம்ஸ்கார சுபமுகூர்த்தப் பத்திரிகை



அநேக நமஸ்காரங்களோடும் உங்கள் ஆசீர்வாதங்கள் வேண்டியும் உபய குசலங்களைக் கேட்டுக் கொண்டும், ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான நந்தன வருடம் வைகாசித் திங்கள் 25 ஆம் நாள் நாளை [07.06.2012] வியாழக்கிழமை திருதியை திதியும் உத்தராட நஷ்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 8 மணி 42 நிமிடம் முதல் 10 மணி 29 நிமிடம் வரையுள்ள கடகலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | | |
|---|---|---|
| சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய பிரதம குரு பாரத்வாஜ கோத்ரம் **யோகீஸ்வரக்குருக்கள் சுபதாம்பிகை அம்மா** தம்பதிகளின் பௌத்திரனும் | கொழும்பு கப்பித்தாவத்தை கைலாசநாதர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் **சிவஸ்ரீ யோக ரஞ்சித்க் குருக்கள் ரமாராணி** தம்பதிகளின் ஏக புத்திரனுமாகிய **சிரஞ்சீவி ரமாஜித்சர்மா** [கண்ணா] விற்கு (பாரத்வாஜ ஆபஸ்தம்ப யஜுர் சாகை) | அரியாலை மகாமாரி அம்மன் ஆலய முன்னாள் பிரதமகுரு கௌசிக கோத்ரம் **அமரர் கணேசசர்மா ராஜலஷ்மி அம்மா** தம்பதிகளின் தௌகித்திரனும் |

அத்தியடி விநாயகரினதும், பள்ளம்புலம் முருகனதும், அரியாலை அம்மனதும் கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை கருணாகடாட்ஷி சமேத கைலாசநாதப் பெருமானின் திருவருட் கடாட்சத்தாலும் குருவருளாலும் அந்தணகுல சிரேஷ்டர்கள் சிவாச்சாரியப் பெருந்தகைகளின் ஆசீர்வாதங்களாலும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் முன்னதாகவே வருகைதந்து சுபமுகூர்த்தத்தை நடத்திக் கொடுத்து வடுவை ஆசீர்வதித்து வாழ்த்தி எங்களையும் கௌரவிக்க வேணுமாய் அன்புடன் அழைக்கின்றோம்.

**உபநயன பிரம்மோபதேச குரு: -**
முத்தமிழ் குருமணி வேதாகம திலகம்
**சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்**
சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில்.



**தங்கள் நல்வரவை இனிதே நாடும்**



சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் குருக்கள் (தாத்தா)
ஸ்ரீமதி யோ.சுபதாம்பிகை அம்மா (பாட்டி)
திருமதி க.ராஜலஷ்மி அம்மா (அம்மம்மா)

சிவஸ்ரீ யோக ரஞ்சிதக்குருக்கள்
ஸ்ரீமதி ரமாராணி தம்பதிகள்
இல. ... கப்பித்தாவத்தை, மருதானை, கொழும்பு -10
தொ.பே. 07765...05, 077 6953208

(1901D)(2-6-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

NP. WE. 5970 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் நம்பர் தகடு திருநெல்வேலிக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0779866616 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

## வீடு வாடகைக்கு

நெல்லியடி பஸ் நிலையம் முன்பாக சகல வசதிகளும் பொருந்திய வீடு வாடகைக்கு உண்டு.
★ வர்த்தகர் விரும்பத்தக்கது

தொடர்பு:- சிவசக்தி இரும்பகம்
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே:- 021 226 3656

## வீடு வாடகைக்கு

இருபாலை சந்திக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.
சகல வசதிகளுடன்

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்
0770458516

## தவறிவிட்டது

அரசடி லேன், சுதுமலை கிழக்கு சிவலிங்கம் துஜந்தன் என்னும் பெயர் முகவரியுடைய தே.அ.அட்டை (912412806 V) தாவடி மானிப்பாயில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்து உதவவும். 0775188476

## வேலையாள் தேவை

முன் அனுபவமுள்ள A/L படித்த பில் கிளாக், காசாளர், விற்பனையாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

**நியூ ரோன் எலக்ரிக்கல்**
442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## மாணவர்களுக்கு சித்திரப்போட்டி

கல்வியமைச்சின் அழகியற்பிரிவு, மாணவருக்கான சித்திரப் போட்டியொன்றை நடத்தவுள்ளது. ஆரம்பப் பிரிவு(தரம் 1-2),ஆரம்ப இடைநிலைப் பிரிவு(3-5), கனிஷ்ட இடைநிலைப்பிரிவு (6-8), சிரேஷ்ட பிரிவு(9-11), சிரேஷ்ட மேற்பிரிவு(12-13) என ஐந்து பிரிவுகளில் இந்தப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம்,கொலாஜ் சித்திரம், அலங்காரச் சித்திரம்,பொருள் பார்த்து வரைதல்,சம்பிரதாயச் சித்திரம் ஆகிய சித்திரங்கள் அமையலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மட்டத்தில் இந்தப் போட்டிகளை நடத்தி முதலிடம் பெற்றவைகளை வலயக் கல்வி அலுவலகங்களில் கையளிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-38)

# தமது புகலிடக் கோரிக்கையை ஏற்குமாறு ஆஸி. அரசிடம் தமிழ் அகதிகள் மன்றாட்டு

**யு.என்.எச்.சி.ஆரால் பரிந்துரைக்கப்பட்ட தமிழ் அகதிகள் 38 பேரை மீள்குடியேற்றுவதாக ஆஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமை திணைக்களம் இந்த வருட ஆரம்பத்தில் தெரிவித்தது.**

இந்தோனேசிய மேராக் துறைமுகத்தில் 2009ஆம் ஆண்டு ஆறு மாத காலமாக கப்பலை விட்டு இறங்காது, தரித்து நின்ற தமிழ் அகதிகள் தற்போது தமக்கு கடப்பிதழ்களை வழங்கி தமது நீண்டகால புகலிடக் கோரிக்கையை நிறைவு செய்யுமாறு ஆஸ்திரேலிய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து 'த ஆஸ்திரேலியன்' ஊடகத்தில் மேலும் வெளியிடப்பட்டுள்ளதாவது:-

90 பேர் வரையான அகதிகள் மூன்றாம் தரப்பு நாடொன்றில் தஞ்சம் கோரி இந்தோனேசியாவில் தடுப்பில் காத்திருக்கிறார்கள். இவர்கள் 2009ஆம் ஆண்டு, ஆஸ்திரேலியாவின் அப்போதைய பிரதமர் கெவின் ரூட்டின் உத்தரவின் பேரில் இந்தோனேசிய கடற்படையால் கைது செய்யப்பட்ட ஜெயலஸ்ரரி என்ற சரக்குக் கப்பலில் வந்த 254 பேரில் ஒரு பகுதியினராவர்.

சிலர் படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவை அடைந்தனர். ஆனால் இந்தோனேசியாவில் இருப்போர் தாங்கள், யு.என்.எச்.சி.ஆர் செயற்பாடு களுக்காக பொறுமையாகக் காத்திருந்ததாகவும், தமக்கு முன்னுரிமை வழங்கப்படுமென உறுதி வழங்கப்பட்டதாகவும் வாதிடுகின்றனர்.

யு.என்.எச்.சி.ஆரால் பரிந்துரைக்கப்பட்ட மெராக் அகதிகள் 38 பேரை மீள்குடியேற்றுவதாக ஆஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியுரிமை திணைக்களம் இந்த வருட ஆரம்பத்தில் தெரிவித்தது.

ஆனால் ஒரே ஒரு குடும்பம் மற்றும் ஒரு வயதுவந்த ஆண் மட்டுமே ஆஸ்திரேலியாவை அடைந்ததாக தமிழ் அகதிகளில் ஒருவரான நிமல் கூறினார்.

38 பேரில் அதிகமானோர் இன்னும் இந்தோனேசியாவில் தடுப்பில் இருக்கின்றனர் என்றும் எப்போது ஆஸ்திரேலியாவுக்கு வரமுடியுமென்று தெரியாது என்றும் குறிப்பிட்டார்.

இது சிறந்த விடயமல்ல. எம்மை அதிக காலம் காக்க வைத்து எதனை சாதிக்க போகிறார்கள்? அனைவரும் அவர்களது நிலைகள் பற்றி மன அழுத்தம் அடைந்துள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்படுவதாக அறிவித்தோரில் தானும் அடங்குவதால் நன்றியுடையவனாக இருந்தாலும் எதுவித தகவல்களுமில்லாமல் இருக்கும் 50 இற்கும் மேற்பட்ட அகதிகள் பற்றி கவலை அடைகின்றனர்.

இருவாரங்களுக்கு முன்னர் யு.என்.எச்.சி.ஆர் அலுவலகம் முன்னிலையில் நடத்திய போராட்டமொன்றில் தாம் பாரபட்சமாக நடத்தப்படுவதாக அந்த குழுவினர் அறிக்கை ஒன்றில் தெரிவித்தனர். ''எமக்கு இப்போது உடனடியாக மீள் குடியேற்றம் தொடர்பில் உதவி தேவை. அதனால் நாம் பாதுகாப்பைத் தேடி தமது வாழ்க்கையை மீள ஆரம்பிக்க முடியும்''. எமது தற்காலிக வாழ்க்கையை பலகாலம் தொடர முடியாது என்று அவர்கள் தெரிவித்தனர். (வ)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூன் 6

மணல்காடு தூய அந்தோனியார் தேவலாய வருடாந்த உற்சவம் கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி செப மாலையும் திருப்பலியும் நடைபெற்றன.

தொடர்ந்து நவநாள் ஆராதனை நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறுவர்களுக்கான முதல் நன்மை நிகழ்வு இடம்பெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நற்கருணை வழிபாடும் மறுநாள் 13 ஆம் திகதி புதன்கிழமை கூட்டுத் திருப்பலியும் திருச் சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் உற்சவம் நிறைவுறும். (வ-8)

* * *

தென்மராட்சி, ஜூன்6

நாவற்குழி புனித அந்தோனியார் தேவாலய நவநாள் உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி பி.ப 5 மணிக்கு திருநற்கருணை ஆராதனையும் திருப்பலியும் இடம்பெற்று மறுநாள் புதன்கிழமை பி.ப 7 மணிக்கு திருநாட் பாடற் பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (வ-9)

# 105 வருடங்களுக்குப் பின் வானில் இன்று அற்புதமான காட்சி

சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் இன்று வெள்ளிக்கிரகம் நகருகிறது. இதனால் சூரியனின்மேல் வெள்ளிக்கிரகம் ஒரு புள்ளிபோல் நகர்ந்து செல்வது தெரியும். 105 வருடங்களுக்குப்பின் இந்த அபூர்வமான காட்சி வானில் தோன்றுகிறது.

105 ஆண்டுகளுக்கு பின் நடக்கும் இந்த காட்சியை சூரிய உதயம் முதல் முற்பகல் 10 மணி வரை காணலாம். இந்தநிகழ்வை வெறும் கண்ணால் பார்க்கக் கூடாது. பார்த்தால் சூரிய ஒளியால் கண்ணில் பாதிப்பு ஏற்படும். பார்த்தாலும் தெரியாது.

சூரிய ஒளியை சிறு கண்ணாடி மூலம் பிரதிபலித்து வெள்ளைச் சுவரில் பிடித்தால், சூரியன் சுவரில் பளிச் சென்று விழும். அதில் கரும் புள்ளியாய் வெள்ளி நகருவது தெரியும். எனவே இந்த முறையின்படி பார்க்கலாம்.

டெலெஸ்கோப் இருந்தால் அதன் மூலம் ஒளியை வெண் திரையில் பிடித்து பார்த்தால் தெளிவாக பார்க்கலாம். தொலைநோக்கி, பைனாகுலர் மூலம் சூரியனை பார்க்க கூடாது. பார்த்தால் அந்நேரமே கண் கள் பாதிக்க வாய்ப்புள்ளன.

இது குறித்து இந்திய பேராசிரியர் குமாரசாமி தெரிவித்ததாவது:-

இந்நிகழ்வால் பூமியில் பாதிப்பு ஏற்படாது. உரியி னங்களுக்கும் பாதிப்பில்லை. ஜோதிடர்கள் இதுகுறித்து கூறும் கருத்துக்கள், செய்முறைகளை நம்ப வேண்டாம். இந்தநிகழ்வை பாதுகாப்பான முறையில் பார்க்கலாம் - என்றார். (வ)

**சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்**
**வேலையாள்கள் தேவை**

எமது கல்லூரிக்கு சமையல் வேலை, விவசாயப்பண்ணை வேலை ஆகியவற்றில் அனுபவமுடைய வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.
ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் 10.06.2012 சனிக்கிழமைக்கு முன்னர் அதிபரின் காரியாலயத்தில் சந்திக்கவும்.
அதிபர்
சென்.ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்
(சி/466)(6-7-8)

நீங்கள்
**நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா**
**இதோ உடன் நிவாரணி**
"கொத்தல கிம்பட்டுவ"
KOTHALA HIMBATU PANAYA
இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில் அறிந்து கொள்ளலாம்.உங்கள் அருகில் உள்ள சித்த ஆயுர்வேத டாக்டரின் ஆலோசித்துப் பாவியுங்கள்
சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி. 021 2222 567
(இ/296) (45.6.7)

**பணி நிலை வெற்றிடம்**
எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. கணக்கு பதிவாளர் - (கணினி அறிவு) க.பொ.த. உயர்தரத்தில் கணக்கியல் கற்றவர் விரும்பத்தக்கது.
2. அலுவலக உதவியாளர்-
★ தங்கள் சுயவிவர கோவையுடன் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடவும்.
விண்ணப்ப முடிவு திகதி: 15.06.2012
விளம்பர இலக்கம் - 4363, மே/ பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**
உள்ளூரில் உற்பததி செய்யப்பட்ட புறொயிலர்,கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையா கிறது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூபா 450 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்.
நல்லூர் பாம் சென்ரர்
# 19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
(18964)(6-7-8)

**மணமகள் தேவை**
யாழ். கிறிஸ்தவ (R.C)கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு பிறந்த அரச திணைக்களத்தில் உத்தியோகத்தராக பணியாற்றும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு. 077 778 9815, 077 707 5521

**வேலைக்கு ஆள்கள் தேவை**
லைடன் புடைவை நிலையம் 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள புடைவைக்கடைக்கு இரு பெண்பிள்ளைகளும் (பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது) மற்றும் 20 - 40 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும் தேவை. தொடர்பு: நேரில் சமுகமளிக்கவும்
(சி/460)(6-7-8)

**தேவை**
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள சிற்றுண்டிச் சாலைக்கு அனுபவம் உள்ள சப்ளையர்கள் தேவை.
நேரில் வரவும்.
தொடர்பு. 077 367 4941

**ஈராண்டில் ஈரவிழிகள்**

முருகேசு விஜயகுமார்



" கண்களிலே
கண்ணீர் இன்னும்
காயவில்லை
ஆண்டு கடந்தாலும்
உன் முகத்தைக்காண
துடிக்கின்றதே - எம்
இதயம்"
(அன்னாரின்
நினைவுநாள் நேற்று (05.06.2012)
நடைபெற்றது.
- குடும்பத்தினர்.
(19257) (2-6-7)

**தவறிவிட்டது**
27.05.2012 அன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் பஸ்ஸில் பொன்னுச்சாமி நல்லமுத்து என்பவருடைய காணி பதிவுப்பத்திரம் (உறுதி) மற்றும் பல பொருள்களுடன் நீல நிறபை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 021 300 6239,
077 610 3584

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
16.07.1948

உதிர்வு
21.04.2012

அமரர் **கந்தையா தவராசா**

(உரிமையாளர், ஸ்ரீ சாயி பிறிண்டேஸ்)

கடந்த (21.04.2012) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரரின் வீட்டுக்கிருத்தியமும், மதிய போசனமும் இன்று (06.06.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகபிரார்த்திக்குமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

[illegible]வத்தை ஒழுங்கை,
மானிப்பாய்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

NP PP- xxxx தொடரிலக்க முடைய **Butter Colour** **டிமோ பட்டா** விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு- 0770526747



உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com

0215671111


# ஏழாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **முத்து கதிரமலை** (செல்லக்கிளி)

[உரிமையாளர், கிருபா கிறேசர், வல்லைச்சந்தி, அச்சுவேலி].

**மலர்வு 19.07.1952**

**உதிர்வு 06.06.2005**

குடும்பத்தின் ஒளி விளக்காய்
திகழ்ந்து அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் எம்மை யெல்லாம்
வழி நடத்தி இந்த வையகத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட எங்கள்
குடும்பத் தலைவனின் பாதக்கமலங்களில்
இந்த மலரினை ஏழாண்டு நினைவாக

ஆண்டு ஏழு போனாலும்
அழியவில்லை உங்கள் நினைவு
அன்பையும் அரவணைப்பையும்
எம் மீது கொட்டி
எமக்கெல்லாம் வழி காட்டியாக இருந்த
எனது அன்புத் தெய்வமே! அப்பா!
இன்பமாக வாழ்ந்த குடும்பம் எல்லாம்
துன்பமாக மாறி விட்டதே அப்பா!
ஆறுமோ தீருமோ எம் கவலை
எம் உயிர் உள்ளவரையும்
உம்மை மறவோம் அப்பா அப்பா அப்பா....
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**மனைவி, பிள்ளைகள்.**

(19004) (45.6.7)

## உபநிடதம், சமஸ்கிருதம் தொடர்பான வகுப்புகள் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் உபநிடதம், சமஸ்கிருதம் தொடர்பான கருத்துரை வகுப்புகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆன்மீக சிந்தனையின் மூலம் சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் நோக்குடன் இந்து சமயம் கூறும் தத்துவங்களை விளக்கும் நூல்கள் தொடர்பாக அவற்றில் உள்ள கருத்துக்களை விளக்கங்களுடன் எடுத்துக்கூறும் இந்தக் கருத்துரை வகுப்புகளில் ஆர்வலர்கள் கலந்து பயன்பெறலாம்.

செட்டித்தெரு ஒழுங்கை, யாழ். சின்மயா மிஷன் நிலையத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(வ-14)


## வேலை வாய்ப்பு

உடுவில், புன்னாலைக்கட்டுவன் மற்றும் ஏழாலை பகுதிகளில் நடைபெறும் வீதி நிர்மாண வேலைத்திட்டத்திற்கு வீதித்தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். விருப்பமுள்ளவர்கள் கீழ்வரும் முகவரியில் அமைந்திருக்கும் எமது திட்ட அலுவலகத்துடன் உடனடியாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வதன மகால்
உப தபால் அலுவலக வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை
தொ.பே: 077 7110287

(சி/473)(6-8-14)



## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 222 8093
E-mail: alliance jaffna@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

(18996) (45-6-7)


## கண்ணீர் அஞ்சலி

எமது கூட்டுறவுச்சங்கத்தில் பணிபுரியும்
திருமதி சௌ. குணச்சித்திராவின் தந்தை

### கந்தன் வீரசிங்கம்

(தொல்புரம் மேற்கு, தொல்புரம்)

அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் பங்குகொண்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

காங்கேசன்துறை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி, விற்பனை வைத்தியசேவைக் கூட்டுறவுச்சங்கம்

(19005)(6-7-8)


## இந்திய சாஸ்திரியார் வருகை

*யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்*

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா நேரில் சந்திக்கவும்.

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை) செவ்வாய் விடுமுறை

பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.


(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691

(19002) (6,7,45)


## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா கந்தையா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா கந்தையா (03.06.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாபதி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிர வேலு - தங்கமுத்து தம்பதியரின் அன்புமருமகளும், காலஞ் சென்றவர்களான கந்தசாமி, சிவபாக்கியம், சீவரத்தினம் மற்றும் பராசத்தி, தங்கப்பொன் (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளசிங்கம் (பிரான்ஸ்), நல்லலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற தேவராணி, தேவ குலசிங்கம் (C.T.B - திருமலை), வசந்தகுமார் (லண்டன்), சோதிலிங்கம் (திருமலை), சற்குணதேவி (N.H.D.A - Trinco) ஆகியோரின் அன்புத்தாயும், மகேஸ்வரி, பத்மநிதி, நாகரஞ்சினி, குணவதி, ரவிந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், மிதிலன், மைதிலி, லீ, சோபிகா, துவாரகன், விவேதரன், ஹரிகரன், மதிவதனன், புகழேந்தி, ஹரினி, கவிதாஞ்சலி, கவிஷ்ணவி, மதுஹர்சன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2012) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28, வெலிங்டன் அடை
வீதி, திருகோணமலை

தகவல்:
சபாபதிதங்கப்பொன் (சகோதரி)

(19013)(6-7-8)

## தவறிவிட்டது

காணி இல. 1024, உடைய காணிப்பத்திரங்கள் (உறுதி) மற்றும் கடிதங்கள் உட்பட கோவையுடன் 02.06.2012 அன்று பருத்தித்துறை வீதியில் இரவு 7 மணியளவில் தவறவிடப்பட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு : 077 7969109, 077 1278105
சி.கணபதிப்பிள்ளை (C.T.B)
நீர்வேலி

(18991)(6-7-8)


## சேவிஸ் ஸ்டேசன்

பைக்லிப்ட், ஓட்டோலிப்ட் CAR/VAN/ LORRY 4,8,16 Tons Lifts
கொம்பிரஷர் (Air Compressor)
(200L, 270L, 500 L, Italy
கிரீஸ் பம்ப் (Turkey, Japan Yamada)
Vaccum Cleaners (China,Italy)
நீர் உயர் அழுத்திப்பம்புகள்
High Pressor Pumps (Italy)
Engine Oil Filling Pumps (Digital)
ஒரு வருட உத்தரவாதம்
விற்பனைக்கு பிந்திய சேவை (24X7)

CARTEC TRADING (P) LTD
தொடர்பு : 077 6872656, 072 1260760


## மரண அறிவித்தல்கள்

### அப்பையா வீரசிங்கம்

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா வீரசிங்கம் நேற்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பத்மாவதியின் (பவளம்) அன்புக் கணவரும், பாலசிங்கம், தனபாலசிங்கம் (ரவி), தயாநிதி, தயாநந்தி, தேவராணி, சிவநந்தினி, சசிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மவதி, செல்வநிதி, கஜேந்திரன், பிறேமச்சந்திரன், அருட்குமார், வசீதரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2012) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கைதடி, நுணாவில், சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(சி/9314) (45.6.7)

### திருமதி மனோன்மணி பொன்னம்பலம் (குஞ்சு)



காங்கேசன்துறை, ஊறிக்காட்டைப் பிறப்பிடமாகவும், ஆளவெட்டி வடக்கு அம்பாள் கோயிலடியைப் புகுந்த இடமாகவும், தாவடி வடக்கு வன்னியசிங்கம் வீதியை தற்போதைய இருப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி பொன்னம்பலம் (குஞ்சு) நேற்று (05.06.2012) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் (இளைப்பாறிய ஊழியர், அ.ம.ப.நோக்கு கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், ஜெயபாலன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், இலங்கை வங்கி, சுன்னாகம்), ஜெயமலர், ஜெயந்தி (மேற்பார்வை குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் - சங்கானை), ஜெயரூபன் (அபிவிருத்தி உதவியாளர் - பிரதேச செயலகம் - நல்லூர்) ஆகியோரின் அன்புத்தாயும், லலிதாம்பிகை, காலஞ்சென்ற சுதர்சன் (லங்கா சிமெந்து லிமிட்டெட்) மற்றும் தெய்வேந்திரம் (போதனாசிரியர் பிராந்திய பயிற்சி நிலையம், பண்ணை - சுகாதார சேவை), குமுதினி (உஷா)(நடன ஆசிரியர், உரும்பிராய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புமாமியும், ஆதவன், ஏரகன், திவ்வியன், கிந்துயன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.06.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது தாவடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(19003)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுகளாக மாறிக் காணப்படும் கூழாமுறிப்பு பரசங்குளம் கிராமம்

முல்லைத்தீவு,ஜூன் 6
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கூழா முறிப்பு பரசங்குளம் கிராமத் தின் குடியிருப்புப்பகுதி காடுகளாக மாறிவிட்டன என்று இங்கு வாழ்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

போருக்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்கள் இங்கு தமக் கான வீடுகளைஅமைத்து விவ சாயத்திலும் சிறந்து விளங் கினர். அத்துடன் ஏராளமான கால்நடைகளையும் வளர்த்து பெரும்பயன்பெற்று வந்தனர்.

இவர்களின் இந்த இடங் களைச் சுற்றி தென்னை, மா, பலா, வாழை ஆகிய பயன் தரு மரங்கள் நடப்பட்டுச் சோலையாகக் காட்சியளித் தன. ஆனால் இன்று எவை யுமே இல்லையென மீளக் குடியமர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

> ஒரு சிலர் தாம் வாழ்ந்த இடங்களில் பயிர்ச் செய்கையை ஆரம்பித்த போதி லும் காட்டு யானைகளாலும் ஏனைய காட்டு விலங்குகளாலும் பெரும் துன்பங்களை எதிர்கொண்டனர். இதனால் தாம் எதிர்பார்த்த வருமானத் தைப் பெற முடியாமல் மீண்டும் வறு மையில் வாழ்வதாக இந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு வாழ்ந்த மக்களில் ஒரு பகுதியினர் பண்டார வன்னியன் ஒட்டுத் தொழிற் சாலையில் வேலை செய்து வந்தனர். இதனால் இவர் களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான வருமானம் கிடைத்து வந்தது. இவர்கள் தமக்குத் தேவையான நீரை முத்துஜயன்கட்டுக் குளத் தின் வாய்க்காலில் இருந்து பெற்று வந்தனர்.

போர் காரணமாக இடம் பெயர்ந்து சென்றதனால் சகலதும் தமக்குப் பாதகமாக அமைந்துவிட்டதாக இங்கு வாழ்ந்த மக்கள் கூறுகின்றனர்.

மேலும் இங்கு வாழ்ந்து இடம்பெயர்ந்தமக்களில்பெரும் பகுதியினர் வேறு இடங் களை நாடிச் சென்றுள்ளனர்.

ஒரு சிலர் தாம் வாழ்ந்த இடங்களில் பயிர்ச் செய் கையை ஆரம்பித்த போதி லும் காட்டு யானைகளாலும் ஏனைய காட்டு விலங்குக ளாலும் பெரும் துன்பங் களை எதிர்கொண்டனர். இதனால் தாம் எதிர்பார்த்த வருமானத்தைப் பெற முடியாமல் மீண்டும் வறு மையில் வாழ்வதாக இந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பல சிற்றாறுகள் இந்தக் கிராமத்தினூடாக பாய்ந்து செல்கின்ற போதி லும் மக்களுக்குப் பயன்படாத வகையிலேயே உள்ளன.

அரசோ அல்லது தொண்டு நிறுவனங்களோ தமக்குரிய உதவிகளை வழங்கினால் மட்டுமேதாம் முன்னர் போன்று இந்தக் கிராமத்தில் வாழமுடி யுமென மக்கள் தெரிவிக் கின்றனர்.

(க-500)

## கிளிநொச்சிப் பண்ணையில் விதை நெல், சணல் உற்பத்தி

கிளிநொச்சி, ஜூன் 6
கிளிநொச்சி விதை உற் பத்திப் பண்ணையில் இவ் வாண்டு சிறுபோகத்தில் நாற்பது ஏக்கரில் விதை நெல் உற்பத்தியும், ஐந்து ஏக்கரில் சணல் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி அரச விதைப் பண்ணை நிர்வாகத் தினர் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் விதை நெல் காலபோகச் செய்கைக்குத் தேவைப்படும் விவசாயி களுக்கு வழங்கப்படவுள் ளது.

அத்துடன் அரச விதைப் பண்ணையில் தற்போது ஐந்து ஏக்கரில் சணல் உற் பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் இரண்டு ஏக்கரில் விதை உற்பத்திக்கும் ஏனைய மூன்று ஏக்கர் சணல் மண் வளமாக்கத்துக்கும் எனப் பயிரிடப்பட்டுள்ளதா கவும் விதைப்பண்ணை நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)

## தேசிய சிங்கள மொழித் தேர்வில் சம்மாந்துறை மாணவி முதலிடம்

சம்மாந்துறை,ஜூன்6
தேசிய மொழிகள் மற் றும் மானிடவியல் கல்விப் பிரிவினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இரண் டாம் மொழி சிங்களம் மதிப் பீட்டுத் தேர்வில் தரம் - 8 இல் சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலய மாணவி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு அல் இக்பால் முஸ்லிம் மகளிர் கல்லூரி யில் நடைபெற்ற இந்த நிகழ் வில் சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலய மாணவி செல்வி எம். என். பாத்திமா சுமையா தேசிய மொழிகள் திணைக்களத்தின் பணிப்பா ளர் ஆர். எம். எம். ரத்னாயக் கவினால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (ச)

## சிறந்த சேவையில் அமுதசுரபி



வேப்பங்குளம், ஜூன் 6
வவுனியாவில் அமைந் துள்ள அமுதசுரபி பால் சேகரிப்பு நிலையம் சிறந்த முறையில் இயங்கி வருவ தாக இங்குள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கோவிற்குளம் வீதியூடாகச் செல்லும் முரு கனூர்ப் பகுதியில் இந்த அமுதசுரபி பால் சேகரிப்பு நிலையம் அமைந்துள்ளது.

கால்நடை வளர்ப்போர் பசுக்களிலிருந்து கிடைக் கும் பாலைத் தினமும் இங்கு வழங்கி வருகின்றனர். இத னால் அவர்கள் நல்ல வரு மானத்தையும் ஈட்டி வருகின் றனர்.

அமுதசுரபி போன்று இன்னும் பல பால் சேகரிப்பு நிலையங்கள் இங்கு இயங்கி வருவதால் கால்நடை வளர்ப்போர் பயன்பெற்று வருகின்றனர். (க-421)

## விவசாய போதனாசிரியர்களுக்கு நியமனம்

அம்பாறை, ஜூன் 6
கிழக்கு மாகாணத்தில் விவசாயப் போதனாசிரியர்கள் ஒன்பது பேருக்கு நேற்றுமுன்தினம் புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. போட்டிப் பரீட்சை மற்றும் இன விகிதாசார அடிப்படையில் தெரிவுசெய்யப் பட்டு இந்த நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத் திற்கு 3 பேரும், அம்பாறை மாவட் டத்திற்கு 3 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 3 பேருமாக மொத் தம் 9 பேருக்கு இந்த நியமனம் வழங் கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நான்கு நாள் சேவைப் பயிற்சி திருகோணமலை மாவட்ட பயிற்சித் திணைக்களத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரை வழங்கப்பட்டு அதன் நியம னங்கள் வழங்கப்பட்டன.

இந்த நியமனம் வழங்கும் நிகழ் வில் மாகாண விவசாயப் பணிப்பா ளர் எஸ்.எம்.ஹுசைன், மாவட்ட விவ சாயப் பணிப்பாளர் தி.குகநாதன் உட் பட பலர் கலந்து கொண்டனர். (10)

## நீர்ப்பாசன அலுவலகம் மட்டு. நகரில்

திருகோணமலையில் இதுவரை காலமும் இயங்கிவந்த கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம் நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக் களப்பில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன், மாகாண அமைச்சர்களான எம்.எஸ்.உதுமாலெவ்வை, ரி.நவரெட்ணராஜா, எம்.சுபைர் உட்பட பலர் கலந்து கொண்டனர். கிழக்கு மாகாணத்தின் மத்தியில் மட்டக் களப்பு மாவட்டம் இருக்கிறது என்றவகையில் மாகாண சபை சார் அலு வலகங்களை மட்டக்களப்புக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-31)

## சான்றிதழ் வழங்கல் முதல் முறையாக மட்டக்களப்பில்

எருவில், ஜூன்6
திறந்த பல்கலைக்கழகத்தின் சான்றி தழ் வழங்கும்நிகழ்வு முதல் தடவையாக நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்க ளப்பு பல்கலைக்கழகத்தின் பிராந்திய கற்கை நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் கொழும்பில் இடம்பெற்று வந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு முதல் தடவையாக இந்த முறை மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது. மட் டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 350 பேர் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண் டனர்.

கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் கே.கோவிந்தராஜ், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் டபிள்யூ.ஏ. விமலவீர ஆகியோர் கலந்து கொண்டனர். முகாமைத்துவம், தொழில் நுட்பம், ஆரம்பக் கல்வி, தொழில்சார் ஆங்கிலம், சமூகவியல் ஆகிய துறை களின் சான்றிதழ்களே வழங்கப்பட்டன.

(ச)

## 3 இலட்சத்து 46 ஆயிரத்து 821 பேர் மட்டக்களப்பில் வாக்களிக்கத் தகுதி

மட்டக்களப்பு,ஜூன்6
கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப் பின் பிரகாரம் 3 லட்சத்து 46 ஆயிரத்து 821 பேர் வாக் களிக்கத் தகுதி பெற்றுள்ள னர் என்று மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அஸங்க ரத்னாயக்கா தெரிவித்தார்.

மட்டக்களப்பு தொகுதி யில் ஒரு லட்சத்து 62 ஆயி ரத்து 175 பேரும், கல்குடா தொகுதியில் ஒரு லட்சத்து 615 பேரும், பட்டிருப்பு தொகுதியில் 84 ஆயிரத்து 31 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



சேனையூர் நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் விழாவில் பக்தர்கள் நேர்த்திக் கடன் நிறைவேற்றுவதையும், காவடி, துலாக்காவடி எடுப்பதையும் காணலாம். (40)

## மருத்துவமனையின் கட்டடப் பணிகள் துரித கதியில்

மல்லாவி, ஜூன் 6
மல்லாவிப் பிரதேச மருத்துவமனையின் சிறுவர் விடுதி மற்றும் மகப்பேற்று விடுதி ஆகியவற்றின் கட் டடப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருவதாக மல்லாவிப் பிரதேச மருத் துவமனையின் பொறுப்பு மருத்துவர் வே.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தகவலை அவர் தெரிவித்தார். தற் போது இந்த மருத்துவ மனையில் இடநெருக்க டியுள்ளது. புதிய கட்டடங் களின் வேலைகள் நிறை வடைந்தால் இடநெருக்கடி தீர்ந்துவிடும். இதேவேளை மருத்துவர்களுக்கு விடுதி வசதி இல்லாத நிலை காணப்படுகிறது என்றும் கூறுகிறார் விஜயகுமார்.

(க-18)

## அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கி வரும் ஸ்கந்தபுரம் நூலகம்

கிளிநொச்சி, ஜூன் 6
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பொது நூலகம் போதிய அடிப்படை வசதிகள் இன்றி இயங்கிவருவதால் வாசகர் கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகி றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள நூலகங்களில் ஸ்கந்தபுரம் பொது நூலகமும் ஒன்றா கும். ஆனால் வசதிகள் ஏதுமின்றி இயங்கி வருகின் றது. கழிப்பறை வசதிகள் எவையுமே இல்லை.

அத்துடன் நூலகத்தில் நூல்கள் சரியாகப் பேணப் படுவதில்லை என்றும் நூல் கள் பல தலைகீழாகவும் மாறு பட்டவகையிலும் அடுக்கப் பட்டுள்ளன என்றும் நூல கத்தின் புனிதத் தன்மை பேணப்படுவதில்லை என் றும் வாசகர்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

> கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள நூலகங்களில் ஸ்கந்தபுரம் பொது நூலகமும் ஒன்றா கும். ஆனால் வசதிகள் ஏதுமின்றி இயங்கி வருகின்றது.

இந்த விடயம் தொடர் பாக கரைச்சிப் பிரதேச சபை யின் மாதாந்த ஒன்றுகூடல் கடந்த 23 ஆம் திகதி கரைச்சிப் பிரதேசசபை மண் டபத்தில் நடைபெற்றபோது பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் இந்த விடயங் களை இங்கு எடுத்துக் கூறியமை குறிப்பிடத்தக் கது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை மத்தி வீரன் ஏகநாதன் புதியசாதனை

அரியாலை மத்திய விளையாட்டுக்கழக வீரன் ஏகநாதன் பிரிவு மூன்றில் இடம் பெற்ற கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் 7 பந்துப் பரிமாற்றம் பந்து வீசி இதில் 5 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொணடுத்து 5 இலக்குகளை வீழ்த்திப் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார் இதே போன்று மற்றும் ஒரு சாதனையாக ஒரு அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் விளையாடத் வேண்டிய கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் இணைந்து கூட 50 பந்துப் பரிமாற்றங்கள் விளையாட நிலையில் ஆட்டம் முடிவடைந்து சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலிருந்து இரு அணிகளை தேசிய மட்டத்தில் இடம் பெறும் பிரிவு மூன்று போட்டிகளில் இணைத்துக் கொள்வதற்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் யாழ் மாவட்டக் கிரிக்கெட் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றின் இரு அணிகளும் இணைந்து கூட 50 பந்துப் பரிமாற்றங்கள் விளையாட முடியாத நிலையில் ஆட்டம் முடிவடைந்துள்ளது.

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழகமும், வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் 17 பந்துப் பிரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்த 73 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் விஷாகன் 14 ஓட்டங்களையும், நிறோஷன், வினோதரன் தலா 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 10 ஓட்டங்கள் பெறப்பட்டன பந்துவீச்சில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் வினையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரியலக்ஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 5 இலக்ககளையும் ஜெயசுதன் 7 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும், நிறோஜன் மூன்று பந்து பரிமாற்றம் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

74 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம்17 பந்து பிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் நிரோஷன் 21 ஓட்டங்களையும், மாதவராசா 12 ஓட்டங்களையும், திலீபன் 10 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பந்து வீச்சில் அரியாலை மத்திய விளையாட்டக் கழகத்தைச் சேர்ந்த ஏகநாதன் 7 பந்துப் பரிமாற்றங்களுடன் பந்து வீசி அதில் 5 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களை வீசி 6 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை, ஜான்ஷன் ஒரு பந்துப் பரிமாற்றம் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர் .

(த-86)

## மாணவி சாதனை



யாழ்ப்பாணம், ஜூன். 6

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவியான இரத்தினசபாபதி ஜனரஞ்சினி பாடசாலைகளுக்கு இடையிலான கோட்ட மட்டப் போட்டியில் பெண்களுக்கான குண்டு எறிதல், தட்டுஎறிதல், போட்டிகளில் முதலாமிடத்தையும்,

வலய மட்டப் போட்டியில் தட்டு எறிதல் போட்டியில் முதலாமிடத்தையும், குண்டு எறிதல் போட்டியில் இரண்டாமிடத்தையும், ஈட்டி எறிதல் போட்டியில் மூன்றாமிடத்தையும், மாவட்ட மட்டப் போட்டியில் குண்டு எறிதல் போட்டியில் முதலாமிடத்தையும், தட்டு எறிதல் போட்டியில் மூன்றாமிடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ங-23)

## பரபரப்பான உதைபந்து:
# நீக்கிலஸ் வெற்றி பாசையூர் சமநிலை

பண்டத்தரிப்பு, ஜூன்,6

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வருகின்ற உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்தச்சுற்றுத் தொடரின் லீக் போட்டிகள் கடந்த 30ஆம் திகதி நடைபெற்றன. முதல் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகமும் பாரதி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் 6 : 0 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் சார்பில் அமிலன் 3 கோல் களையும், அஜித் 2 கோல்களையும், றெக்சன் 1 கோலினையும் அடித்து அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர்.

மற்றைய போட்டி பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்றது. இந்தப் போட்டி மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்தது. இரு அணிகளும் சம பலத்துடன் விளையாடியபடியே இருந்தன.

போட்டி நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை அடித்திருந்ததால் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி நிறைவு பெற்றது. இதில் பாசையூல் சென். அன்ரனிஸ் சார்பில் திலீபன் ஒரு கோலினை அடிக்க றோயல் விளையாட்டுக் கழகம் சார்பில் பகீ ஒருகோலினைப் போட்டார். (ங-130)

## வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளாக...



அண்மையில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் சர்வதேச மெய்வன்மைத் தினத்தையொட்டிய தேசிய நிகழ்வு நடைபெற்றது. இதன்போது போட்டிகளும் நடத்தப்பட்டன. [illegible] காற்றை விடவும் வேகமாக விரையும் சிட்டுகள். (ங-23)

## ஆசிய மட்டப் போட்டி

Colombo 2012

### தெரிவுசெய்யப்பட்ட யாழ்.நடுவர்கள்



பிரதம நடுவர்
பி.முருவேள்



பிரதம நடுவர்
செல்வி ராதை அருளம்பலம்



பிரதம நடுவர்
ரி.சிவசோதி



நடுவர்
எஸ்.சுகிதன்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள 15 ஆவது ஆசிய மட்ட கனிஷ்ர பிரிவினருக்கு இடையே நடைபெறவுள்ள மெய்வன்மைப் போட்டிகளில் நடுவர்களாக கடமை யாற்ற யாழ்.மாவட்டத்திலிருந்து 4 பேர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

இதில் பத்மநாதன் முருகவேள், தியாகராஜா சிவசோதி, செல்வி.ராதை அருளம்பலம் ஆகியோர் பிரதம நடுவர்களாகவும் எஸ்.சுகிதன் நடுவராகவும் கடமை யாற்றவுள்ளனர். (23)

## ஓரேயொரு யாழ். பயிற்சியாளரும் ஆசியப் போட்டிக்கு செல்வார்




பயிற்சியாளர்
பாகீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூன்.6

கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள 15 ஆவது ஆசிய மட்ட கனிஷ்ர பிரிவினர்க்கான மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள இலங்கை தேசிய மெய்வன்மை அணிகளுடைய பயிற்றுனர்களாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து அளவெட்டி அருனோதயக் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் தர்மகுலசிங்கம் பாகீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவர் முடிவை யாராலும் மாற்ற முடியாது

இங்கிலாந்தில் இதயம் இல்லாத ஒருவரை வைத்திருப்பதில் பலனில்லை. அவர் ஓய்வு பெறும் முடிவை மாற்ற முடியாது. அதன் படியே நாம் செயற்பட வேண்டும்.

இவ்வாறு இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் இயன் பொத்தம் தெரிவித்தார். இங்கிலாந்து அணிக்காக விளையாடிய தென்னாபிரிக்க வீரர் கெவின் பீற்றர்சன், ஒரு நாள் மற்றும் 'ரி-210' கிரிக்கெட் தொடரிலிருந்து ஓய்வு பெறுவதாக அண்மையில் அறிவித்தார்.


இது குறித்து முன்னாள் வீரர் இயன் போத்தம் கூறுகையில், தன்னுடைய இதயம் இங்கில்லாமல் வெறுமனே உள்ள ஒருவரை இங்கிலாந்து ஓய்வறையில் வைத்திருப்பதில் அர்த்தமில்லை.

மேலும், விளையாட விரும்பாத ஒருவரை என்ன செய்ய முடியும்? ஒரு முறை அவர் முடிவெடுத்து விட்டால், அதனை எந்த ஒன்றும் மாற்றப் போவதில்லை. எனவே நாம் அதனை ஒப்புக் கொண்டு மேலே செல்லவேண்டும்.

இங்கிலாந்துக்காக எந்த ஒரு நாள் கிரிக்கெட் தொடர்களிலும் விளையாடப் போவதில்லை என்று அவர் முடிவெடுத்து விட்டால், அவரை செல்ல அனுமதித்து, அவருக்குப் பதிலாக இங்கிலாந்திற்காக ஒரு நாள் தொடர்களில் விளையாட விருப்பம் உள்ள ஒருவரைத் தேர்வு செய்யவேண்டியதுதான்.

அவரைப் போன்ற திறமை மிக்க ஒருவர் உலகக் கிண்ணம் அல்லது செப்ரெம்பரில் நடைபெறும் 'ரி-20' உலகக் கிண்ணம் போன்ற பெரிய அரங்கத்தில் பங்கேற்றுதான் ஓய்வு பெறுவார் என்றே நான் நினைத்தேன். 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் அவர் விளையாடும்போது கூட அவருக்கு 34 வயது தான் ஆகும். அதனால் அவர் அப்போது கூட வயதானவர் என்று கூற இடமில்லை எனவும் தெரிவித்தார். (5)

# அசத்தினார்; இடம்பிடித்தார்:




**இலங்கையுடனான இறுதி இரண்டு 'ரி-20' சர்வதேசப் போட்டிகளிலும் சொஹைல் தன்வீர் மிகச் சிறப்பாகப் பந்துவீசியிருந்தார்.**

இலங்கைக்கெதிரான ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான அணியில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொஹைல் தன்வீர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். காயமடைந்துள்ள ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் நசீர் ஜம்சதிற்குப் பதிலாகவே இவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.


ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட அணிகளில் சொஹைல் தன்வீர் 'ரி-20' சர்வதேசப் போட்டிகளுக்கான அணியில் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் இடம்பெற்று முடிந்த 2 'ரி-20' சர்வதேசப் போட்டிகளிலும் சொஹைல் தன்வீர் மிகச் சிறப்பாக பந்துவீசியிருந்தார்.

இடம்பெற்ற இரண்டு ஆட்டங்களிலும் ஓட்டங்களைக் கட்டுப்படுத்தி பந்துவீசிய சொஹைல் தன்வீர், 4 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தார். அத்தோடு 'ரி-20' தொடரின் நாயகனாகவும் அவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

சொஹைல் தன்வீரின் உள்ளடக்கம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் தேர்வாளர்களின் தலைவர் இக்பால் ஹாசிம், அணி நிர்வாகத்தின் கோரிக்கையின் பேரிலும், சொஹைல் தன்வீரின் தற்போதைய திறனின் அடிப்படையிலும் அவரை அணியில் தொடர்ந்தும் வைத்திருக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரரான நசீம் ஜம்சத் ஆரம்பத்தில் 'ரி-20' தொடர் மற்றும் ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான அணியில் இணைக்கப்பட்டிருந்தார். எனினும் இலங்கைக்குப் பாகிஸ்தான் அணி புறப்பட முன்னரே, காயம் காரணமாக இந்தத் தொடரில் பங்குபற்ற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டது. அப்போதைய நிலையில் ஜம்சத்திற்கு மாற்று வீரர் ஒருவரை பாகிஸ்தான் தேர்வாளர்கள் அறிவித்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# டைகர் வூட்ஸ் மீண்டும் எழுச்சி!



ஐக்கிய அமெரிக்காவின் பி.ஜி.ஏ. கோல்ப் சுற்றுத் தொடரின் அங்கமான ''மெமோரியல்'' சுற்றுத் தொடரை, உலகின் பிரபல கோல்ப் வீரரான டைகர் வூட்ஸ் வெற்றிகொண்டுள்ளார். ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க கோல்ப் தொடர் ஆரம்பிக்க இரண்டு வாரங்களே காணப்படும் நிலையில், இந்த வெற்றி முக்கியமானதாகக் காணப்படுகிறது.

உலகின் அசைக்க முடியாத வீரராகக் காணப்பட்ட டைகர் வூட்ஸ், இரண்டாயிரங்களின் இறுதிப்பகுதியிலும், அண்மைக்காலமும் பெரியளவிலான வெற்றிகளைப் பெறத் தடுமாறி வருகிறார். முன்னர் இருந்தளவு வெற்றிகளைப் பெறக் கூடிய தன்மை அவரிடம் காணப்படாத நிலையில், அவரது காலம் நிறைவடைந்து வருவதாக கருதப்பட்டது.

இந்த நிலையில் இடம்பெற்ற '' மெமோரியல்'' கிண்ணத் தொடரில் அவர் மிக இலகுவாக வெற்றியைப் பெற்றுக் கொண்டார். இது பி.ஜி.ஏ. சுற்றுத்தொடரில் அவர் பெற்றுக்கொள்ளும் 73 ஆவது சம்பியன் பட்டமாகும்.

பி.ஜி.ஏ. கிண்ணச் சுற்றுத் தொடரில் அதிக சம்பியன் பட்டங்களை வென்றவராக சாம் ஸ்னீட் 82 வெற்றிகளோடு காணப்படுகிறார்.

வெற்றியைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த டைகர் வூட்ஸ், நான் விளையாடிய விதம் மகிழ்ச்சியைத் தந்தது.


அண்மைக்காலங்களில் நான் சிறப்பாக விளையாடிய விதம் இதுவாகத்தான் இருக்கும். என்னால் புற்தரைகளில் வேகமாகப் பந்தை அடிக்க முடிந்தது. அத்துடன் என்னுடைய தற்போதைய திறன் குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

தொழில் ரீதியான வீரராக மாறிய பின்னர், நான் சிறந்த காலத்தை அனுபவித்துள்ளேன். எனது 36 வயதில் 73 ஆவது சம்பியன் பட்டத்தை வெல்ல முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இதுவரை நான் சாதித்துள்ளவை குறித்து மகிழ்ச்சியடைவதுடன், இன்னும் சில ஆண்டுகள் என்னால் சிறப்பாக விளையாட முடியும் என்று கருதுகின்றேன். (5)

# பிரேசில் அதிர்ச்சி தோல்வி



மெக்சிகோ அணிக்கு எதிரான சர்வதேச நட்பு உதைபந்தாட்ட போட்டியில், பிரேசில் அணி அதிர்ச்சி தோல்வியடைந்தது.

பிரேசில், மெக்சிகோ அணிகள் மோதிய நட்பு உதைபந்தாட்ட போட்டி, அமெரிக்காவில் உள்ள டாலசில் நடந்தது. போட்டியின், முதல் பாதியின் 22 ஆவது நிமிடத்தில், மெக்சிகோ அணியின் சண்டோஸ் ஒரு கோல் அடித்து, வெற்றிக்கு வித்திட்டார். 33ஆவது நிமிடத்தில், மெக்சிகோ அணி ஜாவியர் 'பெனால்டி' வாய்ப்பில் கோல் அடித்து, வெற்றியை உறுதி செய்தார். பிரேசில் அணி கோல் எதுவும் அடிக்கவில்லை. முடிவில், மெக்சிகோ அணி, 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

[illegible] கொண்டிருக்கும் [illegible] தோல்வி, அந்த அணியின் ரசிகர்களைக் கலக்கமடைய செய்துள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய விதிகள் பக்கச்சார்பானவை

ஐ.சி.சியினால் புதிதாக பரிந்துரைக்கப்பட்ட விதிகள் இங்கி லாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு பக்கச் சார்பாகவே அமைந் துள்ளன. இதனால் ஏனைய நாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும். இவ்வாறு இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஒன்று கூடிய சர்வதேசக் கிரிக்கெட் சபையின் செயற்குழு ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் ஓர் பந்துப் பரிமாற் றத்துக்கு இரண்டு பவுண்சர்களை அனுமதிப்பது உட்பட சில பரிந்துரைகளை முன்வைத் திருந்தது. இந்த மாற்றங்கள் தொடர் பான தனது கருத்துக்களை முன்வைக்கும் போதே மஹேல ஜெய வர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையிலேயே ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் ஓர் அணி சார்பாக இரண்டு புதிய பந்துகளைப் பயன்படுத்துவதற்கான விதி அறி முகப்படுத் தப்பட்டிருந்த நிலையில், புதிதாகப் பரிந்துரைக்கப்பட் டுள்ள விதியும் நடைமுறைப்படுத்தப்பட்டால் சிறந்த வேகப்பந்து வீச்சைப் பிரதானமாகக் கொண்ட அணிகளுக்கு வாய்ப்பாக அமையும். ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் அண்மைக்காலத்தில், குறிப் பாக கடந்த 8 வருடங்களில் ஏராளமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. புதிய நுட்பங்களும், புதிய விதிகளும் உட்புகுத்தப்பட்டுள் ளன. அத்தோடு இவ்வாறான மாற்றங்கள் நிரந்தரமான மாற்றங் களாகக் கருதப்படுகின்றனவா என்பதை நோக்க வேண்டியுள்ளது.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டி 2015 ஆம் ஆண்டில் ஆஸ் திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ள நிலையில் புதிதாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றங்கள் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு அனுகூலமாக அமையுமா எனக் கேட்கப்பட்டமைக்கு, அவ் வாறு அமையும் என நான் கருதுகின்றேன். எனினும் எங்களிடமும் ஓரளவு சிறந்த வேகப்பந்து வீச்சு அணி காணப்படுகின்றது. அதனை மீளமைக்க வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5)



மஹேல ஜெயவர்தன


SPECTRA SKILLS, CIMA

இணைந்து நடத்தும் க.பொ.த. உயர்தர வணிகப் பிரிவு 2012 மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு.

ஆசிரியர்:- திரு. S.T.சோதிலிங்கம் (ஆசிரியர், றோயல் கல்லூரி,கொழும்பு)
இடம்:- யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.
காலம்:- 07.06.2012 வியாழக்கிழமை
காலை 8.30 தொடக்கம் பி.பகல் 2.30 வரை.
அனுமதி முற்றிலும் இலவசம். அனைவரும் பயன் பெறுக.


## நடப்புச் சம்பியன் நடையைக் கட்டினார்

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் இடம்பெற்று வரும் பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் சுற்றுத் தொடரில் சீனாவின் முன்னணி வீராங்கனையும் கடந்த வருடம் பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் சம்பியனுமான லீ நா - எதிர்பாராத வித மாகத் தோல்வியைச் சந்தித்துள்ளார். 142 ஆம் இட த்தில் தரப்படுத்தப்பட்டுள்ள கஸகஸ்தான் வீராங்கனையிடமே அவர் தோல்வியைச் சந்தித்துள்ளார்.

நான்காம் சுற்று ஆட்டத்தில் மோதிய லீ நா, கஸகஸ் தானின் யாரோஸ்லாவா ஸ்வேடோவாவிடம் 6-3, 2-6, 0-6 என்ற கணக்கில் தோல்வி யடைந்தார். முதலாவது செட்டில் சிறப்பாக ஆடிய லீ நா, பின்னர் அதே யளவு திறமையை அடுத்த இரண்டு செட்களிலும் வெளிப்படுத்தத் தவறியி ருந்தார்.

பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் தொடரின் கடந் தாண்டுத் தொடரில் சம்பி யன் பட்டம் வென்றி ருந்த லீ நா, நடப்புச் சம்பி யனாக தனது பட்டத்தை இந்தாண்டும் தக்க வைத் துக் கொள்ளும் எதிர் பார்ப்பில் களமிறங்கியி ருந்த போதிலும், 4 ஆவது சுற்றுடனேயே வெளியே றியுள்ளார்.




லீ நாவின் தோல்வியை அடுத்து தற்போது பிரெஞ்சுப் பகிரங்க ரென்னிஸ் தொடரின் தனி நபர் பெண்கள் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்கள் யாரும் அடுத்த சுற்றில் காணப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (5)


### கார் விற்பனைக்கு

Toyota COROLLA 121 ரொடல் வெள்ளை நிற One Owner, WP JW-XXXX தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. Company Maintainance உடன் Top Condition.
தொடர்பு- T.சண்முகநாதன்
75, அம்மன் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம். (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு முன்பாக).
தொ.பே- 0712510025



### மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 21,500/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

(18625)



ரூபா 19999.00 செலுத்தி கணனியொன்றினை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்.....

MARSHA SYSTEMS (PVT) LTD
www.marshasystems.lk
SOLUTION TO THE PEOPLE



CLASSIC
Intel 3.0 Ghz (1 year)
Asrock G41 (3year)
2 GB DDR III (3year)
Hard Disk 80 GB (1year)
20" LCD compaq (3year)
UPS DCP (2year)
ATX Casing (1year)
DVD Writer (1year)
KEY Board
Mouse

ரூ. 40000/-
மாதாந்தம்
ரூ.5000

Camera Phone இலவசம்
Conditions Apply

| யாழ்ப்பாணம் | கைதடி | கிளிநொச்சி | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|
| 74,Kannathiddy Road Jaffna Call : 021 222 9418 | MMV Road, Hainady Call : 021 4923561 | 74,A9 Road Ananthapuram Call : 021 4923525 | 10,Modern Market Valvettithurai Call: 021 4923404 |



### Diploma

MS Office, DTP, -
Web Design,Hardware with Networking,
Accounting, Autocad-2D &3D, Multimedia

Diploma கற்கும் அனைவரும் DTP, Web Design கற்கை நெறிக்கட்டணம் இன்றி கற்கலாம்

மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUSடன் நேரில்

MCAI CAMPUS
SMS Your name & Course to 77 5 520 940 & Get Schol.
243,Adiyapatham Road,Kalviyankadu
Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience
Www.mcaicampus.info
Supported by Jaffna Computer Society
Closing Date 07.06.2012


### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா இரத்தினம்**

(ஓட்டுமடம் சந்தி, இரத்தினம் கடை)
திதி: 06.06.2012 - திருதியை

தோற்றம் 12.09.1941 — மறைவு 10.06.2009

நீங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள்
எமைவிட்டு மறையாது

234/10, சென்.செபஸ்தியன்லேன்,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவலைகளுடன்
குடும்பத்தினர்.

(18969) (45.6.7)


### ஆங்கிலம் என்றால் SAAMSON

உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளுமே 2-4 வயதுக்குள் தம் தாய் மொழியைப் பேசப் பழகுகின்றன. தமிழ்க் குழந்தைகள் தமிழையும், ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தையும் இவ்வாறே பேசப் பழகின. 2 வருடங்களில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்றுவரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது?

தவறான வழியில் புத்தகம், DVD, இலக்கணம், கணினி, வழியூடாக ஆங்கிலத்தைப் பழக முயன்றமையாலேயே இன்றுவரை உங்களுக்குக் கடினமாக இருக்கின்றது.

நீங்கள் சிறுகுழந்தையில் எவ்வாறு தமிழை மற்றவர்கள் பேச அவதானித்துப் பேசினீர்களோ அதே வழியிலேயே நாம் ஆங்கிலத்தைப் பழக்கப்படுத்துகின்றோம். 20 பேர் கொண்ட இம் 3 மாதப் பயிற்சிப் பட்டறையில் நீங்களும் பயிற்சி பெற விரும்பினால் 10.06.2012 இற்கு முன் எமது அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள். பிரிவு -(I) 9-11, பிரிவு -(II) 11-01, பிரிவு -(III) 02-04,
அவதானிக்குக- ஒரு பிரிவில் 20 பேருக்கு மேல் கண்டிப்பாக அனுமதியில்லை.

(3 மாதப் பயிற்சிக் கட்டணம் ரூபா 3000)

SAAMSON ENGLISH
279, ஆஸ்பத்திரி பின்புறம்,
யாழ். நகர். Tel- 0776214567



### CIMA-UK

Financial management (Management level)

November 2012 session-Batch I (9.6.2012- 9 A.M)



Why F.M @ MCS?

- ★ Flexible time table.
- ★ Individual attention
- ★ Syllabus completion on time
- ★ Revision classes
- ★ Mock exams
- ★ Comfortable pass

Supported by UNDP/JRRP

MCS IT CAMPUS
324, Palay Road, Jaffna.
For details Call us 772 395 895


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உயர்ந்தோரின்
வாழ்க்கை வரலாறே
உலக வரலாறு.
தாமஸ் கார்லைஸ்

# புதன் பொய்கை A

உதயன் 06 ஜூன் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# வெற்றிக்குத் துணை போகின்ற விடாமுயற்சி



அருணா தர்மலிங்கம்

இவ்வையகத்தில் வாழுகின்ற மக்கள் தமது வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றே சதா எண்ணுவார்கள். இதுவும் உலக நியதி. அந்த வெற்றி நிறைந்த வாழ்வைத் தேடி அலையத் தேவையில்லை. அது நம் கரங்களில்தான் இருக்கிறது. உயர்வான எண்ணங்களும், சோர்வு இல்லாத விடா முயற்சியும் தொடர்ந்து மேற்கொள்ளும் செயற்பாடுகளுமே நமக்கு வெற்றியை அளிக்கின்றது என்று கூறினாலும் மிகையாகாது.

இறைவன் எங்களை மனிதனாக படைத்திருப்பதே நாம் பெற்ற முதல் வெற்றி என்றும் கூறலாம். தாவரமாகவும், விலங்காகவும், பறவையாகவும் பிறக்காமல் கூன் குருடு, செவிடு அற்ற திடகாத்திரமான மனிதப்பிறவியை எடுத்தது வெற்றியின் முதல்படியாகும்.

நாம் மனிதர்களாகப் பிறந்ததே வெற்றிதான் என்றால் வாழ்க்கைமட்டும் வெற்றியளிக்காமல் போய்விடுவதற்கு என்ன காரணம்? இது சிந்தித்துப்பார்க்க வேண்டிய விடயமாகும். வெற்றி நம் முடனே பிறக்கிறது அதனை வெளியில் தேடி அலையத் தேவையில்லை.

ஆரோக்கியமான உடல் நலம், சுத்தமான மனநிலை, சோர்வு அற்ற உழைப்பு என்பவைகள்தான் நமது வெற்றியின் ஒளிவிளக்கு "விடாமுயற்சி இல்லாத மனிதன் இறக்கைகள் அற்ற பறவைக்கு ஒப்பானவன்" என்பது மேற்குலக நாடுகளில் வழங்கி வரும் பழமொழியாகும். ஆகவே வாழ்க்கையில் வெற்றியைப் பெற்று உயர்வடைவதற்கு விடா முயற்சி, ஆர்வம் என்பவை கட்டாயம் தேவை.

இது இல்லாதவன் வாழ்கையில் முன்னேற முடியாது. அவனது நிலை திண்டாட்டம் தான். நமக்கு உண்டாகின்ற ஆர்வம் இன்று நேற்று தோன்றி நாளை மாறிப் போகக்கூடிய சாதாரண விருப்பமாக இருக்கக்கூடாது. ஆர்வம் வளர்ச்சி பெற்று இமயமலையைப் போன்று உருவாக வேண்டும். அப்பொழுதுதான் வலிமையைப்பெறும், அது வெற்றியை அழைத்துவர புறப்பட்டு விடும். அந்த உணர்ச்சிபொங்கித் ததும்பும் போது மனதில் விடாமுயற்சியான ஆர்வம் கொழுந்து விட்டு எரியும். கொதிக்கும் தண்ணீரைப் போன்று சூடாகி ஆவேச உணர்சியை உருவாக்கி நற்செயலுக்கு வழி வகுக்கும்.

இரவிலும்,பகலிலும் நித்திரையின் போதும் விழித்திருக்கும் வேளையிலும் அந்த ஆவேச உணர்ச்சி நம்மைப்பிடித்து உலுக்கி வைக்கும். ஆற்றலைப் பெறும் அந்தப் பிடியிலிருந்து நாம் விலகிவிடவும் முடியாது.

நினைத்த காரியத்தை அடைந்தே தீர வேண்டும் என்ற உறுதி நம் மனதில் தோன்றி விடும். தயார் நிலையில் இருக்கும் நம்மிடம் இன்னல்களும், இடையூறுகளும் மண்டியிட்டு சரணடைகின்றன. நம்முடைய மனதிற்கு வலுவான தாக்க சக்தி உண்டு என்பதை மனோதத்துவ நிபுணர்களும் விஞ்ஞானிகளும் கூட ஏற்றுக் கொள்கின்றனர். மனம் கூடுதலாக எதனை விரும்புகின்றதோ அதனை தன்னிடம் இழுத்துக் கொள்ளும்சக்தி இத்தாக்கத்திற்கு உண்டு.

படிப்பு, பதவி,உதவி,பணம் எதுவுமே இல்லாத நிலையிலும், அனேகமானோர் உயர்வான எண்ணத்துடன் அயராது உழைத்து வெற்றி பெற்றிருக்கின்றனர். இதற்குச் சான்றாக தென் இந்தியாவில்தமிழ் நாட்டு முதல் அமைச்சராக பதவி வகித்த கர்மவீரர் காமராஜர் மற்றும் இலங்கையில் பிரபல தொழிலதிபராக மிளிர்ந்த காலம்சென்ற ஏ.வை.எஸ். ஞானத்தைக் குறிப்பிடலாம்.

மேலும் ஏழைத் தொழிலாளியாக இருந்த ஹென்றி ஃபோர்டு குதிரைகள் இல்லாமல் ஓடக் கூடிய வண்டி ஒன்றைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று பெரு விருப்பமும் ஆர்வமும் கொண்டிருந்தார்.

எந்தவித வெளி உதவி இல்லாமல் தன்னுடை உழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்டு விடாமுயற்சி மூலம் மோட்டார் வண்டியைக் கண்டு பிடித்தார். அவருடைய தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படுகின்ற கார்கள், சிற்றூர்திகள், பாரஊர்திகள் உலகெங்கும் ஓடிக்கொண்டிருக்கின்றன. வானத்தில் செல்வதற்கான வானூர்தி கண்டு பிடிக்க வேண்டும் என்று ரைட் சகோதரர்கள் விருப்பங்கொண்டு ஆர்வம் மனதில் உருவாகியதனால் அல்லும், பகலும் உழைத்தனர். அவர்களது விடாமுயற்சியின் பயனாக பறவையைப் போன்று விண்ணில் மனிதனாலும் பறக்க முடியும் என்று உலகமக்களுக்கு நிரூபித்துக்காட்டினார்கள்.

இது அனைத்தும் பழைய கதை. இக்கால கட்டத்தில் விஞ்ஞானம்,தொழில்நுட்பம், இலத்திரனியல் என்பன கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்து விட்டன. இவை எல்லாம் வெற்றியளிக்க விஞ்ஞானிகளிடம் தோன்றிய விடா முயற்சி தான் காரணம் என்பது வெள்ளிடை ஆகும்.

உலக மக்கள் கற்பனையில் கூடக் காண முடியாத அளவுக்கு அப்பலோ விண்வெளிப் பயணத்தில் வெற்றிவாகை சூடியவர் நீல் ஆம்ஸ்ரோங் என்பதை நாம் அறிவோம். அவர் நிலாவில் முதல் முதல் காலடி பதித்து அமெரிக்க தேசியக் கொடியை சந்திரனில் ஏற்றிவைத்தார். அந்த நேரம் அவர் உலக நாயகனாக மாறியதற்கு முக்கியகாரணம் விண் வெளிப்பயணத்தில் கொண்டிருந்த அதீத ஆர்வமே ஆகும்.

தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் அலக்ஸ்சாண்டர் கிரகாம் பெல் ஆவார். ஆனால் இன்று உள்ளூராட்சி சபையில் பணியாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளி தொடக்கம் நாட்டின் தலைவர் உட்பட அனைவரும் கையடக்க தொலைபேசியை பயன்படுத்துகின்றனர். இது எதனால்? இலத்திரனியல் துறையில் ஜப்பான் அடைந்த வெற்றியே. அவர்கள் வெற்றியை மாத்திரம் காணவில்லை. இந்தப் பரந்த உலகை சுருக்கி ஒருகுடையின் கீழ் கொண்டு வந்துள்ளனர் என்பது நிதர்சனமாகும்.

"சார்ட்டாடு" வங்கியில் மாதம் 20 ரூபா ஊதியத்தில் பூக்னோலாலா பணியாற்றினார். திடீரென்று அவருக்கு மனதில் ஒரு யுத்தியொன்று தோன்றியது. அதாவது இந்திய உபகண்டத்தில் மக்களின் மூலதனமும்,நிர்வாகமும் கொண்ட ஒரு தேசிய வங்கியை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது.விடாமுயற்சியுடன் செயற்பட்டார். அனேகமானவர்களைச் சந்தித்து தமது எண்ணக்கருவை விளக்கினார்.வங்கி பாரத மக்களுக்கு பயன்படும் என்று வாதிட்டார். தனிப்பட்ட ஒருவர் வங்கியை உருவாக்குவது மிகவும் கடினமான செயல் என்று அவருக்கு தைரியத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் லாலா சளைக்கவில்லை நான் வெற்றி பெறுவேன் என்று அசைக்க முடியாத ஆர்வத்துடனும் விடாமுயற்சியுடனும் செயற்பட்டு"சென்றல்பாங்ஒவ்இந்தியா" (central bank of india) என்ற வங்கியை ஸ்தாபித்தார். இன்று பாரதம் முழுக்க இந்த வங்கி வெற்றிகரமாக இயங்கிவருகிறது. அவருடைய அரிய சேவையை அவதானித்த ஆங்கிலேயர் அவருக்கு சேர் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர்.

இனி ஆயுள் காப்புறுதியின் கணிசமான பணம் தேடிய வங்காளத்தைச் சேர்ந்த ஷாம்ஷர் அலி பற்றி சிறிது நோக்குவோம். இவர் ஹில்லாங் என்ற நகரத்தில் வசித்து வந்த ஒரு செல்வந்தரின் மகன். செல்வத்தில் திளைத்திருந்த அலியின் வாழ்கையில் திடீரென்று பாதிப்பு ஏற்பட்டு விட்டது. அவருடைய தந்தையின் வர்த்தக நிலையத்தில் எதிர்பாராத விதத்தில் பெரும் நட்டம் ஏற்பட்டது. மிகவும் கௌரவமாக வாழ்ந்த அலியின் குடும்பம் ஒரு நேரக் கஞ்சிக்கே திண்டாட வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது. அத்தோடு வயதான பெற்றோரைக் காப்பாற்ற வேண்டிய நிலைக்கும் அவர் தள்ளப்பட்டார். கஷ்டமே என்னவென்று தெரிந்திராத ஷம்ஷார் அலி குடும்பத்துடன் கல்கத்தாவுக்கு இடம் பெயர்ந்தார்.கையில் பணம் கிடையாது எல்லா இடமும் வேலை தேடி அலைந்து அவருக்கு ஒரு ஆயுள் காப்புறுதி நிறுவனத்தில் ஏஜெண்டாகப் பணியாற்றும் வேலை கிட்டியது. அந்தக்காலத்தில் ஆயுள் இன்சூரன்ஸ் எடுக்க அதிகமானோர் விரும்பவில்லை.

ஆனால் அலிக்கு இருந்த ஆர்வம் குறையவேயில்லை. அவர் முன்வைத்த காலை பின்வைக்கவே இல்லை. ஒவ்வொரு நாளும் அவரது வருமானம் உயர்ந்து கொண்டே சென்றது. ஆண்டுக்கு ஆண்டு கமிஷன் மூலம் கிடைக்கும் பணம் லட்சக்கணக்காக மாறியது. இந்தியாவிலே மிக அதிகமாக சம்பாதிக்கக் கூடிய காப்புறுதி ஏஜெண்டாகத் திகழ்ந்தார். அமெரிக்காவில் உள்ள இன்சூரன்ஸ் கம்பனி யொன்று இவரை அழைத்து உயர்பதவியில் அமர்த்தியது அவருக்கு ஏற்பட்ட சகல கஷ்டங்களும் தீர்ந்தன.

இந்த அளவிற்கு அவர் உயர்வு பெற்றதற்குக் காரணம் இவரிடமிருந்த ஆர்வமும், துடிப்பான செயற்பாடுகளுமே வாழ்க்கையில் வெற்றி பெற்று உயர்வடைய வேண்டுமானால் தம்மைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியமாகும்.

நாம் எந்த நிலையில் வாழ்கின்றோம்? நமது வாழ்கைக்கு தேவைப்படுவது என்ன? வெற்றிகிட்ட என்ன செய்ய வேண்டும்? என்பனவற்றில் கவனமாக இருத்தல் நல்லது. அதேவேளை சிலர் நல்ல கல்வி அறிவு தொழில் நுட்பம் மிகுந்த நிலையில் வாழ்க்கையில் தோல்வியைத் தழுவி அல்லலுறுவதையும் காணக் கூடியதாகவுமுள்ளது.

எமது முன்னேற்றத்திற்கு அதிக பணம் தேவைப்படுவதில்லை. அரசியல்வாதிகள் சிபார்சும் அவசியமில்லை. பணக்கார குடும்பத்தில் பிறக்கவும் தேவையில்லை ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தை அடைய சகல உரிமையும் உண்டு நமக்கு கட்டாயம் வெற்றி கிட்டும். என்று நம்பிக்கையுடன் செயற்படத் தொடங்க வேண்டும். எவ்வளவு எதிர்பார்ப்புகள் சரிவுகள் அவமானங்கள் எதிர்த்து வந்த போதிலும் எடுத்துக் கொண்ட கருமத்தை முடிக்கும் வரையில் உறுதியுடன் உழைத்து வர வேண்டும்.


வெற்றி கிட்டுவது நிச்சயம் நமக்கு நம்பிக்கைதான் வாழ்வின் உயிர் நாடியாகத் திகழுகின்றது. நம்பிக்கை அரைகுறையாக இருந்தால் எந்தவித பலனும் ஏற்படப் போவதில்லை. நம்பிக்கை திடமாக இருக்க வேண்டும்.வலுவடைந்த நம்பிக்கைதான் மனிதனின் நோயைக் குணப்படுத்த உதவுகின்றது. நம்பிக்கையின் உதவியில்லாவிட்டால் டாக்டர் வழங்கும் மருந்துகள் வியாதியைக் குணப்படுத்தாது என்பது கண்கூடு

மலை இருந்த இடத்தை விட்டு நகரக்கூடியதல்ல ஆனால் நம்பிக்கையோடு உறுதி பூண்டு செயற்படுவோம் என்று நாம் நம்பினால் போதுமானதாகும். நாம் வாழும் வாழ்கையை வளமுடனும் களிப்புடனும் மனநிறைவுடனும் வாழப்பழகிக் கொள்ள வேண்டும், ஏன்என்றால் நாம் ஒரே ஒரு முறைதான் வாழப்போகின்றோம்.

அப்படி வாழ்கின்ற வாழ்க்கையை வெற்றியுடன் வாழ்வோம் வெற்றிதான் வாழ்க்கை! வாழ்க்கை தான் வெற்றி! விடாமுயற்சியின் பயனாக கிடைக்கும் வெற்றி உங்கள் கையிலே தான் உள்ளது வெற்றிக்களிப்பிற்கு விடாமுயற்சிதான் துணை போகின்றதென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலூனில் வடிவமைக்கப்பட்ட உருவம்




கலைஞர்கள் தமது கலைப் படைப்புக் களை வித்தியாசமான முறையில் வெளிப்ப டுத்தி வருகின்றனர். அந்த வகையில் பலூ னில் உருவாக்கப்பட்ட உருவத்தை இங்கே காணலாம்.

# போத்தலைக்கொண்டு உருவாக்கப்பட்ட மலர்கள்









பொதுவாக சிலர் குளிர்பானங்களை அருந்திவிட்டு அதன் 'ரின்'களைக் குப்பைத் தொட்டியில் போடுவதைத் தான் வழக்கமாகக் கொள்கின்றனர். இவ்வாறான 'ரின்'களை வைத்து மிகவும் வித்தியாசமான முறையில், செடியில் புதிதாகப் பூத்துக் குலுங்கும் மலர்களைப் போன்று காட்சியளிக்க வைத்திருக்கும் கலைநுட்பத்தினை இங்கு காணலாம்.

## தண்ணீரில் தரையிறங்கும் விமானம்

பொதுவாக விமானங்கள் அதற்கென்று பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இடத்தில்தான் தரையிறங்கும். ஆனால் இந்த விமானம் சற்று வித்தியாசமாக தண்ணீரில் தரையிறங்குகின்றது. அதாவது வான்வழி மற்றும் நீர்வழி என இரண்டுக்கும்பயன்படும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக் கப்பட்டுள்ளது இந்த விமானம்.



## வித்தியாசமான பறவை




பறவைகளுக்குப் பொதுவாக ஒரு தலையுடன் ஒரு சொண்டு மட்டுமே காணப்படும். ஆனால் இரண்டு தலைகளுடனும் மூன்று சொண்டுகளுடனும் சுடிய பறவை ஒன்று பார்ப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது. பார்ப்பதற்கு கோழிக்குஞ்சு போன்று தோற்றமளிக்கும்.


## கம்பியில் கார் செலுத்திச் சாதனை



பெய்ஜிங்கில் யாங்ஸி என்ற ஏரியின் மீது கட்டப்பட்ட 60 மீற்றர் நீளமுள்ள இரும்புக் கம்பி மீது கார் செலுத்தி உலக சாதனை படைத்துள்ளார் யாங் ஸியாங் டாங். இவரது சாதனை கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

## வித்தியாசமாக அமர்ந்திருக்கும் விலங்குகள்






பொதுவாக குழந்தைகள் மழலையில் அழகு என்போம். ஆனால் அதற்கு சிறிதும் நாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்று கூறும் அளவுக்கு இந்த விலங்குகளும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உங்கள் கைரேகைகளின் பலன்கள்




**இருதய ரேகையின் அமைப்பும் பலாபலன்களும் (தொடர்ச்சி)**

கையில் இருதய ரேகை இல்லாதவர்கள் மற்றவர்களின் சகாயத்தைக் கொண்டேனும் தன் காரியத்தை முடித்துக் கொள்வர். பொதுவாய் வஞ்சகமும் கபடமும் குடிகொண்டிருக்கும். புதன்மேடு தாழ்ந்திருந்தால் துரோகத்தன்மை வளர்ந்து வரும். சுண்டுவிரல் கோணலாகவும், பின்னலாகவும் நகம் ஒடுங்கியோ நீண்டோ விருந்தாலும், இத்தகையோர் கொஞ்சமும் நம்பத் தக்க வரல்லர். பணம் சம்பாதிக்கப் பொய், சூது, வாது, மோசம் எது வேண்டுமானாலும் செய்வர். இருதய ரேகையில்லாமல்,செவ்வாய் மேடு பலத்திருந்தால் கோபாவேசத்தில் கொலையும் செய்திடுவர். இருதய ரேகையின்றி சனி மேடு வலுத்திருந்தால் மனிதரை வெறுப்பவராவார். பேராசை மிகுந்தவராயிருப்பார். பிறரை வஞ்சிப்பதில் கருத்துடையவராவார். குரு ஆதிக்கமிருப்பின் எவ்விதத் தீங்குமிழையார். சந்திராதிக்க முள்ளோராயின் தந்நலங் கருதுபவராயிருப்பர். இதனால் இருதய ரேகையற்றவர்கள் இரக்க மற்றவரென்பதும், துர்க்க குணமுள்ளோரென்பதும் கவனிக்கத் தக்கது. இருதய ரேகை உற்பத்தியில் சிறுசிறு கிளைகளோடும், இறுதியில் மிகப் பெரிய கிளைகளோடும் தோன்றும். சிலருக்கு இருதய ரேகை சனிமேட்டில் நின்று இரு கிளைகளாகப் பிரிந்து விடும். இருதய ரேகை குரு மேடுவரை சென்றிருப்பதால் ஆபாசத்தைக் குறிக்கும்.

1.இருதய ரேகையின் இறுதிமுனை குரு மேட்டில் நின்றிருக்குமாயின், பாச பந்தத்தைக் காட்டும். அன்பை வைத்த விடத்தில் வளர்க்கும் அவாவுடையவராவர். அன்பு மிகுந்த விடத்து மிக்க கண்ணியமாயிருக்கும். தரித்திரம் வந்துற்ற போதிலும் அன்பு பிரகாசிக்கும்.





2.இருதய ரேகையின் இறுதி சனிமேட்டுக்கும் குருமேட்டுக்கும் மத்தியில் மேல் நோக்கிச் சென்றிருக்குமாயின், விவேகமும் ஆசாபாசத்தோடுங் கூடிய அன்பு மிகுந்திருக்கும். ஆனால் லாபத்தை முன்னிட்டு அன்பு செய்வதில்லை. மற்றவர்களின் அபிப்பிராயத்தில் சுலபமாகக் கட்டுப்படமாட்டார். மூடத்தன்மையுமிராது.

3.இருதய ரேகை சனி மேட்டிலேறியிருக்குமாயின் போகத்துக்குரிய வழியில் அன்பு தழைக்கும். சுக்கிரமேடு செழித்தோங்கி ரேகையும் சிவந்த நிறங்காட்டியிருந்தால் காதல் வழியில் அன்பு மிகுதியாகச் செல்லும். சுருக்கிச் சொல்லில் விஷய சுகத்திலீடுப்பட்டிருப்பர். இத்தகையோருக்கு ஸ்தூல புத்தியே நாட்டம்.

4.இருதய ரேகை மூன்று கிளைகளுடன் படத்திலுள்ளதுபோல் அமையப்பெறின் இருதயம் இயற்கையிலேயே விவேகம், பாசம், தேகபலம் ஆகிய மூன்றையும் ஏகபமாய் உடையதென்றும், கட்டை விரல் பருத்தும், புத்தி ரேகை மெல்லியதாயும் இருந்தால் புத்தியின் ஆட்சியின்றி யாவும் நடைபெறுவதை விளங்குவதாகும்.

மூன்று கிளைகளில் எந்த ரேகை நன்கு பதிந்துள்ளதோ அவ்வகையில் உணர்ச்சி அதிக மென்பதாயறியவேண்டும். இத்தகையதோர் விவேக முதிர்ச்சியினால் ஒரு அன்புள்ள அரசனைப் போல் உற்றார் உறவினர்களையும் மற்றோரையும் நேசிப்பர். சுயநலமின்றி எப்பொழுதும் நன்மையில் கருத்தைச் செலுத்துபவராவர். விசாலமான இருதயமே இதற்குக் காரணமாகும். இருதய ரேகையின் கிளைகள் மூன்றுக்கு மேலும் ஏற்படலாம்.




5.இருதய ரேகையின் இறுதி தாழ்ந்து புத்தி ரேகைக்குச் சமமாய் அமையும். இதனால் புத்திக்கே ஆட்சிப் பலமுண்டாகும். இங்கே புத்திக்குப் பிரதம ஸ்தானம் ஏற்பட்டிருப்பதாய் அறிய வேண்டும். சிலசமயம் இருதயரேகை புத்தி ரேகையோடு பொருந்தி நிற்கும். அப்பொழுது புத்தி பலத்துக்குட்பட்டது. இருதயம் என்பதாகக் குறிக்கும்.

6.இருதய ரேகை புதன் மேட்டில் உற்பத்தியாகி குறுக்கே, பின்னமின்றி நேரே குருமேட்டையுங் கடந்து இறுதி வரை சென்றிருந்தால் இருதய சக்தியின் ஆட்சிக்குட்பட்டவரென்பதைக் குறிக்கும். சுலபத்தில் பொறாமைக்குட்படுவர்.

அவ்விதமே மிகச் சுலபமாய் நேசங் கொள்வர். இச்சைப்பட்டு கிட்டாத பொருளுக்காகச் சங்கடப்படுவார். இத்தகையயோர் இருதய உணர்ச்சிக்குட்பட்டிருப்பதால் புத்திக்கு வேலையில்லை. எனவே ஆராயும் தன்மையிராது.

7.இருதய ரேகை தாழ்ந்து புத்தி ரேகைக்கு அருகில் படிந்து சென்றிருந்தால், அந்த வேளையில் புத்தியின் ஆட்சியைக் காட்டும். இந்தக் காலத்தில் திடஞானமற்று, தன்னலமும் பொறாமையும் அலட்சியப் புத்தியும் குடிகொள்ளும்.

8.இருதய ரேகை உற்பத்தியில் புத்தி ரேகையில் கலந்து பிறகு தனித்து விடுமாயின், சுதந்திரமிழந்து புத்திப் போக்கில் திரும்பிவிடும். இருதய ரேகை தனித்துச் செல்லுங்கால், அந்த வேளையிலிருந்து மேன்மையைக் கொடுக்கும்.

***(தொடரும்)***

# பனர் கட்டுறவர்களுக்கு..

*யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தினரால் அண்மையில் பெரும் எடுப்பில் கண்காட்சி நடத்தப்பட்டது. பலதரப்பட்டவர்களையும் இந்தக் கண்காட்சி கவர்ந்திருந்தது. இதற்கான ஏற்பாடுகளும், முன்அறிவித்தல்களும் சிறப்பான வகையில் செய்யப்பட்டிருந்தது இந்தக் கண்காட்சியின் வெற்றிக்கு ஒரு காரணமாக இருந்தது.*

*இந்த முன்னேற்பாடுகளில் சிலவற்றை பிராந்திய சுகாதார திணைக்களமும் செய்திருந்தது. அதிலே குறிப்பாக மருத்துவக் கண்காட்சி தொடர்பான விளம்பரங்களை சகல இடங்களிலும் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்கள்.*

*யாழ்.மாவட்டத்தின் வைத்தியசாலைகளின் முன்பாக இந்த விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்கள். குறிப்பாக சகல ஆதார வைத்தியசாலைகளிலும் இந்த விளம்பரங்களை காட்சிப்படுத்துவதன் மூலம் பெருமளவான மக்களை உள்ளீர்க்கலாம் என்பது அவர்களது எண்ணம்.*

**ஏன்...**
**எதற்கு...**
**எப்படி?**

*இங்கேதான் அவர்களுக்கு சிக்கலும் வந்தது. வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்கியதைப் போல், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரத்தால் சிக்கல் ஏற்பட்டது.*

*சாவகச்சேரி வைத்தியசாலையில், கட்டப்பட்ட ''பனரின்'' ஒரு பகுதி வடக்கின் நாட்டாமையின் படத்தின் ஒரு பகுதியை மறைத்து விட்டதாம். இந்த விடயத்தை உடனேயே நாட்டாமையின் காதில் யாரோ போட்டு விட்டார்கள்.*

*உடனே நாட்டாமை 'பனர்' கட்டியவர்களுக்கு நல்ல முறையாக குடுத்தாராம். எனது அனுமதியில்லாமல் எப்படிக் கட்ட முடியும் என்று அவர் எகிறிக் குதித்ததில் சகல பனர்களும் கழற்றப்பட்டு விட்டன. தனது படத்துக்காக ஒரு நல்ல விடயத்தை தடுத்த உத்தமர் எங்களின் நாட்டாமை.*

*சரி வீதிக்கு வீதி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடன் இணைந்து தனது படத்தையும் போட்டுள்ளார் நாட்டாமை. அதிலே காகத்தின் எச்சங்கள் அவர் மூக்குக்கு மேலே இருக்கின்றது. இதற்கு என்ன [illegible] போகிறார்? ''உடனே எல்லாக் காகங்களையும் கொல்லுங்கள்'' என்றார்.*

**-நக்கல் நரசிம்மன்.**

# உதயனை விமர்சியுங்கள்

நான் உதயனின் நீண்ட நாள் வாசகி. எட்டுப் பக்கங்களுடன் உதயன் வெளிவரும் காலத்தில் இருந்தே உதயனை வாசித்து வருகின்றேன். இப்போது எனது பிள்ளைகள் உதயனை வாசிக்கிறார்கள்.

பத்திரிகைத் துறையில் யாழ்ப்பாணத்தில் சிறந்த பத்திரிகை எனும் பெயர் பெற்றுள்ள உதயனுக்கு எனது வாழ்த்துக்கள். வாசகர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப பல சுவாரஸ்யமான தகவல்களை உள்ளடக்கிய உதயனில் தற்போது 'சூரியகாந்தி' பகுதி வெளிவந்து கொண்டிருக்கிறது. எனினும் சினிமாத் தகவல்களையும் உதயன் வழங்கினால் வாசகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

செய்திகள், ஏனைய தகவல்கள் அனைத்தும் மக்களுக்கு பயனுடையதாக உள்ளன. எதிர்வரும் காலத்தில் உதயன் பத்திரிகை மேலும் வளர்ச்சியடைந்து தமிழர்களின் பிரச்சினைகளை வெளியுலகுக்கு வெளியிடவேண்டும்.

**க.பாக்கியம்**
**மட்டுவில்.**

★ ★ ★

சிறுவர் கடத்தல், தனிமையில் இருந்த பெண்ணை வன்புணர்வுக்கு உள்ளாக்கிய சம்பவம் என்பவற்றில் சில முஸ்லிம்களுக்கு தொடர்பிருப்பதாகச் செய்திகள் வெளிவந்தது குறிப்பிடத் தக்கது. இந்தச் செய்தியால் யாழ்ப்பாண சமூகமே பெரும் பரபரப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்தச் செய்தியை உதயன் வெளிப்படுத்[illegible] இந்தச் செய்தி வெளி[illegible] இது தனிப்பட்ட ஒரு சிலரால் செய்த தவறு என்றும் முஸ்லிம் சமூகத்தையே சுட்டிக் காட்டக் கூடாதென அரசபினாமிகள் கருத்துத் தெரிவிக்கின்றன. தமிழ் மக்கள் பாதிக்கப்படுவது குறித்து எந்தக் கருத்தையும் துணிந்து வெளியிட தைரியம் இல்லாதவர்களால் இந்தக் கருத்து வெளியிடப்படுகிறது.

தமிழர்கள் மீதான குற்றச்சாட்டுகள் என்றால் போதும் கண்ணை மூடி தமது கருத்துக்களை வெளியிடத் துணிந்து விடுகின்றனர். எனவே துணிவு கொண்டு எந்தச்செய்தியையும் வெளியிட்டு வரும் உதயன் தளராது தனது செயல்பாட்டினை மேலும் ஊக்கப்படுத்தி இவர்களின் கருத்துக்களுக்கு செவி சாய்க்காது தமிழர்களின் விடுதலை பால் செயற்பட வேண்டும் என்று உதயன் வாசகர்களில் ஒருவன் என்ற ரீதியில் கேட்டுக் கொள்கிறேன்.

**அமுதன்**
**கரவெட்டி.**

★ ★ ★

1990 ஆம் ஆண்டில் இருந்து உதயன் வாசகன் என்பதில் பெருமையடைகின்றேன். காலையில் உதயனைப் பார்க்காது விட்டால் எனக்கு ஏதோ காலைச்சாப்பாடு சாப்பிடாத மாதிரி இருக்கும். அந்தளவுக்கு எனக்கும் உதயனுக்கும் இடையில் ஒரு நெருக்கம். அரச பக்கம் நின்று நடுநிலை என்று கூறிக் கொண்டு தமிழ்த் தேசியத்தையே விமர்சித்துக் கருத்துக்களை வெளியிடும் பத்திரிகைகளுடன் ஒப்பிடுமிடத்து உதயன் எவ்வளவோ மேல். மொழி சார்பின்றி, மதசார்பின்றி அரசியல் வேறுபாடின்றி நடுநிலையாகப் பயணிக்கிறது உதயன்.

**எஸ்.அன்ரன்**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு எப்போது விடிவு?

போரின் காரணமாக இலங்கையை விட்டு வெளியேறிய ஈழத் தமிழர்கள் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமது தாய் நாட்டுக்கு திரும்ப முடியாத சூழலில் இருக்கின்றனர். ஏனெனில் தொடர்ந்தும் இலங்கையில் கைதுகள், காணாமல் போதல், கொலைகள் இடம் பெறுவதால் அவர்கள் தாய் நாட்டுக்குத் திரும்ப முடியாத சூழ்நிலையில் இருக்கின்றனர். போர் இடம்பெற்ற காலப்பகுதியில் பல அப்பாவித் தமிழ் மக்கள் சிங்களப் படைகளால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். பலர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். பலர் காணாமல் போயினர். இதனாலேயே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் உயிர்களை பாதுகாப்பதற்காக காணிகளை விற்றும் நகைகளை விற்றும் கடன்பட்டும் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பினர். இதனால் பல தமிழ் இளைஞர்கள் இந்த நாட்டினை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

அங்கே அந்த நாட்டில் இருப்பதற்கான விசா வழங்கப்பட்டவர்கள் போக மீதிப் பேர் களவாக நடமாடி தொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர். விசா மறுக்கப்பட்டவர்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். தமிழ் இளைஞர்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் இன்றும் இலங்கையில் இருப்பதால் இளைஞர்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் இளைஞர்கள் வெளிநாட்டுக்கு போவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கின்றனர் என்றால் இலங்கையில் தமிழ் இளைஞர்களின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்த நிலைமை தொடர்ந்தால் எதிர்காலத்தில் இலங்கையில் தமிழர்கள் இல்லாது போகும் துரதிர்ஷ்டமும் ஏற்படலாம். இலங்கையில் தமிழர்களை இல்லாமல் செய்வதே சிங்களவர்களின் இனத்துவேஷமாக இருக்கின்றது. இதன் காரணமாகவே தமிழர்கள் விடயத்தில் சிங்கள அரசு பாராமுகமாக இருக்கின்றது. எந்த விடயத்திலும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படும் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் போராட்டம் தமிழர்களுக்கு ஒரு விடுதலையை வாங்கிக் கொடுப்பதாக இருந்தது. பல நாடுகள் ஒன்று சேர்ந்து விடுதலைப் புலிகளின் போராட்டத்தினை அழித்ததால் இன்று மீண்டும் தமிழ் மக்கள் சிங்களவர்களின் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இலங்கையில் நிம்மதியாக வாழ முடியாத தமிழ் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று நிம்மதியாக வாழ நினைத்தால் அங்கேயும் அவர்களை வாழ விடாமல் தடுக்க தனது நடவடிக்கைகளை சிங்கள அரசு மேற்கொண்டுள்ளது. இதற்கிடையில் விசா இல்லாமல் வெளிநாடுகளில் இருக்கும் தமிழ் இளைஞர்களை இலங்கைக்கு அந்த நாட்டு அரசு திருப்பி அனுப்புகிறது. இலங்கையில் வாழ முடியாமல் வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்ற தமிழ் இளைஞர்களை மீண்டும் திருப்பி இலங்கைக்கு அனுப்பும் வெளிநாடுகள் ஒரு மனித நேயம் இல்லாத நாடுகளாக இருப்பதுதான் கவலைக்குரிய விடயமாக இருக்கிறது.

உயிரைப் பாதுகாக்க வெளிநாடு சென்ற தமிழ் இளைஞர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் போது சிங்கள அரசினால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் போது விடுதலைப்புலி சந்தேக நபர்கள் என்று தான் இவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டினை சுமத்தி சிறையில் அடைக்கிறது அரசு என்று பிரித்தானியாவில் இயங்கும் ''சித்திரவதைகளில் இருந்து விடுதலை'' என்ற அமைப்பு கூறியுள்ளதாக கார்டியன் அண்மையில் தகவல் வெளியிட்டுள்ளது. அண்மையில் இந்த அமைப்பு பிரித்தானியா எல்லை முகவரக அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள தகவலில் பிரித்தானியாவில் இருந்து இலங்கை சென்ற றொகான் (32 வயது) என்ற தமிழ் இளைஞர் சித்திரவதை செய்யப்பட்டதற்கான சாட்சியங்களை அளித்துள்ளது. மாணவர் விசாவில் பிரித்தானியா சென்றிருந்த றொகான் சுகவீனமுற்ற உறவினரைப் பார்க்க இலங்கை திரும்பிய போது விமான நிலையத்தில் கைது செய்த அதிகாரிகள் மூன்று நாள்கள் தடுத்து வைத்தனர் அப்போது அவர் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று சித்திரவதைகளில் இருந்து விடுதலை அமைப்பு இந்தச் செய்தியை வெளிப்படுத்தியுள்ளது.

மாணவனுக்கே இந்த நிலை என்றால் மற்றவர்களுக்கு என்ன நிலைமை என்று சொல்லவா வேண்டும். இப்படியாக பல சம்பவங்கள் திரைமறைவில் அரங்கேற்றப்பட்டு வருகிறது. அது வெளிச்சத்துக்கு வராதபடி பார்த்துக்கொள்ளப்படுகிறது. இதற்கிடையில் கடந்த வியாழக்கிழமை பிரிட்டனில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட 36 இலங்கையர்கள் வெள்ளிக்கிழமை காலை கொழும்பு வந்தடைந்தனர். இவர்களிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வாக்கு மூலங்களை பதிவு செய்தனர். திருப்பி அனுப்பப்பட்டவர்களில் 21 தமிழர்கள், 8 சிங்களவர்கள், 6 முஸ்லிம்கள் அடங்குகின்றனர். இவர்கள் திருப்பி அனுப்பப்படுவதை அறிந்த சித்திரவதைகளில் இருந்து விடுதலை அமைப்பு பிரித்தானிய அரசு இலங்கைக்கு தமிழர்களை திருப்பி அனுப்பக் கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளது.

80 பேர் வரையிலான இலங்கையர்கள் கடந்த வியாழன் பிற்பகல் திருப்பி அனுப்பபடவிருந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் அரைவாசிப் பேரினை திருப்பி அனுப்புவது நீதிமன்றத் தலையீட்டினால் இறுதி நேரத்தில் நிறுத்தப்பட்டது. இவர்களில் அநேகமானவர் தமிழர். இலங்கை மனித உரிமைகள் தொடர்பான கவலையளிக்கும் பதிவுகள் குறித்து கடும் கவலை கொண்டிருந்ததால் பிரித்தானிய நீதிபதிகள் தமது மனதை மாற்றிக் கொண்டதாகவும். அத்துடன் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவோர் இலங்கையில் சிங்கள அரசால் கைதுகள் சித்திரவதைக்கு உள்ளாகும் அபாயம் இருப்பது தொடர்பான கவலைகளையும் பிரித்தானிய நீதிபதிகள் மனதில் கொண்டதில் அவர்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டதாகத் தென்படுவதாக குடிவரவுத்துறை சட்டத்தரணிகள் கூறியுள்ளனர்.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகமானது தனது அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. அத்துடன் இவ்வாறான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட சிங்களப் படையினர் மீது நடவடிக்கை எடுக்காதிருப்பதால் போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் முடிவடைந்த நிலையிலும் கூட பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற பெயரில் தொடர்ந்தும் தமிழர்கள் மீதான சித்திரவதைகளில் சிங்கள அரசு ஈடுபட்டு வருவதாக மனித உரிமை அமைப்புகள் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்ததிலிருந்து கடத்தல், சித்திரவதைகள், காணாமல் போதல் குறையவில்லை என்றும் வெளியுலகுத் தொடர்புகள் ஏதுமின்றி பல நூற்றுக் கணக்கானோர் சட்டத்துக்கு முரணான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் ஜெனிவாவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் அனைத்துலக மன்னிப்புச் சபையானது தெரிவித்துள்ளது. இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படாதவிடத்து இலகுவில் இவ்வாறான குற்றவியல் சம்பவங்களில் ஈடுபடுவதுடன் எந்தவொரு தண்டனைகளில் இருந்தும் தப்பித்துக்கொள்ள முடியும் என்பதையே இந்தச் செய்தி தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

■ பித்தன்

# அது அந்தக் காலம்

**60** களின் முற்பகுதி. ''றலிச் சைக்கிள்'' அறிமுகமான காலம். அப்போதெல்லாம் ஆண்கள் மட்டுமே சைக்கிள் ஓட்டும் உரிமையை ஏகபோகமாகப் பெற்றிருந்தனர். இப்போது போலப் பெண்கள் சைக்கிளைச் செலுத்தவோ அல்லது அவர்களுக்கென்று பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட 'லேடிஸ்' சைக்கிள்களை வாங்கவோ அனுமதியில்லை. இதைவிடக் கொடுமை என்னவென்றால் கணவன் சைக்கிளைச் செலுத்தினால்கூட மனைவி அந்தச் சைக்கிளில் உட்கார்ந்து செல்லவும் தடை. வீட்டு முன்விறாந்தையில் எண்ணெயில் குளித்தபடி பளபளக்கும் சைக்கிளை ஆசையோடு பார்த்து ''இதில் கணவரோடு பயணிக்கும் நாள் எப்போது வரும்?'' என்று அந்தக் காலப்பெண்கள் பெருமூச்சு விட்டுக் கொள்வார்கள். ஆனால் தியாகரின் மனைவி இதில் கொஞ்சம் மாறுபட்டவர். எப்படியும் தியாகரோடு சைக்கிள் சவாரி செய்தே தீருவது என்று ஒற்றைக்காலில் நின்றார். வெளியே - ஊராருக்கு- மனைவியை தியாகர் சைக்கிளில் ஏற்றும் விடயம் தெரியவந்தால் அவ்வளவுதான். ஊரா? மனைவியின் ஆசையா? என்று பட்டிமன்றமும் வைத்து கடைசியில் மனைவி பக்கம் தியாகர் மனம் சாய்ந்தது.

ஊரின் மைனர் பொன்னுத்துரை தன் சகபாடிகளோடு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ரவுணுக்கு 'செக்கன்ட் ஷோ' பார்த்து விட்டு, இடையில் எங்காவது வயிற்றுக்கு ஊற்றிக் கொண்டு மப்பும் மந்தாரமுமாக வருவது வழக்கம். மற்ற நாள்களில் இரவு பத்து மணி வரை பொன்னுத்துரையர் தன் அள்ளக்கைகளோடு ஊரின் எல்லா ஒழுங்கைகளிலும் கிராம உலா செய்து கொண்டிருப்பார். அந்த நேரம் மனைவியை ஏற்றினால் மாட்டுப்படுவது உறுதி என்பது தியாகருக்குத் தெரியும். அதனால் ஒரு ஞாயிற்றுக்கிழமை- பொன்னுத்துரையர் படம்பார்க்கப் போன ஒரு நாளில்- மனைவியின் ஆசைக்கு இசைந்து, புதிய 'றலிச்' சைக்கிளின் 'பாரில்' அவரை ஏற்றிக் கொண்டு, ''சவாரி போகலாம் சலோ சலோ'' என்ற பாடலை சீழ்க்காய் ஒலியாக பரவ விட்டபடி ஒரு மம்மலில் புறப்பட்டார் தியாகர். அவர் புத்திசாலித்தனமாக இன்னொரு வேலையையும் செய்தார். தனது மனைவியின் தலைமுடியை மறைத்து ஒரு தலைப்பாகை கட்டினார். இதனால் பார்ப்பவர்களின் கண்ணுக்கு முன்னால் இருப்பது ஒரு ஆண் என்றே தோன்றும்.

## கோணல் கோலங்கள்

இப்படியெல்லாம் முன்னேற்பாடுகள் செய்தும் காலம் தியாகரின் காலை வாரியது. அன்றைக்கு 'செக்கன்ட் ஷோ' நடைபெறாததால் வழமையை விட வேளைக்கு வந்த பொன்னுத்துரையர் அன்ட் அள்ளக்கைகளின் கண்களில் தியாகரும் மனைவியும் எத்துப்பட்டு விட்டனர். ஆனால் இருள் காரணமாக யார் யாரை ஏற்றிச் செல்வது என்று தெரியவில்லை. இருந்தபோதும் யாரோ ஒருவர் சேலை கட்டிய ஒருவரை தலைப்பாகையோடு சைக்கிளில் கொண்டு செல்வது மட்டும் அவர்களுக்குப் புரிந்தது. யார் என்று அறிய தியாகரை பின்தொடரத் தொடங்கினார்கள். தியாகருக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு விட்டது. மாட்டுப்பட்டால் அவ்வளவுதான். மானமே போய்விடும். வருவது வரட்டும் என்ற நினைப்பில் சைக்கிளின் வேகத்தை அதிகரித்து ஏதோ ஒரு திசையில் விரைந்தார். பொன்னுத்துரையர் குறூப்பும் விடுவதாயில்லை. ஓடிய வேகத்தில் தியாகர் சுடலையடிக்கு வந்து விட்டார். இனிஓட இடமில்லை. வந்த வேகத்தில் ஒரு நாயுருவி பற்றைக்குள் தியாகரும் மனைவியும் சைக்கிளோடு மல்லாக்க விழுந்தனர். பின்னால் வந்த பொன்னுத்துரையர் குறூப் இதனைக் காணவில்லை.

**ஓடுகாலி**

திடீரென இருவரும் மறைந்து போனதும் அந்த இடம் சுடலையாக இருந்ததும் பொன்னுத்துரையருக்கும் சகபாடிகளுக்கும் ஏதோ ஒரு மாதிரி இருந்தது. பலமாகக் குளிரேறி உடல் நடுங்கத் தொடங்கியது. அப்படியே தமது சைக்கிள்களைத் திருப்பி விட்டார்கள். தியாகரும் மனைவியும் ஒருவாறு வீடு வந்துவிட்டனர். அடுத்த மூன்று நாள்கள் பொன்னுத்துரையருக்கும் அள்ளக்கைகளுக்கும் குளிர்காய்ச்சலும் நடுக்கமும். ''ஞாயிற்றுக்கிழமை பொன்னுத்துரையை இரட்டைப் பேய் ஏமாத்தி சுடலைக்குக்கொண்டு போனதாலதான் உந்த ஏக்கக் காய்ச்சல்.'' என்று ஊர்ச்சனம் கதைக்க, தியாகரும் மனைவியும் நமக்குள் சிரித்துக் கொண்டனர்.

* * *

இது அந்தக் காலம். கட்டிய மனைவியையே சைக்கிளில் கொண்டு செல்ல பயந்து நடுங்கிய காலம். இப்போது நிலைமை அப்படி அல்ல. அன்றொரு நாள் ஒரு மினிபஸ் பயணத்தில் இளம்ஜோடி ஒன்று அத்தனைபேரும் பார்த்துக் கொண்டிருக்க, நான்கு சுவர்களுக்குள் நிகழ்த்த வேண்டிய விடயங்களை பகிரங்கமாக படம் காட்டிக் கொண்டிருந்தனர். இத்தனைக்கும் அவர்கள் இருவரும் சென்றது ஓர் ஆலயத்திருவிழாவுக்கு கூடவே பக்கத்தில் நின்றிருந்த காதலியின் நண்பிகள் இந்த நிகழ்வுகளுக்கு கைதட்டி, கருத்துக்கள் ஊட்டி, இடையிடையே சோடாவும் கொடுத்து அனுசரணை வழங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பக்கத்தில் இருந்த பயணிகள் கண்ணுக்குத் தெரியவேயில்லை.

அத்தோடு காதலர்களின் நெருக்கத்தை தமது கைபேசிகளில் பதிவு செய்து அதைகாட்டிக் காட்டி இன்னும் இன்புற்றார்கள் தோழிகள். இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நண்பர் 'சீற்றை' கட்டிப்பிடிப்பதை தவிர வேறு வழியிருக்கவில்லை என்று வயிறு எரிந்து சொல்லிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahanham.org